
# உயிர்நிழல்



*Uyirnizhal* VOL: III - NO 1 - ISSUE 11 JANUARY - FEBRUARY 2000 Published by Exil

# வேர்

**நா. விச்வநாதன்**



என் வேர்கள் அங்கேதான் -
துளிர்விட்டு மரமாகி
நிழல் கொடுக்கும் காலம்
வெகு கிட்டத்தில்தான் -
லேசான மன வருத்தம்
எப்போதாவது
தோன்றத்தான் செய்கிறது -
ஏராளமானவற்றை
இழந்தோமென
ஏக்கம் இருக்கத்தான்
செய்கிறது -
தொலைத்தது ஏதுமில்லை
எனும்
சிநேகக்குரல் வரும்
கடலலையின் ஈரம் தடவி -
'வாழ்வுரிமைக்கான போர்
பன்முகம் கொண்டது
எந்தமுகம் உன் முகமென
புரிந்துகொள்'
வேரைப் பதித்த இடம்
பறிபோகாது
தூரம் தொலைவிலில்லை.
பார்க்க முடிகிறது
மலைகள் தாண்டி -
கேட்கமுடிகிறது
எல்லைகள் தாண்டி -
உணரவும் முடிகிறது
யுத்தத்துக்கு நடுவே
என் தோழர்களுக்கும்
நடுவே நானும் என -

●


உயிர்நிழல்

Uyirnizhal 11

**Vol. III N°.1 ISSUE 11**
**JANUARY- FEBRUARY 2000**

**தொகுப்பாசிரியர்கள்:**
லக்ஷ்மி
கிருஷ்ணராஜா
கலைச்செல்வன்

முன் அட்டை: கனவின் எச்சங்களிலிருந்து....
வெட்டி+ ஒட்டி+ வரைந்து ஓவியமென்றாக்கியது
கிருஷ்ணராஜா

அன்பளிப்பு:
பிரதி ஒன்று - 15FF, வருட சந்தா - 100FF
(6 பிரதிகள், தபாற் செலவு உட்பட)
இலங்கை, இந்தியா -இலவசம்

காசோலைகள் அனுப்பவேண்டிய
வங்கியும், இலக்கமும்:
CREDIT LYONNAIS
CODE BANQUE 30002
COMPTE 554/6788M/21
ASSOCIATION EXIL



தொடர்புகளுக்கு:
EXIL, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, France
e-mail: EXILFR@aol.com



N° d'enregistrement de l'association : 13023204

**வெளியீடு: எக்ஸில்**



**ரோசா லுக்சம்பேர்க் நினைவுநாளில் பெர்லின்**

*தமிழரசன் / பரா*

*முதலாளியச் சீரழிவுக்கு
மாற்று மருத்துவமாய்
சோசலிசச் சிந்தனை மட்டுமே
சரியான அடிப்படையில்
தீர்வுகளை முன்வைக்கிறது.*

**4**




வேர் — நா. விச்வநாதன்.............................02
பதிவுகள், சுயநலப் போலிகள் — அக்கரை மாணிக்கவாசகம்............10
அசதி — விமல் குழந்தைவேலு.....................11
முட்டை — சித்தார்த்த சே குவேரா...................15
ஐயாண்டுக்கு ஒரு முறை மை பூச்சு — மாரிமுத்து யோகராஜன்................18
இந்திய அவைதீக மரபும் பின்னைநவீனத்துவமும் — வே.மு. பொதியவெற்பன்................22
அருகிருத்தல் என்பது.... — இளைய அப்துல்லாஹ்..................26
கொம்புளானா — அ. முத்துலிங்கம்..........................27
சூனியக்காரியுடனான கவிஞனின் காதல் — றஷ்மி.............................................31
இருண்ட கண்டத்தினுள் தொடரும்
இரு இனங்களுக்கிடையிலான மோதல்கள் — தி. உமாகாந்தன்............................35
போர்க்கேலி — சோலைக்கிளி................................38
ஒரு ஜனனத்தின் அஸ்தமனம்.............................................................................................39
கவிதைகள்: — நீர்கொழும்பூர் முத்துலிங்கம்..........39
வெளி-வாசல் — காமன் வசந்தன் குளிர்நாடன்........40
பிணவுலா — ஜீவதர்ஷி.................................41
ஒரு பீனிக்ஸ் பறவையின் புகல்வாழ் குறிப்புகள் — இளையவி சின்னவன்.................42
ஐந்தும் ஆறும் — மா. கி. கிறிஸ்ரியன்......................45
பிய்ந்தெழும் துயர்க்கீதம் — ஆரையம்பதி த. மலர்ச்செல்வன்....47
புதிய பாதை புதிய அணுகுமுறை — சிவலிங்கம்................................48
மனுஷி — திருமாவளவன்...........................55
கூத்துக்கலைஞன் கிறெகரி தங்கராசா..............................................................................60
நேநோவை முன்வைத்து
நான்லீனியரும் சாருநிவேதிதாவும் — ரமேஷ் பிரேதன்......................... 61
நிழல்கள்..........................................................................................................................67




**அம்மா மணம்** **19**

*வசந்தி — ராஜா*

குளிக்க வார்க்கையில்,
எண்ணை பூசி
என் உடம்பை
மசாஜ் பண்ணுகையில்,
உடுப்பு மாற்றுகையில்
இப்படி
அம்மா என்னையே
எப்போதும்
தொட்டுக்கொண்டிருக்க
வேணும் போலை இருக்கும்.

**நட்சத்திரன் செவ்விந்தியனின் 'எப்போதாவது ஒரு நாள்'**

*அருந்ததி*

**16**

இன்றைய ஈழப்போர்
எம்மிடையேயும்
பிரகடனப்படுத்தப்படாத
ஓர் 'படைப்பு இயக்கம்'
உள்ளியங்கும் முறைமைபற்றிய
வெளிப்படையானதோர்
ஆய்வுகுறித்து
சிந்திக்கத் தூண்டுகிறது.



# ரோசா லுக்சம்பேர்க் நினைவுநாளில் பேர்லின்



தமிழரசன்/பரா

சோசலிசமாய் கருதப்பட்ட கிழக்குநாடுகளின் வீழ்ச்சி அது ஏற்படுத்திய அரசியல் சித்தாந்த அதிர்வுகள், இதை அடுத்து வெளிப்பட்ட சமூக இயக்கத்தின் போக்கோடு ஒட்டாத தத்துவ வகைப்படாத மூன்றாவது வழி, நடுவழி, புதுவழி தேடியவர்களின் வர்க்கம் கடந்த அரசியல் இன்று சக்தியற்றதாகிவிட்டது. ஸ்டாலினிசப் பொட்டுக் கேடுகளைப் பயன்படுத்திக்கொண்டு மார்க்சியத்திற்கு எதிர்க்கடை விரித்தவர்கள் உலக ரீதியாகப் பெருகும் மனித நெருக்கடிகள், பொருளாதார வாழ்வின் மீளமுடியாத தொல்லைகள், உழைக்கும் மக்கள் மீதான புதிய புதிய நெருக்குவாரங்கள் முன்பு மாற்றுத்தெரியாமல் கதிகலங்கி நிற்கிறார்கள். இதிலிருந்து தப்பிப் பிழைக்க ஒரே ஒரு மார்க்கமாக 'மார்க்சியத்தின் கதை காரியம் முடிந்துவிட்டது' என்ற பத்து வருசப் பழசான முதலாளியத்தின் பிரசங்கங்களை திரும்பத் திரும்ப நிகழ்த்துகிறார்கள். மறுபுறம் கிழக்கு ஐரோப்பாவில் இடதுசாரி இயக்கங்கள் மற்றைய சமூகசக்திகளை பின்தள்ளிவிட்டு முன்னே வருகின்றன. இவை கொச்சையான மார்க்சியப் போக்கிலும் பாராளுமன்றவாதத்தைச் சார்ந்து வெளிப்பட்ட போதிலும் மார்க்சியம் தன்னை நிறுவும் போராட்டத்தை இவற்றினூடு தொடங்கி இருப்பதைக் காணமுடியும். முதலாளியச் சீரழிவுகட்கு மாற்று மருத்துவமாய் சோசலிசச் சிந்தனை மட்டுமே சரியான அடிப்படையில் தீர்வுகளை முன்வைக்கிறது. அதன் பழையவாழ்வின் படிப்பினைகள் மீண்டும் மீண்டும் பரிசோதிக்கப்படுகின்றன. கிழக்கு ஜெர்மனியின் பழைய கொம்யூனிஸ்ட் கட்சியான PDS ஜெர்மனியின் பிரதான கட்சிகளான CDU, SPD இவைகளை கிழக்கில் பின்னே தள்ளிவிட்டு குட்டிக் கட்சிகளான FDP, பசுமைக்கட்சி இவைகளை சிதறடித்துக்கொண்டு கடந்த தேரதல்களில் முன்னே வந்துள்ளது.




"போராடுபவர்கள் தோற்கடிக்கப்படலாம்; போராடாதவர்கள் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள்" -பெர்டோல்ட் பிரெ்ஃற் இவ்வாசகத்தைத் தாங்கிச் செல்லும் ஊர்வலத்தினர் *(புகைப்படம்: பரா)*



இந்தச் சர்வதேச நிலைமைகளில் 09.01.2000இல் ரோசா லுக்சம்பேர்க், கார்ல் லீப்னெக்ட், லியோ ஜோகிர்ஸ் மற்றும் ஆயிரக்கணக்கான ஸ்பார்ட்டாகோஸ் (spartakus) புரட்சியாளர்களின் 81வது வருட நினைவுதினம், ரோசா லுக்சம்பேர்க் 1918ம் வருட நவம்பர் புரட்சியின் சிவப்பு வருடங்கட்கு உரியவர். ஸ்பார்ட்டகோஸ் தொழிலாளர் எழுச்சியின் தலைமைச்சக்தி, அரசியல் சித்தாந்த வழிகாட்டி. முதலாம் உலகயுத்தம் முன்பாகவே ஜெர்மனிய மூலதனத்தின் இராணுவவாதத்தை பாசிசத்தின் வளர்ச்சியை SPDயின் பாசிசப் போக்குடனான வர்க்க ஒத்துழைப்பை அரசியல் காட்டிக்கொடுப்பை மீண்டும் மீண்டும் உழைக்கும் மக்கள் முன்பு கொண்டு வந்தவர். ரோசா லுக்சம்பேர்க் மார்க்சியத்தின் சிறந்த போராளி. ஸ்டாலினிசக் கட்சி அதிகாரம் தோன்றுவதற்கு முன்பாகவே கட்சியமைப்பில் அதிகாரத்துவ வடிவங்கள் தோன்றவும் தொழி



லாளர்கள் மேலான ஆட்சியாய் நிடிக்கும் போக்குகள் தோன்றும் சாத்தியத்தை பரிசீலித்தவர். லெனினுக்கு முன்பாகவே கட்சியின் ஜனநாயகம் மத்தியத்துவம் பற்றிப் பேசியவர். 1905இலேயே தொழிலாளர்களுடன் விவசாயிகளை புரட்சியில் அணிகட்டுவதுபற்றி ஆலோசனை சொன்னவர். ரோசா லுக்சம்பேர்க் மார்க்சியத்தை வளர்த்தவர்; விசாலப்படுத்தியவர். அவரைப் பாசிசவாதிகளும் புரட்சி விரோதிகளும் உயிரோடு புதைக்கப்படவேண்டிய ஆபத்தான புரட்சிக்காரியாய் பிரகடனப்படுத்தியபோது லெனினாலும் ரொட்ஸ்கியாலும் உலகத்தொழிலாள வர்க்கத்தின் தலைவராக மதிக்கப்பட்டபோது பின்னே வந்த ஸ்டாலினிசம் ரோசா லுக்சம்பேர்க்கின் சிந்தனையை 'போலந்து வகைப்பட்ட ரொட்ஸ்கியம்' என்று ஒதுக்கியது. 1918-1919 நவம்பர் தொழிலாள எழுச்சி SPDயின் தந்தையர் நாட்டு ஆதரவு என்ற யுத்த ஆதரவுக் கொள்கையாலும் பாசிஸ்டுகளுடனான கூட்டாலும் தோல்வியடைந்தது. ஜெர்மனியத் தொழிலாள வர்க்கத்தின் மிகச்சிறந்த நபர்கள் மேலான மனிதப்பழிகளை SPD மற்றும் பாசிச இராணுவ வெறியர்கள் தேர்ந்தெடுத்தனர். ரோசா லுக்சம்பேர்க், கார்ல் லீப்னெக்ட் இருவரும் 1919 ஜனவரி 15ம் நாள் இரவு 11.45மணிக்கு பெர்லினில் கொல்லப்பட்டனர். சோவியத் ஒக்டோபர் புரட்சியின் சுவாலையாய் உலகப்புரட்சியின் ஒத்திகையாய் எழுந்த ஜெர்மன் புரட்சியின் தொழிலாளர் கலகத்தின் ஆன்மாவாய் விளங்கிய ரோசா லுக்சம்பேர்க் தான் பிறக்காத மண்ணில் நடந்த மனித எழுச்சிக்குத் தலைமை தாங்கி வடிவம் தந்தவர். அதன்மூலம் உலக மனிதத்தின் இலட்சியத்துக்காக மார்க்சியத்தின் உலகளாவிய தன்மையின் நிருபணத்துக்காக அவர் விழ்ந்தார்.

முக்கியமாய் பெர்லினிலும் மற்றும் ஜெர்மனியின் முக்கிய நகரங்களிலும் ரோசா லுக்சம்பேர்க், கார்ல் லீப்னெக்ட் நினைவுநாள் நிகழ்ச்சிகள் முதலில் 09.01.2000இல் திட்டமிட்டப்பட்டு பின்பு 15.01.2000இலேயே நடைபெற்றன. கடந்த வருட நினைவுநாள் மற்றும் ஊர்வல நிகழ்ச்சிகளில் 100000க்கு மேல் மக்கள் கலந்து கொண்டனர். இதைக்கண்டு பெர்லினின் CDU ஆளும் கும்பல் உண்மையில் அதிர்ச்சியடைந்து இருந்தது. இது கிழக்கு ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள தற்காலிகமான சமூகநெருக்கடியின் அடையாள எதிர்ப்பே தவிர கொம்யூனிச ஆதரவு அல்ல என்றும் பெர்லின் தலைநகரான நிலையில் இப்படியான ஊர்வலங்களை தொடர்ந்தும் அனுமதிப்பது நகரின் இயக்கத்துக்கும் மக்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுகிறது என்று பல்வேறு வடிவங்களில் கடந்த வருடமே வார்த்தைகளில் அவர்கள் அரசியல் சதிகள் பின்னத் தொடங்கியிருந்தனர். CDU கிழக்கின் கடந்த வருடத் தேர்தலில் வாங்கிய அடி, சமூகப்பிரச்சினைகளின் வளர்ச்சி, நாசிகளின் வளர்ச்சி என்பவற்றோடு 2000ஆண்டு என்பதால் ரோசா லுக்சம்பேர்க் நினைவுநாள் ஊர்வல நிகழ்ச்சிகள் விரியத்தோடு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. PDS உட்பட முக்கிய இடதுசாரி அமைப்புக்களான KPD, DKP என்பவற்றோடு தொழிற்சங்கங்கள், மாணவர் இளைஞர் அமைப்புகள், வெளிநாட்டு விடுதலை இயக்கங்கள், யுத்தஎதிர்ப்பு ஊர்வலங்கள் போன்ற 30க்கும் மேற்பட்ட அமைப்புகள் நினைவுநாள் ஊர்வல நிகழ்ச்சிகட்கு இணைந்து அழைப்பு விட்டிருந்தன. ஜனவரி- 8இல் DKP பேர்லின் weissenseer-weg- 51-52இல் லெனின்-லீப்னெக்ட்-லுக்சம்பேர்க் சந்திப்பை(Lenin-Liebknecht-Luxemberg-Treffen) நடாத்தியது. அதேதினம் மாலை பெர்லினின் இடதுசாரிகளின் செல்வாக்குப் பிரதேசமான கும்போல்ட் பல்கலைக்கழகத்தில் (Humbold Universität) இடதுசாரிப் பத்திரிகையான Junge Welt கியூப நட்புறவு அமைப்பான Cuba si இரண்டும் இணைந்து ரோசா லுக்சம்பேர்க் மகாநாட்டை (Rosa Luxemberg - Konferenz) நடாத்தின. இதில் கியூபத் தொழிற்சங்கமான CTCயின் தலைவர் Leonal-Gonzales, கொலம்பியாவின் பெரும் இடதுசாரி, கொரில்லா இயக்கமான FARCயைச் சேர்ந்த Alberto Martinez, பிராக் நகரக் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் Miloslav Ransdorf, PDS சேர்ந்த Thomas Ebermann ஓட்டோனோமன்கள் சார்பில் Ibanndiage Diadji, VW தொழிற்சங்கம் சார்பில் Uwe Fritsch உட்பட பல இடதுசாரிகள் பங்கேற்றனர்.



09.01.2000 தடையை மீறிச்செல்லும் ஊர்வலம், சேயின் கொடியுடன். (புகைப்படம்: பரா)


09.01.2000 அன்று, 1919இல் ரோசா லுக்சம்பேர்க்கின் மரண ஊர்வலம் தொடங்கிய இடமான பெர்லின் Frankfurter torஇல் இருந்து ஊர்வலம் தொடங்கி அவரின் உடல் புதைக்கப்பட்டு நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டுள்ள இடமான சோசலிஸ்டுகளின் நினைவிடத்தில் (Die Gedenkstätte der Sozialisten) நடைபெறும் நினைவுநாள் நிகழ்ச்சிகளோடு இணையத் திட்ட

மிட்டு இருந்தது. இதற்கு அனுமதி வழங்கல் பொலிஸ் மற்றும் உள்துறைச் செனட்டராலும் கடைசிநேரம்வரை இழுத்தடிக்கப்படுவது சந்தேகத்தை ஊட்டியது. ஜெர்மனியின் மிகப்பெரும் மக்கள் கூடும் அரசியல் நிகழ்ச்சியை நீண்ட காலம் பெர்லின் CDU கும்பலும் அதன் வழிகாட்டியுமான Diepgen சகித்துக்கொள்ளமாட்டார்கள் என்று எதிர்பார்க்கக் கூடியதே. அதை நிரூபிப்பதுபோல் அசுமாத்தங்கள் பல தென்பட்டன. திடீரென ரோசா லுக்சம்பேர்க்கின் நினைவுநாளுக்கு மூன்று தினங்களுக்கு முன்பாக Olaf Jürgen Staps என்பவன் 09.01.2000இல் நடைபெறவுள்ள ரோசா லுக்ஸம்பேர்க் ஊர்வலம் நினைவுநாள் நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்கள்மீது கைக்குண்டு வீசி இயந்திரத்துப்பாக்கியால் தாக்கவுள்ளதாய் பயமுறுத்தி கடிதம் எழுதியுள்ளதாய் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தனர். முதலாளியப் பத்திரிகைகட்கு இந்தச் செய்தி போதுமானதாயிருந்தது. அவை ரோசா லுக்சம்பேர்க் நினைவு நிகழ்ச்சியில் நடைபெறவுள்ள பயங்கரவாதம்பற்றி, இரத்தக்களரிபற்றி பிரச்சாரச் சண்டமாருதத்தில் இறங்கின. இடதுசாரிப் பத்திரிகைகள் தவிர CDU கும்பல் + பொலிஸ் + பத்திரிகைகள் இணைந்த திட்டமிடப்பட்ட கூட்டு நடவடிக்கைகள் பிரச்சாரம் நடைபெற்றது. ஊர்வலம் மற்றும் நினைவிட நிகழ்ச்சி இவைகளில் பயங்கரவாதம் நடைபெறவேண்டும் என்று இவை உண்மையில் மானசீகமாக ஆசைப்பட்டவை போல் வெளிப்படையாகவே தென்பட்டன. CDUவின் பெர்லின் உள்நாட்டு செனட்டர் werthbach பெர்லின் நகரத் தந்தையாக உள்ள Diepgen இருவரும் தம் பெரும்பான்மைபற்றி அடிக்கடி வாய்ச்சொல் நாட்டியம் ஆடுபவர்கள். ஆனால் கடந்த தேர்தலில் இவர்களின் CDU மொத்தமாக வாக்களிக்கத் தகுதியுடையவர்களின் தொகையில் 27% வாக்குகளை மட்டுமே பெற்றது. மற்றைய பிரதான கட்சியான SPD 13% வாக்குகளையும் பெற்றது. இக்கட்சிகள் இரண்டும் இணைந்தே தற்போது பெர்லினில் அதிகாரத்தில் உள்ளன.



15.01.2000 ரோசா லுக்சம்பேர்க் -கார்ல் லிப்னெக்ட் நினைவுதின ஊர்வலம்
*(புகைப்படம்: மூர்த்தி)*

உள்நாட்டு செனட்டராக உள்ள werthbach(முன்பு உளவுத்துறையில் இருந்தவன்) பொலிஸ் தலைவரான Saberchinsky இருவரும் Olaf Jürgen Stapsஇன் பயமுறுத்தல் அலட்சியப்படுத்தக்கூடியது அல்ல. ரோசா லுக்சம்பேர்க் நினைவுதின ஊர்வலம் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களின் உடல் மற்றும் உயிர் பாதுகாப்புக்கு நாமே பொறுப்பு ஏற்கவேண்டி வரும் என்று சொற்சாகசங்களில் இறங்கினர். பயமுறுத்தல் விட்டவனை தேடிக் கண்டுபிடிக்கும் செயலுக்குப் பதில், நிகழ்ச்சிகளை தடை செய்யும் தந்திரங்களில் இறங்கும் அதே சமயம், பத்திரிகைகள் மூலம் தமக்கு சாத்தியமான மக்கள் மனோவியலைத் தயாரித்தனர். தாக்குதல் பற்றிய சாதாரன பயமுறுத்தலை, ஒரு தனிமனிதனின் புரளியை, சர்வமயப்படுத்தி ஒரு பாதுகாப்பற்ற தம்மால்கூட கட்டுப்படுத்தமுடியாத சக்தியாய் உருப்பெருக்கிக் காட்டினர். நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் மக்கள்மேல் நிச்சயமற்ற தன்மையையும் ஆயுதப் பயங்கரவாதம் பற்றிய பீதியையும் உருவாக்குவதன்மூலம் நிகழ்ச்சியைக் குலைத்துவிடவும் தடைசெய்யச் சாதகமான நிலையையும் உருவாக்க முனைந்தனர். ரோசா லுக்சம்பேர்க் நினைவுநாள் நிகழ்ச்சி 2000 ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள மீண்டும் தலைநகராக ஆகியுள்ள பெர்லினின் அதன் மக்களின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் இடையூறு செய்யத்தக்கதாக உருவகித்துவிட முயன்றனர். இடதுசாரிகட்கு ஆயுதரீதியாக விடப்படும் பயமுறுத்தல் பிரசித்தப்படுவது புதிய நாசிகட்கும் பாசிசக் குழுக்களுக்கும் கொடுக்கப்படும் மறைமுகமான ஊக்கமுமாய் அமைந்தது.



9ம் திகதி நினைவு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கையில் 8ம் திகதி பிற்பகலில் கடைசிநேரத்தில் ரோசா லுக்சம்பேர்க் நினைவுதின ஊர்வலம் மற்றும் நினைவிட நிகழ்ச்சிகள் Olaf Jürgen Stapsஇன் ஆயுதத் தாக்குதல் பயமுறுத்தலை சாத்தியமான ஒன்றாய் கருதுவதால் தடை செய்யப்படுவதாய் பொலிஸ் அறிவித்தது. கடைசிநேரத்தில் தடையைப் பிறப்பித்தமையின்மூலம் இடதுசாரிகள் மாற்று ஒழுங்குகளைச் செய்யவுள்ள வாய்ப்புகளைக் குறுக்கிவிடவும் பிழைகளை உண்டாக்கவும் முயற்சிக்கும் சதி ஒளித்திருந்தது. பெர்லினில் பல உதைபந்தாட்ட நிகழ்ச்சிகள் முதல் பாராளுமன்றக் கூட்டம்வரை குண்டுத்தாக்குதல் மற்றும் பயங்கரவாதத் தாக்குதல் பயம் காட்டப்பட்டுள்ளது. பயமுறுத்தல்கள் விடப்பட்டுள்ளது. கடந்தவருடம்

பெர்லினில் ஒரு மில்லியன் பேர் பங்குகொண்ட Love Parade நிகழ்ச்சிக்கு முன்பாகவும் பத்திரிகைச் செய்திகளின்படி ஒரு டசினுக்கும் மேற்பட்ட குண்டுத்தாக்குதல் பயமுறுத்தல்கள் விடப் பட்டன. இவை காரணமாக இந்த நிகழ்ச்சிகள் ஒருபோதும் தடைசெய்யப்பட்டது கிடையாது. மாறாக எச்சரிக்கை நிறைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. பொலிஸ் பாதுகாப்பும் கண்காணிப்பும் பலப்படுத்தப்பட்டு நிகழ்ச்சிகளின் பாதுகாப்பு நிச்சயப்படுத்தப் பட்டது. இங்கு ரோசா லுக்சம்பேர்க்கின் நினைவுநாள் நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் யாவும் தலைகீழ் ஆயின. 100000 கலக்கும் ஒரு மாபெரும் அரசியல் நிகழ்ச்சி ஒரு தனிமனிதனின் பயமுறுத்தலுக்காக தடைசெய்யப்படும் விசித்திரம் நடந்தேறியது.



நிகழ்ச்சிகள் தடை செய்யப்பட்டதும் PDS ரோசா லுக்சம்பேர்க் நினைவுதின நிகழ்ச்சிகளில் இருந்து வெற்றிகரமாய் பின்வாங்கிக் கொண்டது. அது தன் கட்சி உறுப்பினர்களையும் ஆதர வாளர்களையும் வீடுகளில் இருக்கும்படி கோரிக்கை விட்டது. மறுபுறம் வானொலியும் பத்திரி கைகளும் நிகழ்ச்சிகள் தடைசெய்யப்பட்டுள்ளன என்றன. «Tod des Kommunismemus» - கொம்யூனிசம் செத்துவிட்டது என்று முதலாளிய செய்தித் தொடர்பு சாதனங்கள் கூடிக் குதூ கலித்த காலங்கள் எப்போதோ கடந்துவிட்டபடியால் வளர்ந்துவரும் இடதுசாரிகளின் பலத்தை வெளிப்படுத்தும் ரோசா லுக்சம்பேர்க்கின் நினைவு நிகழ்ச்சிகளை இரத்தக்களரியை பயங்க ரவாதத்தை ஊக்குவிக்கும் நிகழ்ச்சியாக்க முனைந்தனர். நிகழ்ச்சிகள் தடை செய்யப் பட்டபோதும் எப்படியும் தடையைமீறி ஊர்வலம் நடக்கும் என்பதை உணர்ந்த பெர்லினில் அதிகம் விற்பனையாகும் Axelspringer நிறுவனத்தின் கழிசறை ஏடான BZ «Berliner Polizei Jagt Selbsmord Bomber Er drohte mit Blutbad bei Rosa Luxemburg Demonstration» என்று முதற் பக்கத்தில் பெரும் எழுத்துக்களில் தலையங்கம் தீட்டியது. தற்கொலைக் குண்டுதாரி யினால் ரோசா லுக்சம்பேர்க் நினைவுதின ஊர்வலம் இரத்தக்களரி நிறைந்ததாய் மாறப் போவ தாய்நம்ப வைக்க முயன்றது. புரளி கிளப்பியது. ரோசா லுக்சம்பேர்க்கின் உடல் புதைக்கப்பட்ட நினைவிடம் வெளியே பூட்டப்பட்டு பொலிஸ் குவிக்கப்பட்டது. சொல்லமுடியாத பயங்கரம் நிக ழப்போவதாய் மக்களை நம்பப் பண்ணவும் இடதுசாரிகளை ஆத்திரமூட்டி வன்முறையில் இறக் கிவிடுவதும் அவர்களின் நோக்கமாயிருந்தது. ரோசா லுக்சம்பேர்க்கின் நினைவிடத்துக்கு மலர்களோடு வந்த ஏராளமான மக்களை பொலிஸ் பலவந்தமாய் திருப்பி அனுப்பியது.

எனினும் பெர்லின் Frankfurter Torஇல் பொலிஸ் தடை உத்தரவையும் மீறி இடதுசாரிகள் காலை 10.00மணிக்கு கூட ஆரம்பிக்கின்றனர். பொலிஸ், ஊர்வலம் ரோசா லுக்சம்பேர்க்கின் நினைவிடத்துக்குச் செல்லும் பாதையைய் மறித்து நின்றது. அத்தோடு கூட்டம் தடைசெய்யப் பட்டுள்ளதாயும் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்தது. எனினும் பொலிஸ் தடையையும் மீறி 11.00மணிபோல் ஊர்வலம் தடை செய்யப்பட்ட பகுதிக்கு எதிர்த்திசையில் புறப்பட்டது. இதில் பகுதியான PDS ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். PDSஇல் மார்க்சிய அடிப்படைக்குப் போரா டும் விமர்சகரும் இளம்பெண் எழுத்தாளரு மான Shara Wagenknecht உட்பட சில PDS பாராளுமன்ற உறுப்பினர்களும் ஊர் வலத்தில் பங்கேற்றனர். ஊர்வலம் பல் வேறு வீதிகளினூடாக நடந்து Karl Marx Allée ஊடாக முன்னாள் Lenin Platzஐ இர ண்டு மணி நேரத்தில் அடைந்தது. அது அங்கிருந்து ரோசா லுக்சம்பேர்க் நினைவி டத்தை நோக்கிப் போகமுயன்றபோது பொலிசால் சூழப்பட்டது. பொலிசின் தண் ணீர் அடிக்கும் வீதித்தடைகளை அகற் றும் வாகனங்கள் சூழ 1100க்கு மேற்பட்ட பொலிசார் 4000க்கும் மேற்பட்ட ஊர்வ லத்தில் கலந்துகொண்ட மக்கள்மேல் வன் முறையில் இயங்கினர். கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டு தடியடி மேற்கொள் ளப்பட்டது. பொலிசாரால் புகைப்படங்கள், வீடியோ கமரா மூலம் படம் எடுத்தல் என் பன நடைபெற்றன. 219பேர் ஊர்வலத்தில் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் வானில் ஏற்றப்பட்டு பலர் பொலிசாரால் தாக்கப்பட்




"மரித்தவர்கள் எம்மை மறக்காது இருக்கச் செய்கிறார்கள்" 100000க்கும் மேற்பட்ட மக்கள் மார்க்சிய வழிகாட்டிகளான ரோசா லுக்சம்பேர்க், கார்ல் லிப்னெக்ட் ஆகியோரின் நினைவு ஸ்தூபியின் முன் ரோஜா மலர்கள் தூவி அஞ்சலி செய்தனர். 15.01.2000 (புகைப்படம்: பரா)

டனர். ஒரு இளைஞர் மேலான பொலிசாரின் தாக்குதலை அவதானித்துக்கொண்டு இருந்த PDS பாராளுமன்ற உறுப்பினர் Casten Hübner காரணமின்றிப் பொலிசாரால் தாக்கப்பட்டு பொலிஸ் வானில் ஏற்றப்பட்டு 25நிமிடம் தடுத்து வைக்கப்பட்டார். அவர் தான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்று அடையாளம் காட்டியபோதும் பொலிசார் «Egal du Kommst jetzt, mit» (காரியமில்லை, நீ இப்போது எம்முடன் வருகின்றாய்) என்று இழுத்துச் சென்றனர். ஜெர்மனியில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தாக்கப்படுவது என்பது சாதாரணமான விடயம் அல்ல. SPD அல்லது CDU, FDP , CSU அல்லது பசுமைக்கட்சி உறுப்பினர்கள் தாக்கப்பட்டு இருந்தால் அது பெரும் அரசியல் பிரளயத்துக்கு உரியதாய் இருந்திருக்கும். குறைந்த பட்சம் மக்கள் தொடர்புச் சாதனங்கள்கூட இவை பற்றி அக்கறைப்படவில்லை. இடதுசாரிப் பத்திரிகைகளான Jung Welt, Neues Deutschland போன்றவை மட்டுமே பொலிஸ் தாக்குதல் ஊர்வலம் பற்றிய செய்திகளை முக்கியத்துவம் குறையாது வெளியிட்டன.



தடைசெய்யப்பட்ட ஊர்வலத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள், பின்னணியில் தாக்குதல் நடத்தும் பொலிசார். 09.01.2000 *(புகைப்படம்: பரா)*

இடதுசாரி ஊர்வலங்கள், கூட்டங்களில் பொலிஸ் ஆத்திரமூட்டுவதும் தாக்குதல் நடத்துவதும் கலவரத்தை திட்டமிட்டு உருவாக்குவதும் பொலிசாரின் வழக்கமான உத்தியாகும். அதே சமயம் புதிய நாசிகளின் ஊர்வலங்கள், கூட்டங்கள் பொலிஸ் பாதுகாப்போடு நடைபெறுவது ஜெர்மனியில் சாதாரணமான பழகிப்போன சங்கதி. 1999 ரோசா லுக்சம்பேர்க் நினைவுதின ஊர்வலத்தில் பொலிசாரால் 34 பேரும், 1998இல் 40 பேரும், 1997இல் 11 பேரும் 1996இல் 14 பேரும் கைது செய்யப்பட்டனர். வருடாவருடம் பல பத்துப்பேர் காயம் அடைந்தனர். ஊர்வலம் நடைபெற்ற மறுதினம் BZ, Bild போன்ற பத்திரிகைகள் ரோசா லுக்சம்பேர்க்கின் சட்டவிரோத ஊர்வலம், பொலிசுடன் மோதல், இரத்தக் களரி பற்றி செய்திகளை வெளியிட்டன. குண்டுவீசி இயந்திரத் துப்பாக்கியால் சுடப்போவதாய் பயமுறுத்திய Olaf Jürgen Staps சகல பத்திரிகைகளின் பக்கங்களிலிருந்தும் எந்தச் சுவடுமின்றித் தொலைந்து போனான்.

15.01.2000இல் மீண்டும் ரோசா லுக்சம்பேர்க் நினைவு ஊர்வலம் பெர்லின் Frankfurter torஇல் இருந்து ரோசா லுக்சம்பேர்க் நினைவிடம்வரை நடைபெற்றது. நினைவிட நிகழ்ச்சிக்கு வருகை தந்த மக்களின் தொகை கடும் குளிர்பனி கொட்டும் நிலையிலும் 100000பேர் என்று PDS அறிவித்தது. பொலிசார் 80000 மக்கள் வந்ததாய் மதிப்பிட்டனர். 2000பொலிசார் சகல இடமும் நிறுத்தப்பட்டு மேலே ஹெலிகொப்டரில் பொலிசார் தாழப்பறந்து எரிச்சலூட்டி வீதித்தடைகளை ஏற்படுத்தி பங்கேற்றவர்களைப் பரிசோதித்து கெடுபிடிகளை ஏற்படுத்தினர். CDUவின் கட்டளைகளை பொலிசார் விசுவாசமாய் நிறைவேற்றினர். அரசியல் விசமம் கொண்ட பத்திரிகைகள் சில ரோசா லுக்சம்பேர்க் பற்றி «Judische Polnischer Herkunf» (போலந்தின் யூத அடியைச் சேர்ந்தவர்) «Kommunistin» (கொம்யூனிஸ்ட்) என்று புதிய பாசிசக் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தின. CDU இந்த ரோசா லுக்சம்பேர்க் நினைவுநாளுக்கு எதிராக அரசியல் பிரச்சாரம் அதிகாரம் யாவற்றையும் பயன்படுத்தியது. SPD கண்டும் காணாமலும் உறங்கிக் கொண்டு இருந்தனர். பசுமைக்கட்சியின் முதலாளியப் பந்தங்கள் மௌனத்தின் ஊடாக இதைக் கடந்துவிட முயன்றனர்.



பெர்லினில் ஜனவரி 27இல் தொடங்கப்பட்டுள்ள நாசிகளால் அழிக்கப்பட்ட யூதமக்களுக்கான நினைவுச்சின்னமான (Holocaust - Mahumal) இனப்படுகொலைக்கான நினைவுச்சின்ன நிகழ்ச்சிக்கு CDUவின் பெர்லின் நகர மேயராகவுள்ள Diepgen செல்லவில்லை. அந்தளவு வெளிப்படையான பாசிசம் வெளிப்படுகிறது. அதேசமயம் புதிய பழைய நாசிக்குழுக்கள் யூத மக்களுக்கான நினைவுச் சின்னம் அமைப்பதை எதிர்த்து ஒன்று திரண்டுள்ளதோடு சகல பாசிஸ்டுகளும் ஒன்றிணைந்த Nationales Aktionbündnis அமைப்பையும் உருவாக்கியுள்ளனர். இவர்கள் ஜனவரி 25இல் பெர்லினில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றையும் நடத்தும் துணிவு பெற்றுள்ளனர். இதற்கு தடை கிடையாது. பதிலாக CDU கும்பல் பாசிசத்தின் பின்பு பதுங்கிக் கொள்கிறது. புதிய பழைய நாசிகளின் ஊர்வலத்தை எதிர்த்தும் யூதமக்களுக்கான நினைவுச்சின்

னத்தை ஆதரித்தும் அத்தோடு 1981முதல் அமெரிக்காவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள கறுப்பினமக்களின் உரிமைப்போராளியும் பத்திரிகையாளருமான Mamia Abu Jamalஇன் மரண தண்டனையை எதிர்த்தும் பாசிச எதிர்ப்பு அமைப்பால் ஜனவரி 29இல் ஊர்வலம் நடாத்தப்படவுள்ளது.



இப்போது இறுதியாக உண்மை வெளிவந்துள்ளது. CDU கும்பல் ரோசா லுக்சம்பேர்க் நினைவுநாள் நிகழ்ச்சிகட்கு எதிரான பயங்கரவாதப் பிரச்சாரத்துக்கு பயன்படுத்திய Olaf Jürgen Staps 1989இல் கிழக்கு ஜெர்மனிக்கு எதிரான ஊர்வலங்களை ஒழுங்கு செய்த கிழக்கின் கிறிஸ்தவ அமைப்புக்குள் செயற்பட்ட மேற்கு ஜெர்மனியின் உளவுத்துறையின் நபர் என்பது வெளிப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பெயரால் ஆயுத வன்முறையற்ற அமைதிப்புரட்சிக்கு வழிகாட்டியதாய் புலம்புபவர்கள் தாமே சொந்தமாய் ஆயுதப் பயங்கரவாதப் புரளியின் மூலம் இடதுசாரிகள் நிகழ்ச்சிகளை தடைசெய்யும் சதிகள், பொய்கள் மூலம் மட்டுமே தம்மை நீடித்துக் கொள்ளும் நிலை, சோசலிசப்புரட்சி தவறிப்போன தேசத்தில் இவைதான் நடைமுறை. ரோசா லுக்சம்பேர்க் கூறியதுபோல் «Sozialismus oder Barbarei»

"சோசலிசம் அல்லது காட்டுமிராண்டித்தனம்"

இதில் ஒன்றைத் தெரிவுசெய்யும்படி மனிதகுலம் விடப்பட்டுள்ளது. ■

-பேர்லின், 28.01.2000




சோசலிஸ்டுகளின் ஞாபகார்த்த இடத்தில் 1000000க்கும் மேற்பட்டவர்கள் ரோஜா மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தினர். 15.01.2000 (புகைப்படம்: பரா)

---

# அன்புடன் நண்பர்களுக்கு,

## 'செல்வியின் நினைவுப் பதிவு'

செல்வியின் (செல்வநிதி - தியாகராஜா) நினைவாய் அவரது பன்முக ஆளுமைகளையும், சிந்தனைகளையும், பதிவு செய்ய விரும்புகின்றோம். செல்வியினால் எழுதப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், தினக்குறிப்புக்கள் மற்றும் அவரின் ஓவியங்கள், அவர் எடுத்த புகைப்படங்கள், அவரது புகைப்படங்கள், அவரது ஏனைய எழுத்துப்பிரதிகள் தங்களிடம் இருப்பின் அனுப்பிவைத்து உதவும்படி கேட்டுக்கொள்கிறோம். மூலப்பிரதிகள் தங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும் எனவும் உறுதி அளிக்கிறோம். செல்வி பற்றிய நினைவுகளையும், உங்கள் படைப்புக்களையும் நாம் எதிர்பார்க்கிறோம்.



தொடர்புகளுக்கு:-
செல்வி படைப்புகள் தொகுப்பு
**UYIRNIZHAL**
**EXIL, 27 Rue Jean Moulin**
**92400 Courbevoie,France**
**e-mail: EXILFR@aol.com**

*...மானுட நேயம் நோக்கிய வாழ்வை*
*படைத்திட முயலகையில் எத்தனை தடைகள்*
*கொடூரம் மிகுந்த விழிகள் தொட*
*வாழ்தலில் கசப்பு நெஞ்சை நெருடும்*
*மனிதம் மறந்து சவமாய் கிடந்து*
*வாழ்தலில் எனக்கு பிரியமேயில்லை . . .*
*- செல்வி -*

## பதிவுகள்

எங்களின்
அழுகுரலோசைகள்
பாறையாக
இறுகிப்போன
உங்களின்
செவிப்பறைகளில்
உறைக்கவில்லை...?

▼▼▼

சில தூய
நெஞ்சங்களின்
உள்ளேயிருந்து
வெடித்துச் சிதறும்
பெரு மூச்சின்
எரிமலை
குமுறல்கள்தான்
இன்று
இயற்கையின்
வெப்பச்சுவடுகள்...!

▼▼▼

நாளை
வெய்யோன் கூட
அக்கினிக் குழம்பை
கக்கக் கூடும்
அதனால்
சில ராஜ்யங்கள்
சாம்பல் மேடாக
மாற்றமடையும்....

▼▼▼

புதிய சரித்திரம்
படைப்பவர்களே
யாரையுமே
நீங்கள்
கடவுளவதாரமாக
வர்ணித்து
உருவகம்
சமைத்துவிடாதீர்கள்....

●



## சுயநலப் போலிகள்

இரக்கமுள்ள
இலட்சியவாதியாய்
தன்னை
இனம் காட்டும்
எத்தர்கள்

▼▼▼

அற்ப சுகத்திற்கு
தன்னோடு தன்னுறவை
விற்பனை செய்யும்
வர்த்தகர்கள்

▼▼▼

சாக்கடைச் சேற்றை
மரபுச் சந்தனமாய்
தங்களுக்கே பூசும்
கிறுக்கர்கள்

▼▼▼

எரிபொருள் தட்டுப்பாட்டை
நீக்கிவிட
வீட்டையே எரிக்கும்
குப்பி விளக்குகள்

▼▼▼

சாம்பல் மேட்டில்
சாம்ராஜ்ய
வரைபடங்கீறும்
சந்தர்ப்பவாதிகள்

▼▼▼

மயானத்து மண்குவியல்
வெண்கொடியில்
சமாதானந் தேடும்
சுயநலப் போலிகள்

●

அக்கரைப்பற்று, கோளாவில், பனங்காடு, தம்பட்டை போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக வந்த சனக்கூட்டங்களால் தம்பிலுவில், திருக்கோயில் கிராமத்தில் உள்ள ஆலயங்களினதும் பாடசாலைகளினதும் கட்டிடங்களும் மண்டபங்களும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.

அகதிகளாக வந்து சேர்ந்தவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் திருக்கோயில், தம்பிலுவில் பொதுமக்கள் மும்முரமாக இருந்தார்கள்.

அவரின் வயதுக்கு அகதி முகாம்களில் உள்ள இட நெருக்கடி சரிப்பட்டு வராது என்பதாக, திருக்கோயிலில் உள்ள தூரத்துச் சொந்தக்காரர் ஒருவரின் வீட்டில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டார் அவர்.

கொண்டு வந்து விடப்பட்ட மத்தியானத்திலிருந்து நடுச்சாமம் பன்னிரண்டு மணிவரை அகதி முகாமில் இருந்த அவரின் மூத்த மகள் அடிக்கொருதரம் வந்து அவரைப் பார்த்துவிட்டுப் போனாள்.

அந்த வீட்டுக்கார இளம்பெண் கொடுத்த இரவுச் சாப்பாட்டை வேண்டாம் என்று மறுத்தவர், கொடுத்த கோப்பியை மட்டும் குடித்து விட்டு வெளி மண்டபத்துக்குள் விரித்துக் கிடந்த பாயின் மேல் படுத்து, நித்திரை வராமல் பல தடவை புரண்டு புரண்டு கிடந்தவரை அவதானித்த வீட்டுக்காரப் பெண், "என்ன அப்பச்சி நித்திரை வருகுதில்லையோ? வீட்டுக்குள்ளை புளுக்கமெண்டால் வெளியிலை போய்ப் படுங்கோவன். நாங்களும் மண்டபத்துக்குள்ளைதான் படுக்கிறம். என்னவும் தேவையெண்டால் கூப்பிட்டால் நான் வருவன்" என்று சொல்ல பாயைச் சுருட்டி எடுத்துக் கொண்டு வெளியில் வந்து வாசல் மணலில் விரித்துப் படுத்தார்.

திருக்கோயில் கடல் நெருங்கி வருவதுபோல் ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது. கடலில் பட்டு வந்த காற்று அவரின் முதிர்ந்த தேகத்தில் பட்டபோது சிறிது குளிர்ந்தது. நள்ளிரவு தாண்டி இரண்டு மணியாகி இருக்கும். நித்திரை அவரிடம் வரமாட்டேன் என்று அடம்பிடித்துக் கொண்டிருந்தது.

மல்லாக்கப் படுத்திருந்த அவரைப் பார்த்து நையாண்டி செய்து சிரிப்பது போல் ஓடும் மேகத்துக்குள்ளிருந்து மறைந்து வெளிப்பட்ட நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன.

எந்தவிதமான கவலைகளோ சிந்தனைகளோ பொறுப்புக்களோ இல்லாத இந்த வயதில் தன்னிடம் நித்திரை மட்டும் இன்று வர மறுக்கிறதே, ஏன் என்று யோசித்தார் அவர். எதையோ எடுத்து வர மறந்துவிட்டது போலவும் அது எதென்று தெரியாமல் மனம் தேடுகின்றது போலவும் எதையோ இழந்துவிட்டதாயும் அவரின் சிந்தனை அலைமோதியது. தான் சிறுவனாக இருந்தபோது தன் தகப்பனுடன் காட்டுக்குள் சென்று வெட்டி வந்த தேக்கு மரங்களால் கட்டப்பட்ட தனது வீட்டையும் தனது மூத்தமகள் பிறந்தபோது தன் கையாலேயே செய்த தொட்டில் இப்போதும் வீட்டின் விட்டத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருப்பதையும் தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப் பேரன் பேத்திகள் என எத்தனையோ குழந்தைகள் ஆடி உறங்கிய அந்தத் தொட்டில் இப்போது அவரின் மனக்கண் முன் அந்தரத்தில் ஆடியது.



விமல் குழந்தைவேலு

கிணற்றடியில் கட்டியிருந்த கூட்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த கோழிகள் சிறகடித்து சோம்பல் முறித்துக்கொள்ளும் சத்தம் அவரின் காதுகளுக்கு கேட்கின்றது. அவரின் வாழ்நாளில் இதுவரைக்கும் இரவில் படுக்கும் முன் திருப்புகழோ திருவாசகமோ பாடாமல் படுத்ததே இல்லை. அந்தக் காலத்தில் தான் இயற்றி மெட்டுக்கட்டி தன் கையாலேயே எழுதி முடித்து எத்தனையோ தடவைகள் சுற்றுப்பட்டுக் கிராமங்கள் அனைத்திலும் மேடையேற்றிய பாஞ்சாலி சபதம், மயான காண்டம் போன்ற நாட்டுக் கூத்துப் புத்தகங்களை எல்லாம் பழைய மரப்பெட்டிக்குள் போட்டுப் பூட்டிவிட்டு, அவைகளை அநாதரவாக விட்டுவிட்டு வந்துவிட்டதாய் அவரை அவரின் மனச்சாட்சி உறுத்திக்கொண்டிருந்தது.

அந்த நடுநிசி நேரத்து நிசப்த வேளையிலும் ஊருக்குள் எங்கோ தொலைவிலிருந்து பேச்சுக்குரல்களும் மோட்டார் சைக்கிள்களின் உறுமல்களும் கேட்டுக்கொண்டு தானிருக்கிறது. அகதியாக வந்திறங்கியவர்களுக்குரிய தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும் அவர்களின் ஊர் நிலைமை சீராகி அவர்கள் திரும்பும்வரையிலான வரைக்கும்

அவர்களுக்குரிய தங்குமிட, சாப்பாட்டு வசதிகளை ஏற்பாடு செய்ய தம்பிலுவில் திருக்கோயில் இளைஞர்கள் இரவிரவாக ஓடித் திரிகின்றார்கள் என்பதை ஊகித்துக் கொண்டார் அவர்.

"என்ன அப்பச்சி நித்திரை வருகுதில்லையோ? புது இடம்தானே, அதுதான் அப்பச்சிக்கு நித்திரை வருகுதில்லைப் போலை" மண்டபத்துக்குள் படுத்திருந்த வீட்டுச் சொந்தக்கார பெண் கேட்டாள். அவளுக்கு என்னவென்று தெரியும் அவரின் மனதுக்குள் அல்லாடும் உணர்வுகள்.

தனது பழைய நினைவுகளிலும் தன் பழங்கால பொருட்களினதும் எண்ணத்தில் மூழ்கி இருந்தவரின் காதுகளில் திருக்கோயில் ஆலயத்திலிருந்து வந்த சலசலப்புச் சத்தம் விடிந்துவிட்டது என்பதை உணர்த்த, எழுந்து தலைக்குக் கீழ் வைத்திருந்த சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டு பாயைச் சுருட்டி சுவரில் சாய்த்து நிறுத்திவிட்டு கிணற்றடிக்குச் சென்று கை, கால், முகம் கழுவி விட்டு கடலிலிருந்து எழுந்து வந்த சூரியனை நமஸ்கரித்துவிட்டு வாசலுக்கு வந்தபோது வீட்டுக்காரப் பெண் கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்தார்.

"கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள் அப்பச்சி. இடியப்பம் அவிச்சித்தாறன்." என்று சொன்ன அந்தப் பெண்ணின் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாதவராக வெளியேறி திருக்கோயில் ஆலயவீதியை அடைந்தபோது...

"எலக்கோ அப்பா எங்ககா போறாய்? இஞ்ச நில்லுகா" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்த போது, ஆலய கிணற்றடியில் கூடி நின்ற பெண்கள் கூட்டத்திலிருந்த, தன் மகள் தன்னை நோக்கி நடந்து வருவதைக் கண்டார்.

"தண்ணியெடுத்து வைச்சிற்று உன்னப் பார்க்கத்தான் வருவமெண்டு இருந்தன். நீ எங்கப்பா போறாய்?"

"ஒரு இடத்துக்கும் இல்லகா. சும்மா றோட்டுப் பக்கம் தான்" என்றுவிட்டு நடந்தார்.

"தூரத்துக்கு எங்கையும் போய் கண்கடை தெரியாம தொலைஞ்சி போயிடாம கெதியா வந்திரப்பா"

நடந்து கொண்டிருந்தவரின் காதுகளில் மகளின் குரல் கேட்டுக்கொண்டே இருந்தது.

நடந்து வந்து திருக்கோயில் ஊரின் பிரதான வீதியை அடைந்தபோது வீதியெல்லாம் சனக்கூட்டமாகவே தெரிந்தது. அக்கரைப் பற்று, பனங்காடு, கோளாவில், தம்பட்டை சனங்களெல்லாம் ஒன்று கூடியதால் அந்த ஊர் வருடாந்த தீர்த்தோற்சவ காலம் போல கலகலப்பாக இருந்தது.

அங்கிருந்து நடந்து தம்பிலுவில் முச்சந்தி சந்தையடிக்கு வந்தபோது சந்தை நிரம்பி வழிந்தது. காய்கறிகளும் மீன் வகைகளும் விற்பனையாகிக் கொண்டிருக்கும் காட்சியை கொஞ்ச நேரம் ரசித்து புதினம் பார்த்துக் கொண்டிருந்த போது...

"ஏங்கா அப்பச்சி என்ன நீ இஞ்சால பக்கம்" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். மேகலா தியேட்டர் வாசலில் நின்றிருந்த அவனை உற்றுப் பார்த்தார். கோளாவில் சங்கரப்பிள்ளை ஓடாவியாரின் பேரன்.

"ஒண்டுமில்லையடா, சும்மா புதினம் பார்ப்பம் எண்டு வந்தன்" என்றுவிட்டு தம்பிலுவிலை நோக்கியே நடந்து கொண்டிருந்தார்.

கொஞ்ச தூரம் நடந்துவிட்டு தான் நடந்து வந்த வழியை திரும்பிப் பார்த்தபோது தன்னை விட்டு சனங்கள் அந்நியப்பட்டு விட்டது போல வீதி சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

"எலக்கோ மனிசா உனக்கென்ன பைத்தியமோகா புடிச்சிருக்கு. இன்னுமேன்கா இஞ்சால பக்கம் நடந்து கொண்டு போறாய்"

தன்னை எதிர்கொண்டு வந்த மீன்பெட்டி சைக்கிள்காரர் தனக்கு ஏசிக்கொண்டு போவதை அவர் கவனத்தில் கொள்ளாமல் நடந்து கொண்டே இருந்தார்.

"ஏங்கா புள்ளே, எங்ககா புள்ளே போறாய்" குரல் கேட்டு திரும்பிப் பார்த்தார். றோட்டோரத்து குடிசை ஒன்றின் முன்னால் குந்தி இருந்த தன்னை ஒத்த வயதுடைய ஜீவன் ஒன்று தன்னில் இரக்கப்பட்டுக் கேட்ட கேள்வியில் ஒரு நிமிடம் நின்று நிதானித்து விட்டு, 'சும்மா இங்கால தாங்கா' என்று சொல்வது போல கையால் சைகை செய்து காட்டிவிட்டு நடந்துகொண்டே இருந்தார்.

"இனியும் அங்கால பக்கம் போகாதகா. தம்பட்டை வரைக்கும் ஆமிக்காரன்கள் வந்து நிக்கிறானுகளாம்." என்று இன்னுமொரு மீன் பெட்டி சைக்கிள்காரன் சொல்லிவிட்டு அவசர அவசரமாக ஓடினான்.

தம்பிலுவில் எல்லையைக் கடந்து களுதாவளை பிள்ளையார் கோயிலை அடைந்தபோது எந்த வித சனநடமாட்டமும் இல்லாத தனித் தீவொன்றுக்கு வந்து சேர்ந்து விட்டதாய் உணர்ந்தார் அவர்.

களுதாவளை கோயில் மணலில் சிறிது நேரம் குந்தி இருந்து விட்டு மீண்டும் எழும்பி நடக்கத் தொடங்கினார். களுதாவளை காட்டுவழிப் பாதையைக் கடந்து பெரிய முகத்துவாரத்தை அடைந்தபோது சூரியன் உச்சிக்கு வந்து அவரின் சுருங்கிய தேகத்தை சுடெரிக்கத் தொடங்க, தோளில் கிடந்த சால்வையை எடுத்து தலைக்கு மேலே விரித்துப் பிடித்து சூரியனுக்கு சமாதானக் கொடி காட்டியபடி நடந்து கொண்டு முகத்துவாரம் தாண்டி தம்பட்டைக்குள் நுழைந்தபோது தொண்டை காய்ந்து தண்ணீர் தாகமெடுத்தது அவருக்கு.

கொஞ்ச தூரம் நடந்தவர் தம்பட்டையின் வீதி ஓரத்தில் இத்திமரம் ஒன்றின் கீழ் தென்னம் குத்தியின் மேல் வைக்கப்பட்டிருந்த மண்பானை ஒன்றில் குடிநீர் என்று எழுதியிருப்பதைக் கண்டதும் பானையின் அருகில் சென்று கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு இத்திமரத்தின் கீழ் கொஞ்ச நேரம் இருந்தார். எத்தனை நாள் தண்ணீரோ தெரியாது. இருந்தும் தாகமெடுத்து வரண்டு போன அவரின் தொண்டைக்கு இதமாகவே இருந்தது அது.

மீண்டும் எழும்பி நடக்கத் தொடங்கியவர் தம்பட்டையைத் தாண்டி சின்ன முகத்துவாரத்தை அடைந்தபோது வீதியின் தாரை சூரியன் கொதிக்க வைத்துக்

கொண்டிருந்தான். உச்சி வெயிலில் கொதித்த தாரில் பாதம் பட்டபோது அவர் பதறித் துடித்து சிறு பிள்ளை போல் ஓடிக்கொண்டிருந்தார். இரு பக்கமும் நீர். பாலம் போன்ற வீதி. கொதிக்கும் தாருக்குத் தப்பி விலத்தி நடக்க இடமுமில்லை. விரைவாக ஓடியும் நடந்தும் முகத்துவார எல்லையைக் கடந்து நாற்பதாம் கட்டைக்குள் நுழைந்தவர், தாருக்குத் தப்பி வீதியின் ஓரத்தில் உள்ள புல்தரையில் நடந்தபோது புல்லுக்குள் மறைந்து கிடந்த நெருஞ்சி முட்கள் அவரின் பாதத்தைப் பதம் பார்க்க, காலில் குத்திய முள்ளைக் குனிந்து எடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தார். நாற்பதாம் கட்டையைச் சேர்ந்த ஆற்றுப்பகுதிக்கு அப்பால் உள்ள தனது ஊரைப் பார்த்தார். குவிந்து கிடந்த பச்சைப் புல்மேடு போல் தூரத்தே பசுமையாகத் தெரிந்த தனது ஊரைக் கண்டதும் அவரின் உள்ளத்துக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது.

இன்னும் கொஞ்ச தூரம் நடந்து நாற்பதாம் கட்டையைக் கடந்துவிட்டால் அங்கிருந்து ஆற்றுப் பகுதிக்குள் இறங்கி குறுக்கு வழியில் ஊருக்குப் போய்ச் சேர்ந்து விடலாம் என்ற அங்கலாய்ப்பில் வேகமாய் நடந்தவர்,

"அடோ நில்லுடா...." என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

நாற்பதாம் கட்டையில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்குள்ளிருந்தும் வெளிப்பட்டு ஓடி வந்த ஆமிக்காரர்கள் அவரைச் சூழ்ந்து நின்று கொண்டார்கள்.

"அடோ நாக்கியா கொஹெயத யண்ட"

அவர் எதுவும் புரியாமல் நின்றார்.

"ஏய் நாய்க்கியா, ஒயாட்ட பிசுத. அடோ ஹகண்ட ஓனத" என்றபடி துப்பாக்கியை ஓங்கியபடி ஓடிவந்த ஆமிக்காரன் ஒருவனை இன்னுமொரு ஆமிக்காரன் தடுத்தான்.

"எப்பா மச்சான். ஹகண்ட எப்பா." அடிக்க வந்தவனிடம் தடுக்க வந்தவன் சொல்ல அவன் மீண்டும் அடிக்க ஓங்க, அவர்சிறு பிள்ளை போல் தன் முகத்துக்கு நேரே கையை உயர்த்தி குனிந்து கொண்டார்.

"அடோ சொல்லுடா. கொஹெயத யண்ட"

அவர் புரியாமல் நின்றார். அவன் மீண்டும் அடிக்க ஓங்க, மற்றவன் மீண்டும் தடுத்தான்.

"எப்பா மச்சான். நாய்க்கி மினிசு, பவ் மச்சான்." என்றான்.

இதற்கிடையில் எங்கோ இருந்து ஓடி வந்த ஆமி பெரியவனைக் கண்டதும் சூழ்ந்து நின்றவர்கள் விலகி நின்றார்கள்.

"அடோ கெலவா எங்க போறது?" ஆமி பெரியவன் தமிழிலேயே கேட்டான்.

"வெத்தில உரல் எடுக்க மறந்திட்டன் ஐயா. அதுதான் எடுத்துட்டு வருவம் எண்டு போறன்"

அவர் சொன்னது பெரியவனுக்கு புரியவில்லை. தமிழ் தெரிந்த ஓர் ஆமிக்காரன் பெரியவனுக்கு விளங்கப்படுத்தியபோது எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, மறு விநாடியே முகங்களை இறுக்கமாக்கிக் கொண்டார்கள்.

"ஏய் கெலவா, சீக்கிரம் போய் உண்ட உரல எடுத்துக்கொண்டு இதே வழியால திரும்பி வரவேணும். நீ வரயில்லையெண்டா நாங்க வந்து உன்ன சாக்காட்டிறது. சரியா"

பெரியவன் சொன்னதும் அரிவரி வகுப்பு மாணவன் போல தலையாட்டிவிட்டு நடந்தார் அவர்.

நாற்பதாம் கட்டையைக் கடந்து வந்து ஆற்றுப் பகுதிக்குள் இறங்கியபோது காய்ந்து சருகாய்ப் போயிருந்த நாணல் புற்கள் அவரின் காலில் மிதிபட்டு சர் சர் என்று முறிந்து அவரின் காலில் குத்தியது.

காய்ந்த நாணல் புல்தரையைத் தாண்டி ஆற்றுப் பகுதிக்குள் இறங்கியபோது கோடை காலத்து வெயிலில் காய்ந்து வெடித்துப் போயிருந்த இடவுகளுக்குள் அவரின் கால்கள் இடர்பட்டு விழுந்து எழும்பிக் கொண்டிருந்தவர் நிமிர்ந்து பார்த்தார். பதியம் போட்ட நாற்று மேடைப் பயிர்களைப் போல் தூரத்தில் தெரிந்த தனது ஊரின் தென்னை மரங்கள் கண்ணில் பட்டதும் காலில் ஏற்பட்ட வலியை மறந்தவராய் நடக்கத் தொடங்கினார்.

காய்ந்து வெடித்துப் போன ஆற்று நிலப் பரப்பைக் கடந்து, காய்ந்தும் காயாமல் உறைந்து போயிருந்த சேற்று நிலத்தில் அவர் கால் வைத்தபோது உறைந்து போயிருந்த சேறு அவரின் கால்களில் சப்பாத்துகளாய் அப்பிக் கொள்ள அவரின் பாதங்கள் தூக்கிவைக்க முடியாத அளவுக்குப் பாரமாகின.

சேற்றுப் பகுதியையும் தாண்டி ஆற்றுப் பகுதியின் மறுகரையைத் தொட்டு ஊருக்குள் உள்ளிட்ட போது ஊர் உறங்கிப் போய் மயான அமைதியில் இருந்தது.

ஊருக்குள் உள்ளிட்டவர் நேராக தன் வீட்டுக்கு வந்து கால்களைக் கழுவிக் கொள்வதற்காக கிணற்றடிக்குச் சென்று கிணற்றை எட்டிப் பார்த்தார். கமுகம்பூக்களாலும் தென்னம்பூக்களாலும் ஆடை கட்டி கிணற்றுநீர் தன்னை மறைத்துக் கொண்டிருந்தது. துலாவை உள்ளே விட்டு வாளியால் பூவாடை விலத்தி தண்ணீரை இறைத்து காலைக் கழுவி விட்டு இடுப்பில் சொருகி இருந்த சாவியால் வீட்டைத் திறந்து உள்ளே போனார்.

சாவியை விட்டுக் கதவைத் திறந்தபோது, 'என்னை விட்டு எங்கே போனாய்'என்று அவரிடம் அழுவதுபோல் கதவு கிறீச் என்று சத்தமிட்டது.

உள்ளே போய் தனது பழைய மரப்பெட்டியைத் திறந்தார். கம்பராமாயணம், கந்தபுராணம் போன்ற புத்தகங்களுடன் தான் எழுதி இயற்றிய கூத்துக் கொப்பிகளான மயான காண்டம், பாஞ்சாலி சபதம் போன்றவைகளை வெளியில் எடுத்தபோது கலீர் என்ற சத்தத்துடன் பெட்டியின் மூலையில் ஏதோ விழ, கையை விட்டுத் தடவியபோது சோடி சல்லாரி கையில் தட்டுப்பட அதை வெளியில் எடுத்துப் பார்த்தார். ஐம்பது வருடங்களுக்கு முந்தியது. இப்போதும் சேதாரமின்றி பளிச்சிட்டது. புத்தகங்களுடன் அதையும் சேர்த்து எடுத்துக் கொண்டு பெட்டியை மூடிவிட்டு வந்து மூலையில் கிடந்த சீலைப் பையொன்றுக்குள் அவைகளை வைத்துவிட்டு அண்ணாந்து பார்த்

தார். தன் வாழ்நாளில் எத்தனையோ குழந்தைகளைத் தாலாட்டிய தொட்டில், முகட்டில் அனாதையாகத் தொங்கியதைக் கண்டதும் அவரையும் அறியாமல் பெரிய மூச்சுக் காற்றொன்று அவரின் நெஞ்சுக் கூட்டிலிருந்து வெளிவந்தது.

மீண்டும் கதவைப் பூட்டிவிட்டு சாவியை புத்தகப் பையினுள் போட்டுவிட்டு வாசலுக்கு வந்தபோது வாசலில் கிடந்த பழைய செருப்புச் சோடி ஒன்று கண்ணில் பட, வரும்போது தன் காலில் குத்திய நெருஞ்சி முட்கள் நினைவில் வர, அந்த செருப்புக்களையும் எடுத்து வந்து மாமரத்தின் அடியில் வைத்துவிட்டு குசினிக்குள் சென்றார். குசினி அடுப்புக்கல்லில் இருந்த தீப்பெட்டியைக் கண்டதும் ஏதோ நினைத்தவராய் விறகுகளை அடுக்கி அடுப்பை எரிய வைத்துவிட்டு வெளியில் வந்து கிணற்றடியில் நின்ற மரவள்ளிச் செடியைப் பிடித்து இழுத்தார். அவரின் முதுமையோடு இசைந்து வர விருப்பமில்லாமல் முரண்டு பிடித்தது மரவள்ளிச் செடி. கிணற்றில் இருந்து ஒரு வாளி தண்ணியை எடுத்து இறைத்து மரவள்ளிச் செடிக்கு நீராட்டினார். குந்தியிருந்து, சிறுபிள்ளைகள் விளையாடுவது போல, மரவள்ளியின் அடி மண்ணை கைகளால் பிறாண்டி தீய்த்தபோது ஒரு குட்டையான தடித்த கிழங்கொன்று தன் முகத்தைக்காட்ட, டபக்கென அதை முறித்து எடுத்துக்கொண்டு மீண்டும் பூனைபோல் மண்ணை மூடினார்.

குசினிக்குள் சென்று எரிந்து தணலாகிப் போயிருந்த அடுப்புக்குள் கையிலிருந்த கிழங்கைப் புதைத்துவிட்டு வெளியில் வந்து வீட்டை ஒரு தரம் சுற்றி வந்தார்.

பக்கத்து வீட்டில் கட்டிக் கிடந்த ஒரு ஆட்டை நான்கு நாய்கள் சுற்றி நின்று குரைத்துக் கொண்டிருந்ததைக் கண்டவர், கம்பி வேலிக்குள்ளால் குனிந்து சென்று நாய்களை விரட்டிவிட்டு, ஆட்டுக் குட்டியை கயிற்றில் பிடித்து இழுத்து வந்து கிணற்றடி மரவள்ளிச் செடிகளைக் கடித்துத் தின்ன விட்டார். தன்னைக் கொத்துவதற்காக ஓடி வந்த காகத்திடமிருந்து தப்பி மாமர உச்சிக் கிளைக்கு ஓடி வந்த அணில் ஒன்று அவரைத் திரும்பிப் பார்த்தபோது, அதை அவர் மனதுக்குள் ரசித்து தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்.

குளிக்கவேண்டும்போல் இருந்தது அவருக்கு. தோளில் கிடந்த சால்வையையும் இடுப்பு வேட்டியையும் அவிழ்த்து கிணற்றுக் கொட்டில் வைத்துவிட்டு கோவணத்தோடு நின்று கொண்டு தண்ணியை இறைத்துக் குளித்தார். எத்தனை வாளி இறைத்திருப்பாரென்று அவருக்கே தெரியாது. ஆசை தீரும்வரை குளித்தார்.

குளித்து முடித்தவர் வேட்டியை உடுத்திக்கொண்டு கோவணத்தை உருவி இழுத்துப் பிழிந்து கொடியில் காயப் போட்டுவிட்டு சால்வையால் முகத்தையும் முதுகையும் துடைத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தார். மாமர உச்சிக் கிளையில் இருந்த அணில் இவரையே பார்த்துக் கொண்டிருந்தது. இவர் தன்னைப் பார்ப்பதைக் கண்ட அணில் வேறு கிளைக்குத் தாவியபோது ஏற்பட்ட மாவிலைச் சரசரப்பு சத்தத்திலிருந்துதான் பகலிலும் அந்த ஊர் எவ்வளவு நிசப்தமாக இருக்கிறதென்று உணர்ந்து கொண்டார்.



கிணற்றடியைச் சுற்றி புல் முளைத்திருந்தது. குந்தி இருந்து அவைகளைப் பிடுங்கி எறிந்தார். நேற்றிரவு முழுவதும் நித்திரையில்லை. பகல் முழுவதும் நடை. வெறும் வயிற்றோடு ஒரு குளிப்பு. எல்லாமுமாய் சேர்ந்து அவரின் பசியை தூண்டிவிட்டது. நெருப்பினுள் வெந்த கிழங்கின் வாசனை குசினிக்குள்ளிருந்து வந்து மூக்கில் முட்டியபோது பசி மேலும் வயிற்றைக் கிள்ள குசினுக்குள் சென்று பார்த்தபோது தணலுக்குள் புதைந்திருந்த கிழங்கு இலவம் பஞ்சுபோல் வெடித்து விரிந்திருக்க, கிழங்கை இழுத்து வெளியில் போட்டுவிட்டு தண்ணீரைத் தெளித்து அடுப்பை அணைத்துவிட்டு கிழங்கை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

மாமரத்தின் கீழே சால்வையை விரித்தார். கொண்டுபோக எடுத்து வந்த சீலைப்பையை பக்கத்தில் வைத்தார். விரித்திருந்த சால்வையில் இருந்துகொண்டு கிழங்கை உரித்து துண்டாக்கி வாய்க்குள் திணித்தபோது சுட்ட வாசமும் சேர்ந்த ருசி அவரின் முகத்தில் தெரிந்தது. அவருக்கு இருந்த பசியில் கிழங்கு முழுவதையும் தின்று முடித்தவர், எழுந்து வந்து கிணற்றில் தண்ணி அள்ளிக் குடித்தபோது சூரியன் மேல் வானத்தில் இறங்கிக் கொண்டிருந்தான்.

‘சீக்கிரமாய் போயிட்டு திரும்பி வர வேணும். நீ வரயில்லை எண்டா நாங்க வந்து உன்ன சாக்காட்டிறது. தெரியுமா?’என்று ஆமிக்காரப் பெரியவன் சொன்னது நினைவுக்குவர, அவசர அவசரமாய் போய் கொடியில் தொங்கிய கோவணத்தை தொட்டுப் பார்த்தார். அது காயாமல் ஒட்டி ஈரமாகவே இருந்தது.

மீண்டும் வந்தார். விரித்திருந்த சால்வையில் குந்தினார். நேற்றிரவைய கண் முழிப்பு, நடந்த களைப்பு, வயிறு நிறைய தின்ற கிழங்கின் திகட்டல், எல்லாமுமாய் சேர்ந்து அவருக்குள் ஒரு அசதியை ஏற்படுத்த, அவரையும் அறியாமல் அவர் தன் உடலை சால்வையில் சாய்த்துக்கொள்ள, அவரிடம் அனுமதி பெறாமலேயே அவரின் கண்கள் சோர்ந்து மூடிக்கொள்ள, அவரிடம் இருந்து பெரியதொரு மூச்சுக்காற்று வெளியேறியது.

சூரியன் மறைந்து இருளத் தொடங்கியது. சீலைப்பை அநாதரவாக அவருக்கு அருகில் கிடந்தது. ஒட்டிப்போய் ஈரமாய் கொடியில் தொங்கிய கோவணம் காய்ந்து போய் காற்றில் பறந்து வந்து அவரின் காலடியில் கிடந்தது. எல்லாவற்றையும் மறந்தவராய் அவர்....■

# முட்டை

சித்தார்த்த சே குவேரா

முந்த நாள் முற்சந்தியிலொரு முட்டை பூத்தது.

நேற்றுக்காலை அது உருளப் பார்த்தது சனம்.

'கோழி இட்டது' என்றதொரு கூட்டம்,

கூகை தவறிப்போட்தென்றாச்சு சிலர் பேச்சில்.

முதலை உருட்டிப்போக ஒரு முட்டை தனித்ததென்றும் தகவல்.

வருங்குஞ்சு, வெள்ளை, பழுப்பு, பழுத்த கறுப்பென்று நிறம் உடைந்தது ஊர் ஒன்றுக்குள் மூன்றாய்.

முட்டை முற்றிப் பழுத்துடைய சந்தி முற்றத்தில் முகம் முழிக்கக் குரலெழுப்பி,
குழந்தை நான்.

கூகைக் குரலென்று கல்லாலடித்தது கோழிக்குஞ்சென்ற கும்பல்.

கோழிக்குஞ்சுசுற்று பஞ்சுடல் என்று கழுத்துத் திருகியது முதலையில் முதலிட்டோர் கூட்டம்.

கூகையென்றோர் முதலை வாலை முட்டைத் தோலுட் கண்டனர்.

புதிதாய் வெளிப்பட்ட பிறவிக்கு தனிப்பட்டு தானாய் வினைப்படவிடாவண்ணம்
பிறக்கமுன்னே பெயர்கள், பெயரெச்சங்கள்.

சுற்றிப் பார்த்தேன் என்னை,
உள்ளே பிஞ்சாய்ச் சுருங்கிய உடலே ஒடுக்கம் வரித்து உயர வெளியே....

மிச்சப்படி,
மற்றவர் கருத்தை மிச்சமின்றித் தின்று தனிச்சொற்களை மட்டும்
சட்டைப் பைக்குள் முட்டமுட்டத் திணித்து நகரும் கூட்டம்.
அவரவர் சொந்தச் சொற்கள் சொட்டிச்சொட்டி நடைபாதைகளிற் கொட்டும்
நாலாபுறமும்,
குப்பை குவிந்தொழுகச் சொல் நாறும் சுற்றுப்புறம்.

முட்டைக்குள் இருக்கும் மட்டுமே சுகம்.
இனித் தனிக்க, சற்றே குனிந்தால் குட்டுப் போட்டுக் கொல்லக் காரணம் தேடும் கூட்டம்.

நாசூக்குப் பார்த்தவர்க்கு, இங்கே, நாளை.... இல்லாத் தேசம்.

பிழைத்தலுக்கான தற்பாதுகாப்பு, பின் பிடித்துப்போகும்
போர் போதை சுவைக்கும், சொற்களுக்குள் நுரைத்துத் ததும்பித் ததும்பி.

வரும் பெருங்கூட்டத்துள் வளர்ந்து ஒன்றாய்த் தொலைந்துபோகும்,
என் முகம்.

தொடர்ந்து வரும் தோல்தடிக்கா வெண் முட்டைகளும்
உடையும்வரை தமக்கென இனி ஒரு விதி செய்யும்

இவ்வுலகம் எதுவெனச் சரியாய்த் தெரியும் நாள்வரையும்
அது காக்கும்.

இருட்டில் கூட்டமாய்த் தாக்கும் கூகைகட்குள் கோழிக்குஞ்சாய் உயிர்வாழ இயலாது.

நெறித் தத்துவங்கள் மேலதிக புஷ்டிக்கான போசாக்குணவு
நடைமுறைத்தப்புதல்களோ வாழ்தலுக்கான தேவையின் அடிப்படை.

ஏற்கனவே முட்டையுடைத்து, உயிர்முளைத்து முழுதாய்ப் பிறந்துவிட்ட
ஒற்றைமனிதனுக்கு
எந்தவிதத்திலும் இங்கே மிக இன்றியமையாதது அவன் இருப்பு. ●



## நூல் அறிமுகம்:



### நட்சத்திரன் செவ்விந்தியனின்

# ‘எப்போதாவது ஒரு நாள்’

### -இறந்தகாலம் பற்றிய கலாபூர்வமான இரை மீட்பு

**அருந்ததி**

க கவிஞரின் பெயரைப் போலவே கவிதைகளும் அவை சொல்ல முனையும் சேதிகளும் வித்தியாசமாகத்தான் இருக்கின்றன. புதியதோர் தளத்தில் கவிதைகளை பதியம் போடும் முயற்சி தெரிகின்றது. எல்லாத் தளைகளிலிருந்தும் தன்னை மட்டுமல்ல, கவிதையையும் கூட விடுவித்துக்கொள்ள வேண்டுமென்கின்ற ஆவேசம் இருக்குமோ என இவர் கவிதைகளை வாசிக்கின்றபோது எண்ணமுடிகிறது.

சிக்மன்ட் பிராய்டின் ஆழ்மன ஆராய்ச்சியின் விளைவுகள் கவிதை இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை பிரெஞ்சுக் கவிதைகளில் நிறையவே காணலாம். மனிதனை அதிர்ச்சிக்குள்ளாக்கிய உலக மகாயுத்தமானது ஐரோப்பிய மனிதனிடத்தே ஏற்படுத்திய அவநம்பிக்கையின் வெளிப்பாடாக அதுவரை காலமும் நிலவி வந்த அறிவு பற்றிய, தர்க்கம் பற்றிய, இவைகளைத் தழுவி முகிழ்த்த கலை இலக்கியம்பற்றிய மறுபரிசீலனையைத் தூண்டியது. அன்றைய எல்லாவிதமான வடிவங்களும் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. எனவே உருவத்திலிருந்து உள்ளீடுவரை ஒரு புதிய பரிசோதனையையே நிகழ்த்தினார்கள். ‘டாடாயிசம்’, ‘சர்ரியலிசம்’ போன்ற இயக்கங்களின் தோற்றமும் அவற்றைச் சார்ந்த கலை இலக்கிய வெளிப்பாடுகளும் இதன் பின்னணியில் நிகழ்ந்தவைதான்.

இன்றைய ஈழப்போர் எம்மிடையேயும் பிரகடனப் படுத்தப்படாத ஓர் ‘படைப்பு இயக்கம்’ உள்ளியங்கும் முறைமைபற்றிய வெளிப்படையானதோர் ஆய்வு குறித்து சிந்திக்கத் தூண்டுகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது வருகின்ற படைப்புக்கள் இவற்றின் சில சாட்சியங்களாகின்றன.

‘எப்போதாவது ஒரு நாள்’ எனும் இக் கவிதைத் தொகுப்பு நூலும் அவ்வகையில் வைத்துப் பார்க்கப் பட வேண்டிய ஒரு தேவையைத் தருகிறது. யமுனா ராஜேந்திரன் தனது முன்னுரையில் குறிப்பிடுவதைப் போல் வழமையான தகவல்களைத் தாங்கி நிற்கும் ஈழக்கவிதைகளை எதிர்பார்ப்பவர்களுக்கு இவரது கவிதைகள் ஏற்புடையவை அல்ல என்பது உண்மைதான். எனினும் இவரது வெளிப்பாட்டு உத்திமுறையானது, அநேக கவிதைகளில் ஒரு வகையான மொழிபெயர்ப்புக் கவிதைகளின் வடிவ அமைப்பின் சாயலைக் கொண்டிருக்கின்றன என்பதையும் மறுக்கமுடியாது. மொழிபெயர்ப்புக் கவிதைகளில் கவிதையின் உயிர்நாடியான கவிதைப்பண்பு போய் அதன் கருத்து மாத்திரம் துருத்திக் கொண்டிருக்கும். இவரது பல கவிதைகளுக்கு இப்படிப்பட்ட ஆபத்து நேர்ந்திருக்கிறது. இப்படியான ஒரு அம்சம் இவரை வேறு கவிஞர்களிடமிருந்து வடிவரீதியில் வேறுபடுத்திக் காட்டினாலும்கூட அதனை ஒரு புதிய வடிவமாக ஒப்புக்கொள்

**உலக மகாயுத்தமானது ஐரோப்பிய மனிதனிடத்தே ஏற்படுத்திய அவநம்பிக்கையின் வெளிப்பாடாக அதுவரை காலமும் நிலவி வந்த அறிவு பற்றிய, தர்க்கம் பற்றிய, இவைகளைத் தழுவி முகிழ்த்த கலை இலக்கியம் பற்றிய மறுபரிசீலனையைத் தூண்டியது.**



ளமுடியவில்லை.

ஆனால் அனுபவங்களை வெளிப்படுத்து தலில் படைப்பாளிகளின் கண்ணோட்டம் சார்ந்து அவனது கலை ஆளுமை வேறுபடுகிறது. அது வெவ்வேறு வகையான பரிணாமங்களைத் தருகிறது.

கவிஞர் நட்சத்திரன் செவ்விந்தியனுடைய கவிதைகளின் முக்கியமான அம்சம் அவர் அதிகமாக எதையும் கற்பனை செய்யவில்லை என்பதுதான். கவிதைகளை வாசிக்கின்ற போது அவர் தன் மனதில் தோன்றியவற்றை அப்படியே பதிவு செய்திருப்பதாக, காட்சிப்படுத்தி இருப்பதாக உணர முடிகிறது. லூயிஸ் அரகோனுடைய (Louis Aragon) கவிதைகளைப் போல இவரது கவிதைகள் தொடர்ச்சியான படிமங்களைத் தருகின்றன. அதன் காட்சிருபச் சித்தரிப்புக்கள் ஒருவிதமான அதிர்வுகளை எழுப்புகின்றன என்பதை ஒப்புக் கொள்ளுகிற அதேவேளை, யுத்தமானது எமது சமூகத்தின் நாடி நரம்புகளில் எத்தகைய பயங்கரமான உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கின்றதென்னும் எதிர்கால அச்சத்தினைத் தருகின்றது. அவற்றின் வகை மாதிரிகளில் ஒன்றாக இக்கவிஞனின் வெளிப்பாடுகள் அமைகின்றன.

> **காட்சி ரூபச் சித்தரிப்புக்கள் ஒருவிதமான அதிர்வுகளை எழுப்புகின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிற அதேவேளை, யுத்தமானது எமது சமூகத்தின் நாடி நரம்புகளில் எத்தகைய பயங்கரமான உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கின்றதென்னும் எதிர்கால அச்சத்தினைத் தருகின்றது.**



*'கிறவல் பாதையில்*
*மண்ணில் புதைந்து வந்தேன் நான்*
*இக் கங்குல் காலத்தில்*
*ஈனஸ்வரத்தில் பூனை அழுகிறமாதிரி*
*மயில்கள் அகவுகின்றன'*

என்று 'காடு' என்னும் கவிதையில் இவர் தீட்டும் காட்சி இதற்கு நல்லதொரு உதாரணம். எமது மனோநிலைகளே இன்றைய புறவுலகைப் படைக்கின்றன. காரணம் எமது மனோநிலைகளில் இந்தப் புறவுலகு ஏற்படுத்தியிருக்கும் காயங்கள். இவைகள் ஆறும் வரை எல்லாவிதமான படைப்புகளும் அதன் ஆறாத ரணங்களில் இருந்தெழும் வலிகளின் மூலம்தான் காட்சிப்படுத்தும். அது தவிர்க்கமுடியாதது.

ஆனால் இதற்குமப்பால் இந்தக் காயங்களை, இந்த ரணங்களை, இந்த வலிகளை ஒருவிதமான வக்கிரத்தோடு ஆராதனை செய்வோர் எல்லாவற்றையுமே விடுதலையின் பெயரால் நியாயப்படுத்தியும் தவிர்க்க முடியாததென தர்க்கித்தும் வருகின்ற போக்கு, மனித மனங்களின் உடைதல்- சிதறல் பற்றி, குழந்தைகளின் துண்டிக்கப்பட்ட குழந்தைமை பற்றி, நொருங்கிப்போன அவர்களின் உலகம்பற்றி, சூனியம்பற்றி அலட்டிக் கொள்வதேயில்லை. எல்லாமே எங்கள் வீரக்கனவுகளுக்குள் அமிழ்ந்து போய்விடுகின்றன. இந்த நிலையிலேதான் இவைகளைப் புறந்தள்ளிக்கொண்டு உடைந்துபோன மனது பற்றி, குழந்தைகளின் சிதறிப்போன வாழ்வு பற்றி படிமங்களை அடக்கிக்கொண்டு நட்சத்திரன் செவ்விந்தியனின் கவிதைகள் வெளிக்கிளம்புகின்றன.

'நான்
இனி
நெடுகலும் தனித்துத்தான் போனேன்'

எனும் இவரது இக்கவிதை வரிகள் எழுப்புகின்ற சோகம் அளவிட முடியாதது. ஆற்றமுடியாதது. இந்த மாதிரியான வாழ்வின் பக்கம் பற்றி எந்த வீரப் பரம்பரை இன்று சிந்திக்கிறது?

*'யுத்தம் வந்து*
*ஊர்களுக்குள் நதிகளையும் சிற்றாறுகளையும்*
*புகவிட்டு*
*வாரியடித்துக்கொண்டு போயிருக்கிறது'*

என்ற வரிகளின் மூலம் 'வெறுமை' எனும் காட்சி ரூபம் பல்வேறு அர்த்தங்களை உள்ளடக்கிக் கொண்டு அழ வைக்கிறது.

இன்றைய எமது வலிகளிலிருந்து, வடுக்களிலிருந்து தான் எங்கள் உண்மையான படைப்புக்கள் பிறக்கமுடியும். இதனை இவரது கவிதைகள் நன்குணர்த்துகின்றன. வாழ்வு குறித்த நம்பிக்கையினை விதைப்பதாக படைப்புகள் அமையவேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வருகிற போதும், எமது காலம் ஏற்படுத்தும் அவநம்பிக்கையானது புரிந்து கொள்ளக்கூடியது. முதலில் அதன் காரணங்களை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய தேவை இருக்கிறது. அதுவே எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின் அடித்தளமாகவும் அமையும்.

*'இன்னமும்*
*ஆபத்தான எல்லையைப்பற்றியே*
*இரவில் கவலைப்படுகிறேன்*
*மிதிவெடிகளுக்கும்*
*ஆட்காட்டிக்குருவிகளின் சிடுசிடுப்புகளுக்காகவும்*
*தேசத்துரோகிகளுக்கு விழும் அடிகளுக்காகவும்*
*என் ஜீவனே இரவில் பயப்படுகிறது'*

என்று எழுதுகிறார். இதுதான் இன்றைய யதார்த்தம். இவைகளைத் தாண்டித்தான், இவைகளைப் படம் பிடித்துக் காட்டுவதன் மூலமாகத்தான் இவைகளுக்கான மாற்று உருவாக முடியும். எல்லாமே சர்வ சாதாரணமாகிப் போய்விட்ட சூழலில் மனித மதிப்பீடுகளின் இன்றைய நிலை பற்றிய துல்லியமான புரிதலை இவர் இப்படிச் சொல்கிறார்.

*'பகலில்*
*ஒரு பீடி இழுக்கிறதைப்போல*
*எல்லாம் செய்யலாம் போலுள்ளது'*

உண்மைதான்.

புலம்பெயர்ந்து வாழும் கவிஞர்களிடத்தே இருக்கக்கூடிய அவநம்பிக்கை, பிரிவாற்றாமை, சோகம்,

**புலம்பெயர்ந்து வாழும் கவிஞர்களிடத்தே இருக்கக்கூடிய அவநம்பிக்கை, பிரிவாற்றாமை,சோகம், தனிமை என்ற எல்லாக் கூறுகளும் இவரிடத்தே வெளிப்பட்டாலும் மாறாக, இவரே ஈழப்போரின் விளைவுகளைத் தாங்கி நிற்கின்ற ஒரு பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்தும் கவிதைகளில் இயல்பான சோகம் எம்மைப் பற்றிக் கொள்கிறது.**

தனிமை என்ற எல்லாக் கூறுகளும் இவரிடத்தே வெளிப்பட்டாலும் மாறாக, இவரே ஈழப்போரின் விளைவுகளைத் தாங்கி நிற்கின்ற ஒரு பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்தும் கவிதைகளில் இயல்பான சோகம் எம்மைப் பற்றிக்கொள்கிறது. யுத்தத்தின் நேரடிப் பாதிப்புக்குள்ளானவர்களின் ஆற்றமுடியாத் துயர்பற்றி இவரையும் இவர் கவிதைகளையும் மையமாக வைத்துணரலாம்.

*'கொள்ளப்படாமலே போன*
*நித்திரைத்துயருடன் இப்போது படுத்திருக்கிறேன்*
*தூரதேசப்பயணங்களின் பின்னால்*
*நான் பிரிந்துபோவது உறுதியாகிவிட்டது'*

என்பதான வரிகள் (பிரிவுத்துயர்) எங்கள் எல்லோருக்குமான எழுதப்படாத பொதுவிதிகள்.

நவீன எஜமானர்களை வளர்த்துவிட்ட வக்கரித்துப்போன சமூகத்தோடு எந்தவகையிலும் சமரசம் செய்துகொள்ள முடியாமல் தன்னை மடித்துக் கொண்ட, இல்லை இல்லை இந்த சமூகத்தால் மடிந்து போன கவிஞை சிவரமணிக்கும் சமூகத்தின் அடிவேர்வரை படிந்து போயிருக்கும் துப்பாக்கிக் கலாசசாரத்திற்குப் பலியாகிப்போன கவிஞை செல்விக்கும் அர்ப்பணிப்பாகும் இக் கவிதைகள் ஒட்டுமொத்தமான எமது மக்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கும் மருந்தாக அமையும் 'எப்போதாவது ஒருநாள்....'. இந்த நம்பிக்கை இந்தக் கவிஞனிடம் நிறையவே உண்டு. ●


## எப்போதாவது ஒருநாள்

(கவிதைகள்)

**நட்சத்திரன் செவ்விந்தியன்**



வெளியீடு:
தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48 Rani Anna Nagar
Kalaignar Nagar
Chennai 600 078
India.

மின்னஞ்சல் முகவரி: thamaraiselvi@intamm.com
இணைய தளம்: www.intamm.com/nool/thama


# ஐயாண்டுக்கு ஒருமுறை எம் பூசை

மீண்டும் வாருங்கள்
வாக்குக் கேட்டு....

உங்களுக்குப் பாராளுமன்றம்
எங்களுக்கு
பாதாள மயானக் குழிகள்.

போங்கள்
போய்....
அவசரகாலச் சட்டத்தை
அமுல்படுத்தும்
அனுமதியைப் பெறுங்கள்.

மீண்டும்
வாருங்கள்
வந்து....
புள்ளடி போட்ட
'விரல்களையும்
பரிசாக
மை பூசிய விரலையும்
சுடுங்கள்
அல்லது
வெட்டுங்கள்.

மீண்டும்
இன்னுமொரு
ஐந்து வருடத்தின் பின்
வாருங்கள்.

எமக்கு
நீங்கள் வெட்டிய
புதைகுழிகளே
உங்களுக்கு
உடம்பு முழுக்க
ரெத்தம் பூசும்
எம் இனத்தின்
ஞாபகார்த்தமாக. ●

**மாரிமுத்து யோகராஜன்**

# அம்மா மணம்

வசந்தி-ராஜா


டாவின்சி

இளம் சிவப்பு நிறத்தில் பெயின்ற் பூசப்பட்டு, மென்மையான பஸ்டால் நிறங்களில் பொம்மைப் படங்கள் போட்டவோல் பேப்பரினால் அலங்கரிக்கப்பட்ட அந்த அழகிய அறைக்குள், எனது அலங்கரிக்கப்பட்ட தொட்டிலுக்குள் கையையும் காலையும் உற்சாகமாக அடித்துக்கொண்டு சுற்றிவர உள்ள பொம்மைகளுடன் கதை பேசி விளையாடிக் கொண்டிருக்கிறேன் நான். நான் யாரென்று சொல்லவில்லையா. நான்தான் காவ்யா.

நான் உங்கள் உலகத்துக்கு வந்து ஐந்து மாதங்கள்தான் ஆகின்றன. அப்பப்பா என்ன ரம்யமான உலகம் உங்களுடையது. அதைத்தான் கொஞ்சம் கொஞ்சமாக ரசிக்கப் பழகிக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கெப்படியோ தெரியவில்லை. எனக்கு ஒரு அம்மா இருக்கிறா. அவவைப்பற்றி நினைத்தாலே எனக்கு உடம்பெல்லாம் ஒரே பரவசம். உடனே கையைக் காலை அடிக்கவேணும்போல் இருக்கும். இதோ இந்தத் தொட்டிலுக்குள் படுத்தருக்கும்போது, குசினிக்குள் வேலை செய்து கொண்டிருக்கும் அம்மா தெரிகிறா. அந்த நிம்மதியில்தான் இப்படி விளையாடுகிறேன். இல்லாவிட்டால் அடித்து வைத்துக்கத்தி ஆளைக் கூப்பிடுவேன். அதைவிட அப்பா என்றும் ஒருவர் காலையிலும் இரவிலும் வந்து என்னை எட்டிப் பார்ப்பார். தானும் என்னுடன் செல்லம் பொழிவதாக எண்ணி ஏதேதோ பேசுவார். எனக்கென்னவோ அவரைப் பிடிக்காது. ஏன் தெரியுமா? என் அம்மாவோடு அவர் முட்டி முட்டிப் பேசுகிறார். என்னுடன் பேசும்போது அவர் கை அம்மாவை அணைத்திருக்கும். எனக்கு ஒரே கோபம் கோபமாக வரும். அம்மாவுக்கு உதிர்க்கும் சிரிப்பை அவருக்குக் காட்டமாட்டேன். உம்மென்று இருப்பேன்.

"என்னப்பா 'சிரிக்கிறாள் சிரிக்கிறாள்' என்பீர். அவள் உம்மென்றிருக்கிறாளே" என்பார். அம்மா விழுந்து விழுந்து சிரிப்பா. அவர் என்னை மறந்து அம்மாவுடன் செல்லம் கொஞ்சுவார். அம்மாவும் சும்மா கடமைக்காக "ஐயய்யோ காவ்யாக்குட்டி பார்க்குது. தள்ளி நில்லுங்கோ" என்பாளே ஒழிய அவரைப் பிடித்துத் தள்ளமாட்டா. எனக்கோ எழும்பிப்போய் அவரின் கையை விலக்கிவிடவேணும் போலை இருக்கும். என் அம்மாவின் அன்பைப் பங்குபோட இவர் யார் என்னும் கோபத்தில் உயிர் போவது போல கத்துவேன். "காவ்யா ஈரமாகிவிட்டாள் போல" என்றபடி அம்மா ஓடிவருவா. "சரியப்பா எனக்கு நேரமாகிவிட்டது. நீரும் உம்மட மகளும். எப்ப நான் வந்தாலும் அடிச்சு வைச்சுக் கத்துறாளே" என்றபடி வேலைக்குப் புறப்படுவார்.

அம்மாவும் என்னை அணைத்தபடி பதட்டத்துடன் "சரி போட்டு வாங்கோ. அவள் விடுறாளில்லை" என்று கூறிக்கொண்டு உடுப்பு மாற்றும் வேலையில் மும்முரமாவா. அவர் போனபின் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். குளிக்கவார்க்கையில், எண்ணை பூசி என் உடம்பை மசாஜ் பண்ணுகையில், உடுப்பு மாற்றுகையில் இப்படி அம்மா என்னையே எப்போதும் தொட்டுக்கொண்டிருக்கவேணும் போலை இருக்கும்.

அம்மா என்னருகில் வரும்போதெல்லாம் ஒரே வாசனையாயிருக்கும். அந்த மணத்தை அனுபவிப்பதற்காகவே அடிக்கடி பொய்யாய் அழுது அவவை கூப்பிடுவேன். அறை வாசலில் வரும்போதே அம்மாதான் வருகிறா என்று வாசனையை வைத்தே கண்டுபிடித்து விடுவேன். பால் மணம், உள்ளி மணம், சாம்பிராணி மணம், சான்டல்வூட் சோப் மணம், ஷம்போ மணம், உடுப்பில் ஸொஃப்னர் மணம் என்று எல்லாம் கலந்த ஒரு ரம்யமான வாசனை அம்மாவிற்குரியது.

அணிற்குஞ்சுபோல அம்மா மடியில் குடங்கிக் கிடந்து பாலருந்து கையில் என்முகம் பார்த்துக் கதைகேட்டபடி இருப்பா. அம்மா முகம் பார்த்துப் பாலருந்தும் அனுபவம் இருக்கிறதே, அது ஒருவகை தெய்வீக உணர்வாகும். நான் மயங்கிப் போய் கொஞ்சம் கொஞ்சமாக கண்ணை அயர ஆரம்பித்தால், செல்லமாகப் பாதத்தில் ஒரு

சிறு சுண்டுதல் கிடைக்கும். திடுக்கிட்டெழும்பும் என்னை என் வயிறு நிறையும்வரை விடவே மாட்டா. சில சமயம் எங்கள் இந்த பரிவுர்த்தனையைக் குழப்புவதுபோல ரீவீ சத்தம்போடும், ரெலிபோன் அலறும் அல்லது யாராவது அம்மாவுடன் கதைக்க முற்படுவார்கள். பாலருந்தியபடியே ஒரு உறுமல் உறுமுவேன். உடனே அம்மா எல்லாவற்றையும் நிறுத்திவிடுவா. அது எங்கள் இருவருக்குமான நேரம். அதில் இடையூறு செய்ய ஒருவருக்குமே உரிமை இல்லை. அப்பா உட்பட. பசி தீர்ந்ததும் நான் உறங்கிப்போய்விடுவேன்.

பின்னர்தான் அம்மா அவசரமாகச் சமைத்து முடித்து, உடுப்புத் துவைத்து, வீடு சுத்தம் செய்து, சிறிது ஓய்வு எடுப்பா போல. வயிறார உண்ட களை தீர நானும் நிறைய நேரம் தூங்குவேன். இதனால் நல்லபிள்ளை, நித்திரைக்காரி என்றெல்லாம் பெயர் கிடைக்கும். பின் என்ன? இப்படிப்பட்ட ஒரு அம்மாவுக்கு அளவுக்கு மிஞ்சிக் கரைச்சல் கொடுப்பதா?

முழிப்பு வந்ததும் சுற்றுமுற்றும் பார்ப்பேன். சில சமயம் அம்மா இன்னும் குசினிக்குள் நின்று கொண்டிருப்பா. சில சமயம் எனது அறைக்குள் இருக்கும் ஆடும் நாற்காலியில் அரைத்தூக்கத்திலிருப்பா. பாவம் குழப்பக்கூடாதென்று அமைதியாய் சுற்ற வரத் தெரியும் பொம்மைகளுடன் விளையாடுவேன் அல்லது சீலிங்கில் ஒட்டியுள்ள ஒளிரும் நட்சத்திர ஸ்டிக்கர்களை எண்ணுவேன். என்ன ஆச்சரியமாயிருக்கா? எனக்கு எண்ணத் தெரியுமென்று. ஆமாம் நான் வயிற்றிலிருக்கும்போதே எல்லாம் பயில ஆரம்பித்துவிட்டேன். அம்மா அப்போதே A, B, C, D, 1, 2, 3, 4, அ, ஆ சம்பந்தப்பட்ட பாட்டுகளை அடிக்கடி பாடுவா. அதனால் ஏராளமான விஷயங்கள் என் மனதில் பதிந்துள்ளன. இன்னும் நாக்கினை உபயோகிக்கத் தெரியவில்லை. இல்லாவிட்டால் இப்போதே தெரிந்தவற்றைச் சொல்லி உங்களை அசரவைத்து விடுவேன். நல்ல வீணை, சித்தார் இசை, ஏன் தமிழ் சினிமாப்பாட்டுக் கேட்ட அனுபவம் கூட உண்டு. உள்ளே இருக்கும்போது இவை எல்லாம் எத்தகைய சுகானுபவத்தைத் தரும் தெரியுமா?

நன்கு விழிப்பு வந்தவுடன் சிறிது சத்தங்களை எழுப்புவேன். ஈர உணர்வு ஏற்பட்டால் கொஞ்சம் சத்தமாகவே அம்மாவை எழுப்புவேன். திடுக்கிட்டெழும் அம்மா ஓடி வருவா. அள்ளி எடுத்து உடை மாற்றி அமுதூட்டுவா. பின்னர் இருவருமாக வரவேற்பறைக்குப் போவோம். அங்கு கார்பெட் தரையில் எனது விளையாடும் விரிப்பு ஒன்றை விரித்து சுற்ற வர பொம்மைகளை வைத்து விடுவா. நான் ஓரக்கண்ணால் அம்மாவைப் பார்த்தபடி விளையாடுவேன். அவவும் ரீவீயில் அரைக் கண்ணும் என் மேல் அரைக்கண்ணுமாயிருப்பா. இருவருக்கும் தெரியும் இனி அப்பா வரப்போறாறென்று. எனக்குக் கொஞ்சம் பிடிக்காதென்றாலும் குடும்ப அங்கத்தினராதலால் பழகிப்போய்விட, நானும் கதவுமணி ஓசைக்காய் எதிர்பார்க்கப் பழகி விட்டேன். ஆனாலும் அம்மா அதில் காட்டும் அதீத எதிர்பார்ப்பு ஒரு பொறாமையைத் தருவதுமுண்டு.



அப்பா வந்து முகம் கழுவி, சாரம் மாற்றி வர, அம்மா என்னை அவருடன் விட்டுவிட்டு சிற்றுண்டி, தேநீர் கொண்டு வரப்போய்விடுவா. அவர் என்னைச் சிறிது ஆர்வத்துடன் பார்ப்பார். பாவமே என்று ஒரு சிறு முறுவலை உதிர்த்து விட்டு விளையாடத் தொடங்கி விடுவேன். அவரும் ஆர்வம் குறைந்து ரீவீயில் மூழ்கி விடுவார். சில சமயம் நான் ஒரு பொம்மைமீது அழுத்திக் கிடந்தால்கூடக் கவனிக்காமல் ரீவீ பார்த்துக்கொண்டிருப்பார். வேணுமென்றே அம்மாவிடம் கோள்மூட்டும் முனைப்பில் அலறுவேன். அம்மா ஓடிவந்து பொம்மையை எடுத்துவிட்டு அவருக்கு ஒரு 'டோஸ்' விட்டுட்டுப் போவா. நான் திருப்தியாய் புன்னகை செய்வேன். அவர் முறைப்பார். இது எங்களுக்கிடையில் நடக்கும் ஒருவித பனிப்போர். அம்மாவின் அன்புக்காய் இருவரும் நடத்தும் யுத்தம்.

இப்படியே எங்கள் வாழ்க்கை எந்தவித இடைஞ்சலுமின்றி சில சில மாற்றங்களுடன் போய்க் கொண்டிருக்கும்போது, ஒருநாள் அப்பா வேலையால் வரும்போது கையில் ஒரு காகிதத்துடன் பரபரப்பாக வந்தார்.

"ரம்யா, டே கெயாருக்கு இடம் கிடைத்திருக்கப்பா. ஆறாம் மாதம் தொடங்கலாம். நல்லதாப் போச்சு. நீர் வேலைக்குப் போகக் கணக்கா வந்திருக்கு" என்று. அடுக்கிக்கொண்டே போக அம்மாவின் முகம் கலவரமாக மாறுகிறது. அதென்ன அது புதுப் பெயர் 'டே கெயர்'. நான் கேள்விப்படவில்லையே? ஏன் அப்பா சந்தோஷப்படுகிறார். அம்மா கலவரமடைகிறா. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அடுத்தடுத்த நாட்கள் எனக்கு மிகவும் வித்தியாசமாயிருந்தன. அம்மா கண்கலங்குவதும் அப்பா தேற்றுவதும் அடிக்கடி நடைபெற்றன. என்ன அம்மாவுக்கு ஏதும் நோய்நொடியா? டேகெயர் என்பது ஒரு ஆஸ்பத்திரியா? எனக்குள் ஆயிரம் கேள்விகள். விடை தெரியவில்லை. இடையிடையே அம்மா எனக்குப் புட்டியில் பால் தர முயற்சித்தா. எங்கள் தெய்வீக நேரத்தைக் குழப்பும் இப்புட்டிப்பால் முயற்சி எனக்கு ஆத்திரத்தைத் தர அடம்பிடித்து மறுத்தேன். பல புட்டிப்பால்கள் கொட்டப்பட்டன. நான் வென்றேன். ஏன் என் அம்மா இதையெல்லாம் செய்கின்றா என்று கேள்விகள் எழுந்தாலும், இது அவ விரும்பிச்செய்யவில்லை என்பதை அவவின் கண்ணீர்மூலம் புரிந்து கொண்டேன்.

இப்படியான போராட்டங்களுக்கிடையில் ஒரு நாள் நாங்கள் மூவரும் நல்லா வெளிக்கிட்டுக்

கொண்டு எங்கோ புறப்பட்டோம். காலை எட்டுமணி என்பதால் பின்னேர உலாத்து இல்லை என்று புரிந்தது. அம்மா கையில் புதிதாய் ஒரு பொம்மைப்படம் போட்ட பை, அதற்குள் பல புட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டது போலத் தெரிந்தது. பதினைந்து நிமிஷ நேரப் பிரயாணத்தில் ஒரு புதிய கட்டிடத்தினுள் நுழைந்தோம். என்னை கார் சீற்றுடன் சேர்த்து தூக்கிக் கொண்டு அப்பா வர, அம்மா அந்தப் புதிய பையுடன் பின் தொடர்ந்தா. கட்டிடம் உட்பக்கத்தில் மிக அழகாக இருந்தது. ஒரு திறந்த ஹாலில் சிறுவர் சிறுமியர் குதூகலமாக விளையாடிக் கொண்டிருந்தனர். சைக்கிள், கார், ஸ்கூட்டர், மீன், வாத்து என்று ஏராளம் விளையாட்டுப் பொருட்கள். சுவரெல்லாம் நிறநிறமாய் அழகிய படங்கள். ரம்யமான சூழல்தான். ஆனால் நான் ஏன் இங்கு...? எண்ணிக் கொண்டிருக்கும்போதே அப்பா ஹாலைத் தாண்டி ஒரு அறைக்குள் போகின்றார். அங்கு சிறிய குழந்தைகள் பல, மென்மையான ஸ்பொன்ஞ்ச் விரிப்புகளில் தவழுவதும் தத்தி நடைபயிலுவதும் இழுத்துக்கொண்டு உடம்பு பிரட்டி நகர முயல்வதுமாக இருந்தனர். சிலர் என்னைப் போல ஒரேயிடத்தில் கிடந்து மேலே தொங்கும் பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தனர். சுவரெல்லாம் வர்ணங்களில் பொம்மைப்படங்கள். மூன்று நான்கு பெண்கள் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தனர். ஒரு பெண் தரைவிரிப்பில் அமர்ந்து பாடிக்கொண்டிருந்தா. எல்லாம் என் அம்மா பாடும் பாடல்தான்.

எங்களைக் கண்டதும் ஒரு வெள்ளை இனப்பெண் வந்து தன்னையும் மற்றவர்களையும் அறிமுகப்படுத்திக்கொண்டு தன்னை நோக்கி வரும்படி கையை நீட்டினா. இவ யார் என்னைத் தூக்க என்று அடித்து வைத்துக் கத்தினேன், அம்மாவைக் கௌவிக் கொண்டு. ஏதோ சொன்னார்கள். அம்மா சப்பாத்தைக் கழற்றிவிட்டு உள்ளே சென்று தானும் என்னுடன் மென் விரிப்பில் அமர்ந்துகொண்டா. அப்பா பையிலிருந்த புட்டிப் பால்களையும் வேறு கிறீம், நப்பிகள், சூப்பி, எனது படுக்கை விரிப்பு என்பவற்றையும் எடுத்து ஒரு பெண்ணிடம் கொடுத்தார். ஏன் என் பொருட்களை இவர்களிடம் கொடுக்கிறார்கள்? என்று கேள்வி எழுந்தாலும் இப்போதைக்கு அம்மாவுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் முயற்சி போதும் என அதை ஆராயாமல் விட்டுவிட்டேன். என்னை அம்மாவிடமிருந்து பிரிக்கப் பல முயற்சிகள் நடைபெற்றன. நானும் இடம் கொடுக்கவில்லை. அம்மா கலவரத்துடன் உட்கார்ந்திருந்தா. ஆனால் என்னைப் பலவந்தமாகக் குடுக்க முயற்சிக்கவில்லை. அந்தளவில் எனக்கு மகிழ்ச்சியே. தானே உள்ளே சென்று பால் புகட்டினா. அம்மாவின் இச் செய்கைகள் அந்தப் பெண்களுக்கு அவ்வளவு திருப்தியாக இருக்கவில்லை. இப்பிடியே நான் அம்மாவுடன் ஒட்டியபடி அந்தநாள் முடிந்தது.

பின்னேரம் எங்களை ஏற்றுவதற்கு அப்பா வந்தபோது அவர்கள் ஏதேதோ சொன்னார்கள். 'நாளைக்கு அம்மா வரவேண்டாம்' என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

ஓ நாளையும் வரப்போறனா? சரி பார்ப்போமே ஒரு கை. நான் போராடத் தயாரானேன்.

எல்லாம் புரிந்தது. அம்மா வேலைக்குப் போகப் போறா. அதற்காக என்னைக் காலையிலிருந்து மாலைவரை இங்குவிடப் போகிறார்கள். நான் புட்டிப்பால் அருந்தவேணும். அம்மா மணம் கிடையாது. புதிய பெண்கள் மணங்கள்தான் இனிக் கிடைக்கும். எனக்கு ஒரே ஒரு சந்தேகம். என் அம்மாவால் இதற்கு எப்படிச் சம்மதிக்க முடிந்தது. ஆனாலும் அம்மாவின் கலங்கிய முகத்தைக் காண்கையில் இது என் விருப்பமின்றிப் பலவந்தமாக நடக்கமுடியாது என்றும் புரிந்தது. என் அம்மா விடமாட்டா என்று நம்பிக்கை இருந்தது.

காரில் போகும்போது வழி நெடுக அப்பா அம்மாவைக் கோபித்தபடி வந்தார். அம்மாவோ "கடைசி ஒரு வயது மட்டுமாவது நான் பிள்ளையுடன் நிற்கப்போகிறேன்" என்று வாதாடினா. "அப்போ இவ்வளவு கஷ்டப்பட்டு எடுத்த வேலையை விடப் போறீரா?" என்று கேட்டார் அப்பா. "ஓம். அதுக்கென்ன? அப்பிடி ஒரு வேலை பிறகு எடுக்கமுடியாதா?" என்றா அம்மா.

வீட்டில் முன்பிருந்த நிம்மதி போய்விட்டது. அம்மா இரவு முழுவதும் கண்கலங்கியபடி என் அருகிலேயே இருந்தா. நித்திரை கொள்ளவில்லை. என்னைத் தடவுவதும் விம்மி விம்மி அழுவதுமாயிருந்தா. "நாளைக்கு டேகெயாரில் விடுவதானால் போத்திலுக்கை பாலைப் பழக்கும். இல்லாட்டி உம் விருப்பம். வீட்டில் வைச்சிரும். நீரும் உம்முடைய வேலையும்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

குழம்பிப்போய் அழும் அம்மாவைப் பார்க்கப் பாவமாயிருந்தது. என்னால்தானே அவவுக்கு இத்தனை கவலை. பாவம் எனக்கும் சேர்த்து உழைக்கத்தானே இத்தனை பாடு. எப்பிடியும் ஒரு வயதில் பிரியத்தான் போறம். பிறகு ஏன் பாடுபட்டு எடுத்த வேலையை விட்டு அம்மா கஷ்டப்படவேணும். பேசாமல் விட்டுக் குடுக்கட்டா? என்று ஒரு நல்லெண்ணம் வந்தது.

ஐயோ நான் இன்னும் இழுத்துக்கொண்டு ஊரத் தொடங்கவேயில்லை. ஒரே இடத்தில் உடம்பு மட்டும் பிரட்டிக்கொண்டு கிடக்கும் என்னை அவர்கள் அம்மாபோல் கவனிப்பார்களா? நினைக்கவே பயமாக இருந்தது. ஆனாலும், அங்கிருந்த மற்றப் பிள்ளைகளை விட நான் மட்டும் என்ன உயர்வு என்று எண்ணியபோது இதுதான் இந்நாட்டில் குழந்தைகளின் விதி போலும் என முடிவெடுத்தேன். அம்மாவின் சிக்கலையும் தீர்க்கத் தீர்மானித்தேன்.

இந்தத் தடவை அம்மா போத்தல்பாலுடன் வந்தபோது சுரத்தின்றி அம்மாவின் முகம்பாராது 'மடக் மடக்' என்று குடித்துவைத்தேன். கைகால் அடித்து விளையாடும் உற்சாகம் மனத்தில் இல்லை. வாழ்வின் ரம்யத்தில் பிடிப்பு விட்டுப் போயிற்று. என் படுக்கைவிரிப்பின் தொட்டுணர்வு. இதமான பாதுகாப்புத் தருவது போன்ற உணர்வு தர, அதை மார்போடு அணைத்தபடி தூங்கிப் போனேன், மறுநாள் யந்திரத்தனமான வாழ்க்கையை ஆரம்பிக்கும் முடிவுடன். ■

# இந்திய அவைதீக மரபும் பின்னைநவீனத்துவமும்


**வே. மு. பொதியவெற்பன்**

## 'உயிர்நிழல்' இல் வெளியான தமிழவனின் செவ்விமீதான பதிவு

அச்செவ்வியின் பிரச்சினைப்பாடுகளாக மூன்று முகாமையான அம்சங்களை நான் அவதானிக்கிறேன். அவையாவன:

- புலம்பெயர்வாழ்வு, புகலிட இலக்கியம் இவற்றால் மட்டும் உருவாகி வருவதாக அவர் முன்னிறுத்த முயலும் அனைத்துலகத் தமிழ்ப்பண்பாடு எனபதான அபாரப் பாய்ச்சல்
- பின்னைநவீனத்துவங்கள் பிரயோகிக்கப்பட வேண்டிய திசைவழிகள் மற்றும் மாக்சியத்தை செழுமைப்படுத்துமுகமாக அவற்றூடான உரையாடல் தேவையின் முகாமை.
- சுயமண்சார் இந்திய அவைதீக மரபு குறித்த தேடல் - இன்றைய சூழலில் அதன் இன்றியமையாமை- இவை குறித்த அவரது சமீபத்திய புரிதல்களும் வலியுறுத்தல்களுமான திடீர்ப் பாய்ச்சல்

இப்பிரச்சினைப்பாடுகளுக்கு ஊடாக தமிழவனின் செவ்வியை முன்னிறுத்தி அதற்கான எதிர்வினையாகவும் இதற்கூடாக இந்திய அவைதீக மரபும் பின்னை நவீனத்துவமுங் குறித்த என் பார்வைகளை ஒரு காத்திரமான தத்துவ உரையாடலை 'உயிர்நிழ



லில்' தோற்றுவிக்கு முகமான ஒரு திறப்புரையாகவும் என் பதிலினை இங்கே நான் முன்வைக்கிறேன்.

"புலம்பெயர் இலக்கியம் என்பதை இதுவரை இல்லாத வியாக்கியானம் கொண்டதாய்த்தான் பார்க்கணும். 'புலத்தை விட்டுப் பெயர்ந்த' என்ற அர்த்தத்தைவிட 'பெயர்ந்த பிறகு வசிக்கிற இடம்எது, அதன் பண்பாடு, மரபு எந்தளவு நமக்குள்ளே புகுகிறது என்பதுதான் முக்கியம்" என்கிறார்.

இக்கணிப்பு ஏற்புடையதே. எண்பதுகளிலேயே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலான ஈழ- புலம்பெயர் கவிதைகளைத் தம் முனைவர் பட்ட ஆய்விற்காக மேற்கொண்ட கே. எம். வேணுகோபால் தமது அவ்வாய்வில் இவ்வாறே 'புகலிட' இலக்கியம் எனப் பாவித்தார். எனவே இங்கு 'புலம்பெயர்' என்பதினும் பார்க்கப் 'புகலிடம்' எனும் பதப்பிரயோகமே பொருத்தப்பாடுடையதாகிறது.

ஆனால் தமிழவன், "இந்தியத் தமிழர்களின் 'குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டும்' பார்வைகளைக் கேள்விகளுக்குட்படுத்தும் ஒரு போக்கு புலம் பெயர் இலக்கியத்தில் இருக்கிறது" எனவும், "இந்த அம்சமே தமிழிலக்கியத்தை ஒரேவீச்சில் ஒரு அனைத்துலக மரபிற்குள் தள்ளும் அபாரப் பாய்ச்சல்" எனவும் வியந்து போகையில் நாமும் வியக்கிறோம். "இப்படியே சிந்தித்து சமீபத்தில் உருவாக ஆரம்பித்திருக்கிற அகில உலகத் தமிழ்ப் பண்பை வரையறை செய்யணும்" என்கிறார்.

நமக்கு இங்கேதான் எழுகின்றன சில கேள்விகள்!

- 'குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் மனோபாவம்' இந்தியத் தமிழர் மத்தியில் மட்டும் தானா? ஏனைப் பிறரிடம் இல்லையா?
- 'அனைத்துலக மரபு' - 'அகில உலகத் தமிழ்ப் பண்பு' இன்னோரன்ன பாவிப்புகளை என்ன அர்த்தத் தளத்தில் பிரயோகிக்கின்றார்?
- இத்தகைய நோக்குநிலை எந்தவிதத்தில் பின்னைநவீனத்துவ அணுகுமுறையுடன் பொருத்தப்பாடுடையதாக அமையக்கூடும்?

மேலும் கைலாசபதி, சிவத்தம்பி மாதிரி இலக்கிய விமர்சனம், நுஃமான், சிவசேகரம் பாணி.... இந்த இலக்கிய விமர்சகர்களின் போதனைகளை எந்தளவு துடைத்தெறிய புலம்பெயர் தமிழ் பழகிக்கொள்கிறதோ அந்தளவு அது தன்குறியைச் சென்றடையும் எனவும் போதிக்கின்றார்.

இந்த மாதிரி 'மாதிரி' 'பாணி' என அவர்களை ஒரு மாதிரியாக அடையாளப்படுத்த முயல்வது அவர்களுக்கு இடையிலான தனித்துவக்கூறுகளை இனங்காணாமல் க.நா.சு. மாதிரி பட்டியல் பாணியினைத் தமிழவனாலும் கைவிடமுடியாதமாதிரி அவருக்கு நேர்ந்த அவலத்தையே எமக்கு உணர்த்துகிறது.

மேற்குறித்த அவரவர் பாணியையும் இனங்காண இங்கே நான் புகவில்லை. இவர்களோடு நானுங்கூட முரண்படுவதுண்டு. அது வேறு. ஆனால் இவர்களில் கா. சிவத்தம்பி, கட்சிசார் மார்க்சியர்களின் பார்வையினைக் கடந்தவராய்ச் சமீபத்தில் தமிழ்ச்சூழலில் 'கணையாழி'யிலும் 'காலக்குறி'யிலும் எதிர்வரும் என் பொன்விழா மலரான 'பொதிகை'யிலுமாக மார்க்சியத்துக்கும் பின்னைநவீனத்துவத்துவங்களுக்குமான உரையாடலின் முகாமை குறித்தும்


அதன் பன்முகத்தன்மை குறித்தும் காத்திரமான அணுகுமுறைகளை முன்வைத்துள்ளார். (பின்னைநவீனத்துவம் குறித்துப் பேச இங்கு த.மு.எ.ச. மாநாட்டில் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது)

தமிழவன், கைலாசபதி, சிவத்தம்பி ஆகிய மார்க்சியர்களோடு தாம் முரண்பட நேர்வதனைக் காத்திரமாக முன்வைக்க முயல்வதில்லை. ஏலவே எம்.ஜி. ஆர் தமிழக முதல்வராக இருந்தபோது மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ்மாநாட்டில் கலந்து கொண்டதற்காக அவர்கள் இருவரையும் அரசின் கௌபீனந்தாங்கிகள் (கோவணந்தாங்கிகள்) என்றெல்லாம் தூற்றியது தமிழவனின் 'இலக்கு'. அப்புறம் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது தஞ்சையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின் பேராளராக சிவத்தம்பி அழைக்கப்பட்டிருந்தார். ஆனபோதிலும் அம்மையாரின் அரசு அனுமதி மறுத்ததோடல்லாமல் சிவத்தம்பி முதலான ஈழ மற்றும் மலேசியத் தமிழர்களையும்கூட வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பி விருநதோம்பியது. ஆனால் நம் தமிழவனோ அந்த மாநாட்டில் கட்டுரை படைத்தார். அரசிழைத்த கொடுமையினும் பார்க்க தமிழவன் சாதித்த மௌனம்தானே மாகொடிது. இதுபற்றி ஏலவே காலக்குறியில் நான் 'தமிழவன் சரித்திரத்தில்'படிந்த நிழல்கள் என முன்வைத்தேன்.

இனி, அவர் குறிப்பிடும் 'அகில உலகத் தமிழ்ப் பண்பு' என்பதற்கு வருவோம். தமிழ்ப்பண்பு என்னும் போது அது ஆங்காங்கே தமிழர் வதியும் பிரதேசத்தின் பிரத்தியேகத்தன்மையைப் பொறுத்தே அமையக்கூடிய ஒன்று அல்லவா?

தமிழகச்சூழல் வேறு. இந்தியாவிலேயே இடம்பெயர்ந்து தமிழர் வதியும் பிரதேசசூழல் வேறு. இவ்வாறே போராடும் பூமியின் களத்தில் நிற்கும் இருப்பாய் ஈழச்சூழல் வேறு, புலம்பெயர்ந்து வாழும் புகலிடச்சூழலும் வெவ்வேறே. தமிழகச்சூழலில் நிலவும் புலிகள்பற்றிய பார்வைகளையே உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோமே.

○ 'இந்தியத் தேசிய'வாதிகள் மற்றும் 'சனாதனத் தேசிய' 'துக்ளக்' சோ முதலானவர்கள் மத்தியிலிருந்து புலிகள் பாசிஸ்டுகள், அவர்களையோ அன்றி ஈழத்தின் தேசியவிடுதலை குறித்த எத்தகு முயற்சிக்கும் தார்மீக ஆதரவளிப்பதோ தேசத்துரோகம் என்பதான பார்வை.



"புலம்பெயர் இலக்கியம் என்பதை இதுவரை இல்லாத வியாக்கியானம் கொண்டதாய்த் தான் பார்க்கணும். 'புலத்தை விட்டுப் பெயர்ந்த' என்ற அர்த்தத்தைவிட 'பெயர்ந்த பிறகு வசிக்கிற இடம்எது அதன் பண்பாடு மரபு எந்தளவு நமக்குள்ளே புகுகிறது என்பதுதான் முக்கியம்"

○ திராவிட தேசியமும் காவி சுதேசியமும் கைகோர்க்கும் நடிப்புச் சுதேசிகள் நாற்காலிகளுக்கு ஊறுநேராமல் பெருந்தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்ட மாய்மாலங்கள்.

○ தமிழ்த்தேசியவாதிகள் (தமிழால் ஒன்றுபடுவோம் எனும் தமிழ்ச்சான்றோர் பேரவையை உள்ளிட்டு) மத்தியிலிருந்து புலிகள் விமர்சனத்திற்கே அப்பாற்பட்டவர்கள்; தார்மீக ஆதரவு நல்கினும் நட்பு முரண்பாட்டோடு விமர்சிக்கப் புகுந்தாலே தமிழ்த்தேசியவிரோதிகள்-தமிழினத் துரோகிகள் - வீடண அனுமார்கள் என்பதான வெளிப்பாடுகள்.

○ பௌத்த- இஸ்லாமிய எதிர்ப்பு என்கிற ரீதியில் இந்துப்பாசிச நோக்கில் புலிகளுக்கு ஆதரவு நிலைப்பாடு எடுக்கும் சிவசேனை- இந்துத்துவப் பார்வைகள்.

○ அம்பேத்கர் மராட்டியர் - பெரியார் கன்னடியர்; சைவ முதலானவை அகச் சமயங்கள்; தந்திர-பௌத்த-சமணம் ஆகியவை வந்தேறி ஆரியச் சயங்கள் (ஆனால் கிறித்துவத்தின் உள்ளீடு மட்டும் விடுதலை இறையியலே)- எனும் 'தமிழ்ப் பேறறிஞர்' குணாவின் 'தனித்தமிழ்' தேசியமோத'னீ'.

○ இன்னும் மார்க்சிய லெனினியர்கள் மத்தியிலிருந்து அவ்வக்குழுவிற்கேற்ப வெவ்வேறான பார்வைகள்

தமிழகச்சூழலில் பார்ப்பன-வெள்ளாள ஆதிக்கம் என்றால், ஈழச்சூழலில் அது இந்து-வெள்ளாள ஆதிக்கமாகவும்; புகலிடச்சூழலில் தம் சுயஅடையாளம் பேணுதல் என்கிறரீதியில் சைவமீட்புவாத நோக்கினதாகவே அமைந்துகிடக்கிறது. ஈழச்சூழலைப் பொறுத்தவரை அன்றைய ஆறுமுகநாவலர் தொடக்கம் இன்றைய இந்தியச் சிந்தனைமரபு நூலாசிரியர்கள் (கௌசல்யா சுப்ரமணியன்) வரைக்கும் 'மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் ஓங்க' நோற்றுத் தவம் கிடக்கும் மேலோரே. மார்க்சிய சித்தாந்திகள்

கூட 'சித்தாந்த மார்க்சியர்களாகவே' (சித்தாந்த மெனில் தத்துவ தளத்தில் சைவசித்தாந்தமே) அமைந்துகிடத்தல் கண்கூடு என்ற போதிலும், இத ற்கு மாறாக "சைவமும் தமிழும் கொலையும் கொடூர மும்தானா? என்ன நம் சரித்திரம் நரபலி கேட்கும் ரத்தக் காட்டேறியா?" என்கிற சக்ரவர்த்தியின் அறச்சீற்றம் அங்கிருந்தும், "கற்பழிக்கத் திருவுளமே எனத் தேவாரத்தில் புரையோடிய தமிழ் கேட்டுத் தாழ்கிறதே எனக்குந்தான் தலை" எனவும் "மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் ஓங்க உம் கழுமரங்க ளில் எம் ஜன்ம சாபல்யம் அடைந்தது" என இங்கிருந் தும் (எனது கவிதை) அறச்சீற்றக் குரல்கள் எதிரொ லிக்கலாயின.

☆☆☆

"வைதீகமரபுக்கு எதிரான தாந்திரீகம், சித்தர், சமண, பௌத்த மரபுகளை யோசிக்கவும் பெரியார், அம்பேத்கார் போன்றோர்களின் மரபுகளுடன் இந் தியக் கலாச்சாரத்தைப் புனரமைப்பு செய்வதும் நாம் செய்யவேண்டி உள்ளது. இதற்குக் கொஞ்சம்பேர் சேர்ந்து செயற்படவேண்டும். என் இப்போதைய பயணம் இந்தக் குறியை நோக்கி" என்கிறார் தமிழ வன். இதுவே நாமிங்கே அவதானிக்கவேண்டிய பிர தான அம்சமாகிறது. காலத்தின் அறைகூவலாய் நம்முன் நிற்கும் இது, நாம் மிகவும் கவனிக்க வேண்டிய ஒன்றென மீண்டும் வலியுறுத்திட விழை கின்றேன். அவரது முந்தைய பயணத்திற்கும் இன் றைய பயணத்திற்குமான இடைவெளியில் அவரது முந்தைய நிலைப்பாடுகளோடு முரண்பட நேர்ந்த தன் காரணிகளைத் தன்னிலை விளக்கமாகவும் காரணபூதமானவர்களைச் சுட்டிக்காட்டியும் அவர் முன்வைத்திருக்கவேண்டும் என்ற போதிலும் அவ ரது இந்த அபாரப் பாய்ச்சலையும் நாம் வர வேற்போமாக.

- இங்கே இந்தியச் சிந்தனை மரபென்கிற போதே அதனை இந்து வைதீக மரபாகவே முன் னிறுத்த முயலும் 'சர்வபள்ளி' ராதாகிருஷ்ண லீலைகள்
- இந்தியாவில் மதம் சாராத சிந்தனை மரபே இல்லை என்கிற இ.பா.வின் 'கண்மூடிப்பூனை' ஞானம்
- தமிழில் சிந்தனை மரபென்கிறபோது சைவ சித்தாந்தமே. அதுவும்கூட அத்வைதத்தின் அப் பட்டமான காப்பி. அப்படிப் பார்க்கிறபோது தமி ழில் சிந்தனை மரபில்லை என்கிற அத்வைத மாயாவிநோத ஜெயமோகச் சுயமோகம்
- இரண்டாயிரம் ஆண்டுக்கால இலக்கியம் யாவுமிங்கே பார்ப்பன-வெள்ளாளக் கருத்தியலே என்னும் 'நிறப்பிரிகை'யின் எதிர்மரபுக்கூறுகளை இனங்காணாப் போக்கு

இவை இங்கு எம்மிடையே நிலவிய சூழலில்தான் தமிழ்ச்சூழலில் தத்துவஞானம் குறித்த உரையாட லைத் தொடங்கியாகவேண்டிய நிர்ப்பந்தத்தை உண ர்ந்த நான் 'சுந்தரசுகனில்' 'இந்திய மெய்ப்பொருளி யலும் சமயஞ்சாரா சிந்தனை மரபும்' குறித்த என் தேடலினை முன்வைக்கலானேன். (அது இன்னமும் முற்றுப் பெறவில்லை) பிறப்பால் ஈழத்தவர் ஆயினும் சிந்தனை மரபால் இந்திய அவைதீகமரபின் பாற் பட்ட பிரேமிளின் எழுத்துக்களுக்கு ஊடான பயணத் திலேயே என்னுள் இத்தேடலுக்கான வித்துக்கள் ஊன்றலாயின.

நிரீஸ்வர சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷ ரிகம், பூர்வ மீமாம்ஸை ஆகிய தரிசனங்கள்; தந்தி ரம், பௌத்தம், சமணம், ஆசீவகம் ஆகிய அவைதீக சமயங்கள், உலகாய்தம் முதலான சிந்தனைப் பள்ளிகள் இவற்றிற்கு ஊடாக நாம் நம் சமயம் சாரா சிந்தனை மரபை இனங் காணலாம்.

மேலும் நம் சுயமண்சார் எதிர்மரபுக்கூறுகளை திருமூலர், திருவள்ளுவர், பூங்குன்றனார், சித்தர்கள், வள்ளலார், புலே, நாராயண குரு, சர்வக்ஞர், பசவ ணர், கபீர், வேமணர், ஓஷோ, ஜே. கே., ரமணர், அயோத்திதாஸர், பெரியார், அம்பேத்கர், கோவூர், கோரா, பிரேமிள், நித்ய சைதன்ய யதி முதலியோர் பங்களிப்பு மூலமாகவும், மணிமேகலை, நீலகேசி முதலியவற்றில் சமயக்கணக்கர் திறமுரை காதை கள் வாயிலாகவும் இனங்காணலாம்.

ராகுல்ஜி, கோசாம்பி, தேவிபிரசாத், சட்டோபாத் யாய, நா.வா. முதலானோர் இதற்கான வாயில்க ளைத் திறந்து வைத்துள்ளனர்.

கீழைத்தந்திரம், மேலைத்தந்திரம், பௌத்தத் தின் தந்திரயானம், ஜென்பௌத்தம், தாவோயிசம், ஆஃபியிசம், சித்தர்மரபு இவற்றிற்கு இடையே இழையோடிக் கிடக்கும் ஒத்திசைவான உள்முக ஊடாட்டங்களும் வித்தியாசங்களின் முரணழகும் நாமிங்கே ஊன்றிக் கண்டறிய வேண்டுவன. இந்தரீ தியில் நோக்கும்போது தமிழவனின் சமீபத்திய புரி தல்களுடனான இன்றையப்பயண இலக்கு முகாமை பெறுவது புலனாகும்.

"புறநானூறு, அகநானூறு, தொல்காப்பியம் போன்றவற்றிலும் அனைத்திந்திய சமண, பௌத்த மரபிலும் cultகளிலும் உள்ள மரபைப் பலமாகக் கொண்டாத்தான் இந்தியாவில் தலித் மரபு புலப்படும். எனவே அவைதீக மரபு வாச லைத் திறப்பதுதான் என் முதல் வேலை என்று கருதினேன். அமைப்பியல்வாதம் வழி புறப்பட்டு இந்தியாவின் இருளடைந்த குகைகளுக்குள் ஒளிந்திருக்கும் குரல்களைத் தேட முனைந் தேன்" என்கிறார் தமிழவன்.

☆☆☆

பின்னை நவீனத்துவத்தினை இங்கு முன்வைத்த வர்களுக்கு இடையே அதற்கு இங்கான பொருத்தப் பாட்டையும் இனியான அதன் உயிர்த்தலின் வெளிக ளையும் இனங்காண்பதில் முரண்பாடுகள் நேரலா யின. தமிழ் மரபில் பின்னைநவீனத்துவப் போக்குகள் என்கிற ரீதியிலான புரிதலில் புதுமைப்பித்தனுக்கு ஊடாக வெளிப்படும் பின்னைநவீனத்துவக்கூறு களை இனங்காண தமிழவன், அ. மார்க்ஸ், ராஜ் கௌதமன் முதலானோர் தவறினர். மட்டுமல்லாமல் அவரை வெள்ளாளக் கருத்தியலின் பிரதிநிதியாக

வும் பிறழ முன்வைக்கலாயினர். அ. மார்க்ஸ் அவைதீக மரபின் பாற்பட்ட மந்திரம் முதலான கூறுகளைக் கூட மதக்கறை படிந்ததாகவே இனங்காட்டினார். தமிழவனும் திருமந்திர 'மிஸ்டிக்' பார்வைகளை ஏற்க வில்லை. இத்தகைய போக்குகளுக்கு எதிர்வினை யாகவே புதுமைப்பித்தன் மீதான என் வாசிப்புகளை நான் முன்வைக்கலானேன். இந்தரீதியிலேயே 'பித்த வேதாளத்தின் கதைப்புதிரில் சிக்கித் தவிக்கும் விக் கிரக விநாசர்கள் 'பு. பி. இலக்கியத்தடம் நூலிலும் 'சிக்காத கடவுளே உனைச் சிக்கெனப் பிடித்தேன்' சதங்கையிலும் எதிர்வரும் என்பொன்விழா மலரான 'பொதிகையில்' 'சரித்திர மௌனங்களைக் கலைத் துப் பரவும் அவன் கண்ணீரின் ரகசியமும் அதன் சரித் திரமும்' என முன்வைத்துள்ளேன். பு. பி. எழுத்துக்கு ஊடாக வெளிப்படும் பின்னைநவீனத்துவப்போக்கு கள் குறித்து பிரேமிள், ரவிக்குமார், பிரேம்:ரமேஷ், கண்ணன் முதலானோரும் இங்கு வாசிப்புகளை முன் வைத்துள்ளனர்.

இந்திய அவைதீகமரபும் பின்னைநவீனத்துவமும் குறித்த மேலதிக புரிதல்களுக்கு வாசல்களைத் திறக்கும் வகையில் 'காலச்சுவட்டில்' நித்ய சைதன்ய யதி மற்றும் பிரேம்:ரமேஷ் செவ்விகள் அமைந் துள்ளன.

"நமது மரபுபற்றிய அறியாமையை நமது அறிவு ஜீவிகள் வளர்த்துக் கொண்டுள்ளனர். இதில் அவர் களுக்கு வெட்கம் இல்லை, தன் மரபுபற்றிய ஞானம் இல்லாத மேற்கத்திய சிந்தனையாளர்கள் இல்லை" "உண்மையில் நமது மரபு மிகவும் சிக்கலானது. பல்வேறுபட்ட உள்ளோட்டங்களும் முரண்களும் உள்ளது. மாறுபடும் பல்வேறு கருத்துநிலைகள் பின்னி முயங்கி உருவானது. அதை ஒற்றைப்படை ஆக்குவது அதை மறுப்பதற்குச் சமன்தான்..... மதவாதிகள் உள்முரண்களை மறுப்பதும் அதையே அரசியல்வாதிகளும் செய்வதும் ஆன்மீகத்தில் உள்ள தேடலை மறுப்பதற்காகவே" என்றெல்லாம் யதி குறிப்பிடுவது இங்கே ஆழமாக எண்ணத்தகும். கீதை மற்றும் உபநிடதங்களின் வேதமறுப் புக்கூறுகளை ஓஷோவும் யதியும் முன்வைக்கின் றனர்.

ரமணரின் மதவுணர்வற்ற தன்மையினைப் பிரேமி ளும் யதியும் சுட்டிக்காட்டுகின்றனர்.

> கீதை இந்தியச் சிந்தனைமரபின் மூலநூல்களில் ஒன்று. கீதை மதநூல் அல்ல, தத்துவநூல் என்பதே நானும் நடராஜகுருவும் எழுதிய கீதையுரைகளின் சாரம்
>
> - யதி
>
> வேதங்கள் பாவத்திற்குச் சிறப்பளிக்கையில் உபநிஷத்துக்கள் அறிவுக்குச் சிறப்பளிக்கின் றன. வேதங்கள் மூடநம்பிக்கைகளின் மொத்தவ டிவமாக இருக்கையில் உபநிஷத்துக்கள் அறிவு பூர்வமான சிந்தனைகளின் ஊற்றாக இருக்கின் றன.
>
> - கே.எஸ். பகவான்

> உபநிடதத்திலே காணப்படும் கருத்துக்களைத் தர்க்கரீதியாக வளர்த்தால் அவை எவற்றில் போய்முடியுமோ அவற்றைத்தான் புத்தர் காட்டியுள்ளார். உபநிடதங்களுள் காலத்தால் முற்பட்டவற்றின் போக்கு வணக்கத்துக்குரியதாகக் கொள்ளப்படும் ஈசுர தத்துவத்தை முற்றாக மறுப்பதற்காகவேயுள்ளது.
>
> - ஹிரியண்ணா
>
> வேதமரபுக்கு எதிரான பேரியக்கம் உபநிடதங்கள், தத்துவத்தின் வெற்றியை அவை பறைசாற்றுகின்றன. பௌத்தம் இவ்விரு மரபுகளுக்கும் எதிரானது.
>
> - யதி
>
> ரமணர் ரத்தினச் சுருக்கமானவர், வரிவை அவர் விலககிவிடுகிறார். கிருஷ்ணமூர்த்தி, ரமணர் ஆகியோரின் கருத்துகள் அணுசக்தி போல ஆற்றல் மிக்கவை என்றாலும், கிருஷ்ணமூர்த்தி அவற்றை வாதங்களால் நிறுவுகிறார். ரமணரோ உபநிடத முனிவர்களைப்போலச் சுருக்கமான முதுமொழிகள் போலச் சொல்லிவிடுகிறார்.
>
> - ஓஷோ

இவை எல்லாமும் பெரும்பாலும் நம்மால் பார்க் கத் தவறிய பக்கங்களாகும். இந்திய அவைதீக மரபு குறித்த மேலதிகப் புரிதல்களுக்கு வாயில் திறப்பதற் கான விவாதப் புள்ளிகளாகவும் இவற்றை இங்கே முன்வைக்கலானேன். இந்தியத் தத்துவஞானம்பற் றிய புரிதல்களுக்கான யதியின் பங்களிப்பு காத்திர மானதும் பன்முகப்பட்டதுமாகும்.

பிரேம்:ரமேஷ் எனும் அபூர்வக் கலைஞர்கள் தத் துவ ஓர்மை மிக்க தரிசனப்பாங்கும் சமூகத்தின்மீ தான ஆழ்ந்த கரிசனமும் கொண்டவர்கள். கோட் பாட்டாளர்களாகவும், படைப்பூக்கம் மிக்க வாசிப்பு களையும், படைப்பாற்றல் மிக்க பல்துறைப் பங்களிப் பையும் நிகழ்த்த வல்ல பன்முகக்கலை ஆளுமை களாகவும் பயணிக்க வல்லவர்கள்.

'காலச்சுவட்டில்' வெளியான இவர்களது செவ்வி - சுயமண்சார் எதிர்மரபுக்கூறுகளில் காலூன்றி பௌத்தந் தழுவிய அம்பேத்கரிய மார்க்சியர்களாக நின்றவாறே அவற்றின் போதாமைகளைச் செழு மைப்படுத்தவல்ல நோக்கிலும் போக்கிலுமான ஆக் கபூர்வமான உரையாடலைப் பின்னைநவீனத்துவங் களுடன் நிகழ்த்துகின்றது.

அவற்றிற்கு இங்கான பொருத்தப்பாட்டையும் இனியான உயிர்த்தலின் வெளிகளையும் இனங்காட் டிப் புதுப்புது வாயில்களைத் திறக்கின்றது. மேற்கின் பல கேள்விகளுக்குக் குறுக்கீடுகளையும் வழங்கி யுள்ள நம் இந்தியமரபு மேற்கின் சிந்தனைகளைத் தாக்கி இருப்பதனையும் மேற்கின் பல புலங்களை மாற்றி அமைத்திருப்பதையும் இவற்றை எல்லாம் இன் றைய பின்னைநவீனத்துவம் அடையாளங் காண்பத னையும் மிகச் சிறப்பாகச் சித்திரிக்கின்றது.

நாங்கள் தத்துவதளத்தில் பௌத்த சமண மரபுகளையும் கலாச்சார சமூக தளத்தில் சிறு மரபு கள், பன்மை இன மரபுகள் போன்றவற் றைத்தான் இந்திய மரபுகளில் ஆக்கபூர்வமா னதாக எடுத்துக்கொள்கிறோம். வைதீக, சனா தன, இந்துசமய மரபுகளை கொடுங்கோன்மை மரபுகள் என்று அடையாளம் காண்கிறோம்.

- பிரேம்-ரமேஷ்

பௌத்தநெறியை ஏற்றுக்கொண்டபின் எங்க ளுக்கு பல்வேறு மனம் சார்ந்த, ஆய்வுசார்ந்த பிரச்சினைகள் தெளிவடைந்தன. சமூகம், சங் கம், பொதுமை, பிற என்பதன் அதீத அவசியமும் இன்று அவை இல்லாததின் கொடுமையும் புரிந் தது. எல்லாவிதமான சுதந்திர சிந்தனைகளை யும் அது, மார்கிதே, சாத் ஆக இருந்தாலும், நீட் ஷேஆக இருந்தாலும், மிஷேல் ஃபூக்கோவாக இருந்தாலும், நாங்கள் மிகவும் மதிக்கும் ஜூலியோ கிறிஸ்தோவாக இருந்தாலும் அல்லது முக்கியத்துவம் அளிக்கவேண்டிய சிந்தனையா ளர்கள் என்ற பட்டியலில் காண்ட் முதல் வில் ஹெம் றெய்ச் வரை யாராக இருந்தாலும் மிக்க மரியாதையுடன் அம்பேத்கரின் தனித்துவ வழி காட்டுதலுடன் நாம் அணுகமுடியும் என்பதால் பின்நவீனத்துவமும் பௌத்தமும் அம்பேத்கரி யமும் எங்களுக்கு ஒரே நெறியின் மாற்றுருவங் களாக, உள்ளிணைந்த அமைப்புகளாகவே தோன்றுகின்றன.


- பிரேம்-ரமேஷ்

புகலிடத் தமிழோ ஈழத்தமிழோ தமிழகத் தமிழோ அதனதன் குறியினை அதுஅதுவாகவே அடையட்டும். ஊடே குறுக்குச்சால் ஓட்டிவரும் தமிழ வன், சாரு இன்ன பிற 'எங்கட ஆக்களின்' 'குறி காட் டும்' போதனைகளை எந்தளவு துடைத்தெறிய புலம் பெயர் தமிழ் பழகிக்கொள்கிறதோ அந்தளவு அது தன் குறியைச் சென்றடையும். நமக்கிடையே 'கொள் வினை கொடுப்பினைகள்' பரஸ்பர பரிவர்த்தனை யாகப் பரிமாற்றம் ஆகட்டும். ■

---

# அருகிருத்தல் என்பது...

*உண்மையிலேயே புரிதல் அல்லது*
*அறிதல் என்பது*
*அது ஒரு பெரியது தான்.*
*எந்தத் தொடர்புகளும்*
*ஒரே அந்தரத்தில் நின்று கொண்டிருப்பதாய்....*
*மனது கலவிக்குள் மட்டும் அழுந்திப் போக மறுக்கிறது.*
*ஒரு காலம் இருந்ததுதான்*
*உன் அறிமுகத்திற்கு முன்பு.*
*உன் மொழி எனக்கோ*
*என் மொழி உனக்கோ*
*புரிய முடியாமல் இருக்கும் போதெல்லாம்*
*முரண்பட்டு இருக்கவும்*
*பின்னர் புரிகின்ற அர்த்தப்பாடுகளுக்குள்*
*சுற்றிக்கொண்டிருக்கவும்....*
*ஒரு சுதந்திரமாய் நீ அல்லது நான் சொன்னது போல*
*எம்முறவு அற்புதமாகத்தானிருக்கிறது.*
*ஒரு இறுக்கம்*
*எல்லோரும் உன்னைப் போல்*
*ஆகமுடியாமல் இருப்பது....*
*உன் சுவாசத்தை நானும்*
*என் சுவாசத்தை நீயும்*
*சமப்படுத்தி கற்றுக்கொண்டவை....*
*இப்பொழுது ஒரு இடர் மிகுந்திருக்கின்றது.*
*அது பிரிவென்பதல்ல....*
*உன்னை அதிகமாகவே புரிய முடிகிறது.*



**இளைய அப்துல்லாஹ்**

*இலண்டன், 04.08.99, 3.12 அதிகாலை*

# கொம்புளானா


அ. முத்துலிங்கம்

உலகத்து சிறுவர்களை எல்லாம் நடுங்க வைக்கும் திறமை கொண்ட ஒரு தமிழ் எழுத்து இருக்கிறது. அது வேறொன்றுமில்லை. கொம்புளானாதான். 'ழ' 'இருக்கிறது, 'ல' இருக்கிறது. அதற்கு நடுவில் இதென்ன இது பெரிசாகக் கொம்பு வைத்துக்கொண்டு என்று அவள் சிறு வயதில் யோசித்திருக்கிறாள். இலக்கண பெரியவர்களைத் திருப்திப்படுத்தும் ஒரே நோக்கத்தோடு படைக்கப்பட்ட இந்த ளானா இன்று தன் சுயரூபத்தைக் காட்டிவிட்டது.

ஒன்பது வயதுகூட நிரம்பாத அவளுடைய மகன் சாந்தன் கோபத்தில் கொப்பியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியே போய்விட்டான். பனி தூவிக்கொண்டு இருந்ததையும் கவனிக்காமல் மேலங்கியை அவசரமாக மாட்டி, தொப்பிகூட அணியாமல் சென்றுவிட்டான். பத்மாவதிக்கு கோபமாக வந்தது. கண்ணீர் காவலர்கள் தடுமாறினர். கோபம் சாந்தன்மீதா அல்லது கொம்புளானா மீதா என்ற தீர்மானத்துக்கு அவளால் வரமுடியவில்லை.

பத்மாவதிக்கு கணவன் சொல்வது வேதமந்திரம். அவருடைய இரண்டு மந்திர வார்த்தை 'பாரம்பரியம்', 'கலாச்சாரம்' என்பவைதான். அகதியாக அந்நிய நாட்டுக்கு தஞ்சம் கேட்டு வந்தபிறகு இந்த மந்திரச் சொற்களுக்கு வேகம் கூடியது. அதுதான் பத்மாவதி சனிக்கிழமை காலைநேரங்களில் சாந்தனுக்குத் தமிழ் சொல்லித் தரவேண்டும் என்ற ஏற்பாடு. ஒரு வருடப் பயிற்சியில் அவன் எழுத்துக்கூட்டி வாசிப்பான். ஆனால் இந்தக் கொம்புளானா கொடுமையில் இன்று மாட்டிவிட்டான். 'ல' எழுத வேண்டிய இடத்தில் 'ள' போட்டு பிரளயம் வந்துவிட்டது. 'வட் இஸ் திஸ்? கொம்புளானா! கொம்புளானா! Who wants it?' என்று கத்தியபடி போய்விட்டான்.

அவள் சின்ன வயதில் பட்ட கஷ்டங்களில் பாதிக்குமேல் இந்தக் கொம்புளானாவால் ஏற்பட்டதுதான். அவள் தகப்பனார் தமிழில் புலமை வாய்ந்தளவிற்கு பொறுமையில் புகழ் பெறாதவர். ஒவ்வொரு பிழைக்கும் தலையில் குட்டு விழுந்தபடியே இருக்கும். சிறுவர் கொடுமை பிரபலமாக இல்லாத அந்தக் காலத்தில் இது சரி. இந்தக் காலத்தில் சாந்தனிடம் தான் இப்படி நடந்துகொண்டதற்காக வருத்தப்பட்டாள்.



பத்மாவதிக்கு ஆறாம் வகுப்பு மாணவி போல முகம். ஒரு கூட்டத்திலே தொலைந்து போனால் கண்டுபிடிக்க முடியாது. எல்லாருடைய முகமும் அவளுடையது போலவே இருக்கும். பார்த்தவுடன் அனுசரித்துப்போக வேண்டும் என்ற ஆசையை அது தூண்டிவிடும். ஒரு கறிவேப்பிலையை வாங்குவதற்கு கணவனைக் கெஞ்சி இருபது மைல் தூரம் போய்வருவதற்குத் தயங்கமாட்டாள். பாரம்பரியம் மாறாமல் காலையிலிருந்து இரவு படுக்கும்வரை சமையலறையிலேயே வாசம் செய்தாள்.

அவள் பிறக்கும்போதே இப்படிப் பிறக்கவில்லை. இலக்கியத்தில் அவளுக்கு நல்ல ஆர்வம் இருந்தது. வார சஞ்சிகைகள், மாத நாவல்கள் அல்ல. தமிழில் மிகவும் குறைந்து வாசிக்கப்பட்ட சிறந்த படைப்பாளர்களுடைய கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எல்லாம் படித்திருந்தாள். அதன் தாக்கத்தில் தன்வீட்டில் நடந்த சம்பவங்களைக் கவிதையாகக்கூட எழுதி இருக்கிறாள்.


அவர்கள் என் அண்ணனை
இழுத்துப்போனார்கள்
பிணையில் விடுவதற்கு
பணம் கேட்டார்கள்

*கொடுத்தோம்*
*பிறகு*
*பிணத்தை தரவும்*
*பணம் கேட்டார்கள்*

இவை எல்லாம் ரூல் போடாத அப்பியாசக் கொப்பியின் கடைசி ஒற்றையில் எழுதி வைத்திருந் தாள். இடம்பெயர்ந்தபோது அவை யும் தொலைந்துவிட்டன.

அப்பொழுதெல்லாம் அவள் உடம்பு பாம்புபோல இருக்கும். பள் ளிக்கூட ஓட்டப்போட்டிகளில் எல் லாம் முதலாவதாக வருவாள். மணமான புதிதில் தானும் வெளியே போய் வேலை பார்க்க வேண்டும் என்ற ஆசையை ஒரு நாள் கணவனிடம் சொன்னாள். அந்த வார்த்தை அவளையறியா மலே வெளியே வந்து விழுந்து விட்டது. சிறுமியாக இருந்தபோது தவறாக விழுந்த ஒரு வார்த் தையை அழிறப்பரால் திருப்பித் திருப்பி அழிப்பாள். அப்படியே தம்பிராசாவும் அவளுடைய அத ரங்களில் எழுதப்பட்ட தவறான வார்த்தையை தன் தடித்த உத டுகளால் திருப்பித் திருப்பி அழித் தார். இந்த அழித்தல்கள் தந்த சந் தோஷம் அவளை வேறு தவறான வார்த்தைகளைத் தேடி அப்போது சிந்திக்க வைத்தது. அந்தச் சம யம் தம்பிராசா சொன்னார், அவர் களுடைய பாரம்பரியத்துக்கு வீட் டைப் பாரத்துக் கொண்டிருந்தால் போதும் என்று. அவர் என்ன சொன் னாலும் அது சரியாய்த்தான் இருக் கும்.

அவள் ஏலெவல் படிக்கும் போது சயங்கொண்டாரின் கலிங் கத்துப்பரணி அவர்களுக்கு பாடப் புத்தகமாயிருந்தது. குலோத் துங்க சோழனைக் காண இளம் மகளிர் வரும் கட்டம் அவளுக்கு மிகவும் பிடிக்கும். திருப்பி திருப்பி படிப்பாள்.



*எங்கும் உள மென்கதலி, எங்கும் உள*
*தண் கமுகம், எங்கும் உள பொங்கும் இளநீர்*
*எங்கும் உள பைங்குமிழ்கள், எங்கும் உள*
*செங்குமுதம், எங்கும் உள செங்கயல்களே.*

வாழை, கமுகு, இளநீர், குமிழம்பூ, குமுதமலர் என்று பெண்ணின் அங் கங்களை தாவரங்களாகவே வர்ணித்த கவி, கண்களை ஒப்பிட மட்டும் கயல்மீனுக்குத் தாவியது ஏன் என்று அவள் கேட்டதற்கு ஆசிரியர் சொன்ன பதில் அவளை அசர வைத்தது. அதற்குப் பிறகுதான் இந்தப் பழங்கால இலக்கியங்களை மும்முரமாகக் கற்கத் தொடங்கினாள். ஆங்கிலத்தில் சார்ள்ஸ் டிக்கின்ஸ், ஒஸ்கார் வைல்டில் இருந்து கிரஹம் கிறீன் வரைக்கும் படித்திருக்கிறாள். தற்போதைக்கு கஷுவோ இஷிகு ரோவைப் படிக்க மிகவும் ஆசை. கணவரிடம் பலமுறை கேட்டிருக்கி றாள். அவர் இந்த புத்தகங்களை வாங்கித் தருவதாக சொல்லியிருக் கிறார். அப்படிச் சொன்னால் அவர் கட்டாயம் செய்வார்.

தம்பிராசா அவளுக்கு தூரத்து உறவுதான். கட்டுபெத்தவில் என்ஜி னியரிங் படித்தவர். இங்கே வந்து இன்னொருவருடன் கூட்டுச் சேர்ந்து கார் கராஜ் வைத்திருந்தார். பழுது பார்க்கும் கலை அவருக்கு இயற்கை தந்த நோய். மணமுடித்த நாளில் இருந்து இன்றுவரை பத்மாவதி புதுக் காரைக் கண்டதில்லை. எப்பவும் உடைந்த கார்தான். சனி, ஞாயிறு கால ங்களில் அதன் கீழே படுத்து விடுவார். கட்டையான மனிதர் என்றபடியால் காருக்குக் குறுக்காக அவர் படுத்துஅதன் அடிப்பாகத்தை ஆராயும் போது அவருடைய கால்கள் வெளியே நீட்டிக்கொண்டு இருக்கும் அபா யம் இல்லை. அந்தக் கார் நிமிர்ந்து ஒரு தரத்துக்கு வரும்போது நல்ல விலை வந்ததென்று விற்றுவிடுவார். மீண்டும் லொட லொட சவாரிதான். அவருடன் போகும்போது கார் எந்தப் பனிப்பிரதேசத்தில் எப்போது நின்று விடுமோ என்ற பயம் அவளைக் கவ்வியபடியே இருக்கும்.

தம்பிராசா உருண்டையாக வருவதற்கு முன்பு வடிவாகத்தான் இருந் தார். அப்பொழுதெல்லாம் அவருடைய தலைமயிர் வழுக்கை விழாமல், உச்சி பிரிக்காமல் இழுத்து சிலுப்பிக்கொண்டு நிற்கும். அவர்களுடைய திருமணப் படங்களை பார்த்தவர்களுக்கு இது தெரியும். இலக்கியத்தில் அவருக்கு ஒரு மண்ணும் தெரியாது. நாலு பியருக்குமேல் அவரது மூளை நாற்பது வாட்டில் வேலைசெய்யும் தருணங்களில் கொஞ்சம் அரசியல் பேசுவார். அதிலும் கூடிய காலங்களில் கலாச்சாரம் பண்பாடு பற்றி நீண்ட பிரசங்கம் ஆற்றுவார். மற்றும்படி அவருடைய தற்போதைய இலட்சியம், எப்பாடுபட்டாவது சீட்டுக்காசை எடுத்து மகளுடைய சாமத்தியச் சட ங்கை விமரிசையாக கொண்டாடவேண்டும் என்பதுதான்.

வெளியே பனிப்புயல் அடித்து உயிரை உறைய வைக்கும் அதிகா லைக் குளிரில் ஏதோ எதிரிகளை வீழ்த்தக் கிளம்பியதுபோல பலவித படைக்கலங்களால் உடம்பை மறைத்து யுத்தத்துக்குக் கிளம்பும் ஒரு குறுநில மன்னர்போல அவர் புறப்படுவார். ஐந்து நிமிட தொடர் முயற்சி யில் காரை ஸ்டார்ட் பண்ணிப் போனால் இரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்குத்தான் திரும்புவார். அப்படி வரும்போது, பத்மாவதி பிள்ளைக ளுடைய வீட்டுப்பாடங்களை முடித்து, உணவைப் பரிமாறி, அவருக்கான சாப்பாட்டை இன்னொரு முறை சூடாக்க காத்துக் கொண்டிருப்பாள்.

வாசல்மணி அடித்தது. திடுக்கென்றது. இன்னும் மைதிலி ரெடியாக வில்லை. இன்று மாறுவேடப்போட்டியில் கலந்துகொள்கிறாள். கணவர் அறிவுறுத்தியபடி பாரதியார் வேடம்தான் போடவேண்டும் என்று யோசித் திருந்தாள். என்னதான் நாடுமாறி பிழைப்புக்கு வந்தாலும் பாரம்பரி யத்தை விடக்கூடாது என்ற விவாதம் இருந்தது.

'ஹு' இஸ் பறாதியா?' என்ற மைதிலியின் ஒரு கேள்வியில் இந்தக் கலாச்சாரம் அடிபட்டுப்போனது. 'துயில் அழகி' வேஷம் நன்றாக இருக் கும் என்று தீர்மானித்தார்கள். துயில் அழகி என்றால் நித்திரையாக அல் லவோ இருக்கவேண்டும் என்ற சந்தேகம் ஒன்றை மைதிலி கிளப்பியதில் அந்த யோசனையும் கைவிடப்பட்டு சென்றமுறைபோல தேவதை உடுப்


பில் போவது என்றே முடிவானது.

பத்மாவதி இதை முன்பே எதிர் பார்த்திருந்தாள். நிலவறையில் மடித்து வைத்து மறந்துபோன, பாரதிராஜா பார்த்து பொறாமைப்படும்படியான நீண்ட வெள்ளைத் துகில் ஆடை இருந்தது. இடை சுருக்கி, மார்புகள் பெருக்கி, கரை மடிப்பு இரண்டு அங்குலம் அவிழ்த்து நீட்டி, உலர்சலவை செய்து புது நீல ரிப்பனில் அலங்கார வளைவுகள் பொருத்தி கவர்ச்சியாக இருந்தது. அதை மகளுக்கு அணிவித்துச் சரி பார்த்தாள்.

இறக்கைகள் சரிவர பொருந்தவில்லை. ஒரு இறக்கை வளைந்தும் சரிந்தும் எதிர்த்தது. பழுது பார்த்தும் மசியவில்லை. உண்மையில் பறக்கவா போகிறாள்? பிடரியில் மைதிலிக்கு கண் இல்லாதது வசதியாகப் போய்விட்டது. உடைந்த செட்டை தேவதை தயாரானாள்.

இந்த அவசரித்தல்களின் நடுவே டயான் வந்துவிட்டாள். மைதிலியுடன் படிக்கும் பக்கத்து வீட்டுப்பெண். ஒரே வயது என்றாலும் அங்கங்கள் நிறைந்த வளர்த்தியானவள். ரத்தச்சிவப்பு உடையில் அவளது குஞ்சங்கள் நாலு திசையிலும் பறந்தன. முகமும் கழுத்தும் வெண்தோள்களும் தவிர்த்து எல்லாமே சிவப்பு மயம். தொடையில் இருந்து தொடங்கி நீண்டு உள்ளங்காலில் முடியும் மெல்லிய கருஞ்சிவப்பு காலுறைகள். அதற்குப் பொருத்தமாக சிவப்பு காலணி. தலைமயிர் எல்லாம் முள்ளம்பன்றி போல நேராக்கப்பட்டு குத்திக்கொண்டு நின்று அவையும் பெரும் சிகப்பில் பிரகாசித்தன.

'இது என்ன வேஷம்?' என்று கேட்டதற்கு 'நெருப்புச்சுவாலை' என்று செவ்வாயைத் திறந்து பதில் சொல்லிவிட்டு மீண்டும் சூயிங்கத்தை அரைக்கத் தொடங்கி விட்டாள். அப்படிச் சொன்னபோது உண்மையிலேயே அவள் தோற்றம் தீப்பிழம்பாக மாறியது. பக்கத்தில் நிற்கும்போது வெக்கையாகக்கூட இருந்தது. தொடை தெரிய கவுனை ஒரு சுழட்டுச் சுழட்டிக்கொண்டு எழுந்து நின்றாள். தேவதையும், நெருப்புச் சுவாலையும் டயானின் தகப்பனாருடைய காரில் ஏறியபோது 'கவனம் மகளே!' என்றாள் பத்மாவதி, ஒரு தாயின் பரிவுடன். 'Don't worry Mum' என்றாள் அவள் எரிச்சலுடன்.



அப்பொழுதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது. கேக் செய்யவேண்டும். இரவு, இவருடைய நண்பர்கள் சாப்பிட வருவார்கள். அவளுடைய பிறந்தநாள் அது. 36 வயது ஆகிவிட்டது. வெளியே ஓடர் கொடுத்தால் வாழ்த்து எழுதி, பெயர் பொறித்து நல்ல கேக் வீட்டிலேயே கொண்டு வந்து தருவார்களாம். ஆனால் அவர் சொல்லிவிட்டார், அவளைச் செய்யும்படி. அவர் சொன்னால் அதில் நியாயம் இருக்கும்.

சமையலறையைப் பார்த்தவளுக்கு தலை சுற்றியது. நேற்றைய பாத்திரங்களும், பிளேட்களும், கிளாஸ்களும் நிறைந்து கிடந்தன. இதைக் கழுவி முடிக்க இரண்டு மணி நேரம் எடுக்கும். கேக் வேலையை முடித்த பிறகு இருபது பேருக்கு சமைக்கத் தொடங்க வேண்டும். உலர்ந்த உடுப்பை இன்னும் அயர்ன் பண்ணவில்லை. நாரியை நிமிர்த்தி வேலையைத் தொடங்கினாள்.

வெளியே பனிக்குமிழிகள் துள்ளிக்கொண்டு போட்டிபோட்டன. ஆகாயம் மறைந்துவிட்டது. வீட்டை நிறைத்து மீன் பொரியல் மணம் வியாபித்தது. சூழல் சிநேகமான sprayஐ அடித்து இந்த மணத்தை விரட்டப் பார்த்தாள்.

ஸ்னோவைற் கதையில் வரும் அரசியிடம் ஒரு மந்திரக் கண்ணாடி இருந்தது. அது அவளுடைய அழகை எடைபோட்டுக் கூறிவிடுமாம். பதமாவதி வீட்டிலும் எல்லோருக்கும் பொதுவான ஒரு கண்ணாடி இருந்தது. அதில் பார்ப்பதற்கு தந்திரம் தேவை. இது கைக்கண்ணாடியிலும் பெரியது. முகக்கண்ணாடியிலும் பெரியது. நிலைக்கண்ணாடியிலும் சிறியது.

அவள் தமிழ்க் கலாச்சாரத்தை நிலைநாட்ட சேலைகட்டும் நாட்களில் தலைப்பு சரியா என்று பார்க்கும்போது கால்கள் தெரியாது. கால்களைப் பார்த்தால் தலை தெரியாது. பாதி பாதியாகப் பார்த்துத்தான் உடுத்து முடிப்பாள்.

மகள், சேலைக்கரையெல்லாம் நிலத்துக்குச் சமனாக இழுத்துவிட்டு, பொட்டு, முந்தானை, நாரி இடைவெளிகளை அட்ஜஸ்ட் செய்வாள். அப்படியும் தீராமல் கணவன் முன்போய் நின்று சரியா என்று சிறுபிள்ளை போல தலையை சரித்துக் கேட்பாள். அவனும் பியர்க்கானில் இருந்து வாயை எடுக்காமல் 'சோக்காயிருக்கு, இப்பதான் தேவலோகத்தில் இருந்து சுடச்சுட இறக்கினது போல' என்பான். அவளும் அப்படியே புளகித்துப் போவாள்.

இன்றும் அப்படியே. இளஞ்சூட்டு நீர்க்குளியல் முகத்துக்குப் புதுப் பொலிவை கொடுத்தது. பிளாஸ்டிக் உறையில் இருந்து அப்போதுதான் பிரித்த அடர்தகடுபோல பளபளவென்று இருந்தாள். பத்துவருடத்துக்கு முன்பாக out of fashion ஆகிப்போன காஞ்சிபுரம் பட்டுச்சேலையை உடுத்தி வந்தாள். பழம்பாடல்களில் புலவர்கள் வர்ணித்ததுபோல அவள் வயிற்றின் மடிப்புகள் ஆற்றின் அலைகளைப் போல சிறுத்து இருந்தன. தலைமயிர் கத்தையாக கவிழ்ந்து கன்னத்தில் பாதியை மறைத்தது. நீண்ட கழுத்து அவளை இன்னும் கூடுதலாகப் பார்க்க அனுமதித்தது. அவளுடைய பிறந்தநாளில் அவளாகவே கேக் செய்து, அவளாகவே சமைத்து, அவளாகவே உடுத்தி, அவளாகவே காத்திருந்தாள். கணவரும் பிள்ளைகளும் இன்னும் வரவில்லை.

சாந்தன் மெதுவாக கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். அவன் தலைகளிலும் கோட்டிலும் பனிப்பூக்கள் பூத்திருந்தன. நனைந்து, புதைந்து மாசுபட்ட காலணிகளை நடையிலேயே கழற்றி வைத்தான். கோட்டை கழற்றி மாட்டினான். தலையை குனிந்து, மேல் கண்களால் குற்றமாகப் பாரத்தான். உள்ளங்கையை தாயின் கன்னத்தில் அழுத்தமாகப்

பதித்து அவள் முகத்தை தன் பக்கம் திருப்பினான். அவள் கண்களிலே கண்ணீரைப் பார்த்தும் கலங்கிவிட்டான். அப்படியே தன் தாயின் இடைகளைக் கட்டியணைத்து 'சொறி' என்றும் சொன்னான்.

இனிமேல் சாந்தன் எந்தளானாவாலும் போடட்டும். எங்கே வேண்டுமென்றாலும் போடட்டும். அவள் கோபிக்கப் போவதில்லை. இந்த கொம்புளானா சுயநலம் கருதாமல் தமிழுக்கு எவ்வளவு உழைக்கிறது. ஆனால் ஒருவருக்கும் அதன் மதிப்புத் தெரியவில்லை. அதன் உபயோகத்தையே சந்தேகிக்கிறார்கள். தேவையில்லாத எழுத்து என்று எரிச்சல்வேறு ஏற்படுகிறது. ஒருவேளை அதற்கும் தன்னுடைய நிலைதானோ என்ற அச்சம் அவளுக்கு ஏற்பட்டது.

கணவனும் பிள்ளைகளும் அவசரப்படுத்தினார்கள். கேக்கின் மேல் மெழுகுவர்த்திகள் எரிந்தன. இவள் கேக்கை வெட்டிய பிறகு மிகவும் அலங்காரமாக சுற்றிய ஒரு பரிசுப்பொருளை கணவன் அவளிடம் கொடுத்தான். பிள்ளைகள் இருவரும் பக்கத்தில் நெருங்கி ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்க, பத்மாவதி பார்சலை ஸ்பரிசித்தாள். தடவிப்பார்த் தாள். குலுக்கினாள். பாரம் தூக்கினாள். பிறகு மணந்தாள். அப்படியும் என்னவென்று பிடிபடவில்லை.

ஒருவேளை அவள் கேட்ட நைக்கி நடக்கும் சப்பாத்தாக இருக்குமோ? அல்லது ஜிம் உடுப்பாகவும் இருக்கலாம். ஜிம் போகும் ஆசையை கணவனுக்கு சாடைமாடையாக சொல்லி இருந்தாள். இவ்வளவு பெரிதாகவும், பாரமாகவும் இருக்கிறதே? புக்கர் பரிசு பெற்ற புத்தகம் ஒன்று கேட்டிருந்தாள். அதுவாகவும் இருக்கலாம். இவ்வளவு பெரிய புத்தகமா? அவளை ஆவல் பிடித்துத் தாக்கியது.

அவளுக்கு அவர் ஒரு பரிசு வாங்கி இருந்தால் அது சரியாய்த் தான் இருக்கும். பார்சலைப் பிரித்தாள். திகைப்பாகவும் அவமானமாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது. முகம் கறுத்து பேர்லின் சுவர் போல விழுந்துவிட்டது. ஆனால் ஒரு கணம்தான். 1/10000 ஸ்பீட் கமிராகூட படம் எடுக்கமுடியாதபடியான வேகத்தில் அவள் செயற்பட்டாள். உடம்பிலே இருக்கும் அவ்வளவு இரத்தத்தையும் முகத்துக்கு பாய்ச்சி சிவப்பாக்கி, இன்பமாகச் சிரித்து பெரும் மகிழ்ச்சியைக் காட்டினாள். கணவனை அணைத்து இரண்டு கன்னங்களிலும் சின்னச் சின்ன முத்தங்கள் தொடாமல் வைத்தாள். பின் 'தாங்க்யூ' என்று முனகினாள். ஏமாற்றத்தை மறைப்பதற்குக்கூட இவ்வளவு பாடுபடவேண்டி இருக்கிறதே என்று மனது வேதனைப்பட்டது.

அவளுக்கு கிடைத்தது சைனிஸ் வொக்; சைனிஸ் நூடில்ஸ் போன்ற உணவு வகைகளைச் சமைப்பதற்கு ஏதுவான பாத்திரம். எட்டுப்பேருக்கு ஒரே சமயத்தில் நூடில்ஸ் சமைப்பதற்கு தோதான, குண்டாளமான ஒரு பெரிய பாத்திரம். ஒரு பக்கம் கைப்பிடியும் மறுபக்கம் காதும் கொண்ட இந்த 'வொக்'அடிப்பாகத்தில் கறுப்புமை பூசி ஒட்டாத தன்மையுடனும் வெளிப்புறம் செங்கல் நிறத்தில் பளபளப்பு கொண்டதாகவும் இருந்தது.

பத்மாவதியின் கண்களுக்குப் பின்னால் ஒரு சமுத்திரம் குடியிருந்தது. அவள் சாடை கொடுத்தால் போதும் அது பிரவகித்து வர தயாராக இருக்கும். இப்போது அவள் கண்கள் காவல் வேலையைச் சரிவரச் செய்து சமுத்திரத்தை தடுத்து வைத்தன. அதற்கு அவள் மிகவும் பிரயாசைப்பட வேண்டியதாகிவிட்டது.

'சாளரம் 2000' வெளியீட்டுவிழாவை பில்கேட்ஸ் மேற்பார்வை செய்வதுபோல, தம்பிராசா கொஞ்சம் தள்ளி நின்று நெஞ்சிலே கைகளை குறுக்காகக் கட்டி, தன் மனையாளை பெருமையோடு பார்த்தார். 'அம்மா, அம்மா இனிமேல் நூடில்ஸ் செய்யுங்கோ!' என்றாள் பெண். எனக்கும் நூடில்ஸ் என்றான் மகன்.

இனிமேல் புட்டு, இடியப்பம், தோசை, இட்லி, அப்பம், உப்புமா, புளிச்சாதம் என்ற சமையல் சாகரத்தில் நூடில்சும் சேர்ந்துவிடும். அதிகாலைகளில் எழும்பி கணவனையும் பிள்ளைகளையும் திருப்திப்படுத்த அவள் இனிமேல் பெரிய நூடில்ஸ், சின்ன நூடில்ஸ் என்று மாறி மாறி அவளுடைய புதிய சைனிஸ் வொக்கில் செய்வாள். அவர்கள் வீட்டு ரசனைக்கு ஏற்ப நூடில்ஸில் கறிவேப்பிலையும் பச்சை மிளகாயும் பெருங்காயமும் போட்டு ஒரு புதுப்பிக்கப்பட்ட சுவை மணக்கக் கிளறுவாள். அவர்கள் ரசித்துச் சாப்பிடுவார்கள். சாப்பிட்ட பிறகு நன்றிகூடக் கூறாமல் உண்ட பிளேட்டை அப்படியே விட்டுவிட்டு எழுந்து போவார்கள். தண்ணீர் போக்கியில் கைகளைக் கழுவி வாய்களைக் கொப்பளிப்பார்கள்.

அடுத்த பிறந்த தினத்துக்கு இன்னும் 364 நாட்கள் இருந்தன. அதன் வரவை நினைத்தால் அவளுக்கு கிலி பிடித்தது. அந்த தினத்தில் பிறந்தநாள் பரிசாக பீட்ஸா பாத்திரம் கிடைத்துவிடக் கூடும் என்ற பீதி இப்போதே அவளைப் பிடித்து ஆட்டியது. ■


விரைவில் எதிர்பாருங்கள்!

பாரிஸில் முதல் முறையாக கண்ணாடி வார்ப்புகள்

தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் (லண்டன்) வழங்கும்


கண்ணாடி வார்ப்புகள்



நெறியாள்கை: க. பாலேந்திரா

# சூனியக்காரியுடனான கவிஞனின் காதல்

**றஷ்மி**



## நான்கு வேறு வேறு நாட்கள்:

**ஒரு நாள்**

பாம்புக்கு பல்லுக்குக் கீழான பைகளில்,
தேளுக்குக் கொடுக்கிரண்டில்.

உயர்நிலைத்த புள்ளியின் எல்லைக்கும் வெளியாகி
ரசமட்டம் ஏறும். இனிக் குமிழ் வெடிக்கும்.
புதிதான பகுதிகளில் இரத்தம் பாயும் தேகம்.

லட்சோப லட்ச வருடங்களாய்
இரவுகளை வாழ்ந்து - ஒலியாய், ஒவ்வொன்றாய்ப் பாடமிட்ட
வாய்ப்பாட்டை ஒப்புவிக்கிறேன்.
என்னைப் பூராவும் பிரஸ்தாபிக்க மொழியின் போதாமைக்காய்
அதன் சார்பில் நான் வருந்த,
இந்த ஏழைக் குடியானவனுக்காய் இரங்கி,
ராஜ மிடுக்கோடு தயை கூர்கிறாய்-
என் பாக்கியம்.

வரண்ட தொண்டை நனைய
மிடறாய் விழுங்கி நான் தொடர,
மதமதர்த்த உன் அழகின் செருக்கில்
நம்மில் நின்றும் அறுந்தெங்கோ அலைகிறாய் -
அது அலட்சியமேதான். ஆனாலும்
நம்பேன்.

பிறகொருக்கால் நீயே -
நாக்குளறும் என் மொழியை,
தடுமாறும் வலிவை,
சித்தம் குழம்பிய ஒருத்தனின் சங்கைக்குறைவை ரசிக்கிறாய்.
அதையும் நம்ப விரும்பிலேன்.

இனி வரும் கோடானு கோடி யுகங்களுக்கும்
வெறி வெறியென்றே வெறித்துக்கிடக்கப் போதுமான
போதை நொதித்துக் குமிழியிடும் உன்னது
மென்மஞ்சள் படர் கண்ணிரண்டாலும்
வழிநடாத்தப்படுகின்றேன்.

பிறகும் என்னையே பேசவிட்டுக் கேட்கிறாய்,
நான் உளறி அது முடிய-
இதற்காயா இந்தத் தடுமாற்றம் என்பதாய்ச்
சிரித்து இகழ்கிறாய்-
இப்போது
உன் மங்கிய நிற துருவிலைப் பற்களிலிருந்து
மாபிள் பளிங்குகளின் நிறவீனம் பற்றி
ஒரு கண மௌனத்தின் போது நினைக்கக் கிடைத்தது.


ஒருவாறு முத்தையுதிர்த்தச் சம்மதித்தாயிற்று-
பேசுகிறாய்-
நான் விரும்பும் பதிலைச் சொல்வது போல்
அண்மிக்கிறாய்.
எனக்கு இளைக்கிறது.
உடல் வெற்றாகி, எந்நொடியும் காற்றில்
எழும்பிப் பறக்கடிக்கக் கூடிய ஒற்றைச் சொல் வேண்டாம்
அங்கச் சைகையொன்றே பாக்கி,

அண்மித்து, வெகு அண்மையில்,
மிக்க சமீபித்த நினையாத சொல்லொன்றில்
பேச்சை மாற்றி,
தொக்கு நிற்கும் வாக்கியங்களோடு:
நான் -
பதப்படுத்தித் தகரத்தில் அடைத்துப் பொதிசெய்த மீனான
உடம்பைக் கொண்டவன்,
இற்று மக்கிப்போன வன்கூட்டினன்,
முற்றாய் உயிரேறி எழுப்புமுன்
நீ:
மூச்சின் வெளிக்காற்றிலும் விடம் கலக்கும் நீ
அந்தரத்தே தவியென்று விட்டென்னைப் போகின்றாய்!

காலாகிக் கையாகித் தலையாகி ஈற்றில்
தலையின் முடியின் கறுப்புமாகிப் போயே
போய்விட்டாய்..

பாம்புக்கு பல்லுக்குக் கீழான பைகளிலும்,
தேளுக்குக் கொடுக்கிரண்டிலும் மட்டுமே விஷம்.

991104 இரவு10.37 மணி



## இன்னொருநாள்

பேய்கள் எழுந்தாடின,
எழுந்தன ஆடின.

கிண்டிச் சதை தின்னும் துர்ச் சாத்தான்
நெஞ்சின் மயானத்தில் புதைத்து நாட்பட்ட
பிணத்தின் அழுகிப் புழுத்த ஊனைக் கிளறி.

பலியிட்ட கல்லின் ஈரம் உலர்ந்து
நாற்றம் விட்டுக் காற்றும் தீட்டுக் கழிந்து கனகாலம்.
ஆனாலும்,
திரும்பப் பலிபீடக் கல்லிலிருந்து உயிர்க்கிறது பேய்-
பச்சைக் குருதி நெடியுடன்.

மந்திரம் செபித்து,
உச்சாடனஞ் செய்து பேய் ஓட்டவிழையாதிருந்தேன்.
பத்திரக் குழையடித்துப் பரிகரித்து
காய் வெட்டிக் கழிப்புக்கழித்துச் சடங்கேதும்
நிகழ்த்திலேன்.

அலைகள் அடங்கித் தணிந்து தூங்கியது
ஊழியின் துவக்க அலையை -
கரையும், கரையின் நெடுந்தெங்கும் மூச்சைத் திணற
ஆர்த்து எழுப்பிற்று.

கரைமணலோ நண்டுகளை வெளியுமிழ்ந்து காற்றில்
சொரிந்தது.

அலையின் துமி பட்டு
மங்கின நிலவுஞ் சூரியனும் உப்புப் பூத்து.

வளவின்
மூலைகள் நான்கிலும்
காவல் பண்ணப் புதைத்திருந்த சீசாக்களை
தோண்டி வீசினேன்.

இடுப்பிலிருந்த அரைக்கூட்டை
அரைஞாண் கயிற்றோடு அறுத்துக் கடாசினேன்.

எனது உள்ளைப் பிடித்தே வைத்திருந்த
இழுவிசையைத்
தளரென்று விட்டேன்.


தீ தாவி வெந்து தணிந்த மயானம் - நெருப்பு
ஈரலித்துக் காந்தச் சுவாலிக்கிறது.

ஒரு சூனியக் கிழவிபோல்
பொம்மையாய்ச் செய்தென்னை,
ஒவ்வொன்றாய் ஆணியை ஏற்றுகின்றாய் -
அங்கம் அங்கமாய்.

இன்னும் ஏற்று ஏற்றென்று நானே காட்ட
ஏற்றுகிறாய், மீதி அங்கப் பாகமெல்லாம் ஆணிகளை.

ஏற்று....
இன்னும்.... இன்னும்....
இங்கும்.... அங்கும்....
ஏற்று.... ஏற்று....

மந்திரித்து விடப்பட்டவன்
வேறும் எதைத்தான் சொல்வேன்...
நீ ஏற்று.



## பிறிதும் ஒருநாள்

இல்லை -
இப்போதிங்கு மழை பெய்யவில்லை.

வானைக் கூறிடவோ! மின்னல்
வெட்டிக் கண்கள் கூசிக் கணமொன்றில்
குருடாகவில்லை.

புழுதி புகையாய்க் கிளம்பி,
ஊர் மணக்கவுமில்லை.

துயில் குலைந்த கும்பகர்ணனாய்த் - தார்த்தெருவும்
நீளக் கொட்டாவிவிட்டுக், குளித்துப் பூசி
மினுக்கி எனக்காய் தயாராவதாய் எத்திவைக்கக்
கண்டவர் எவர்தானும் வந்திலர்.

முழுக்கச் சாத்தப்படாத யன்னலூடு
தூவானந்தட்டி மெய்
சிலிர்த்தல் நிகழவில்லை.

கூரைத் தகரக் குழிவுகளில் வழிந்து
நீர்த்தாரை ஓடி
வாசலில் தேங்கவில்லை.

மாரி பெய்ய நிறம் வெளித்த இலை முதுகின்
பச்சையின் பல்வகைமை அறிந்திலேன்.

விறைத்த அரக்கர்களின் கேசங்களாய் ஓலைகள்
பறக்க
தென்னையொன்றும் மழையின் காற்றோடு மல்லுக்கு
நிற்கவில்லை.

தேங்கிய பள்ளத்தில் குளித்தொரு காகம்,
தலைகெழித்து உடம்பதிரச் சிலுப்பி
வெள்ளை நரைதெரிய நிருணத்தி - தெத்தி
இளகிய ஈரத்தின் பாரத்தோடு மெல்லென வானில்
எழும்பி மிதந்ததா - இல்லவேயில்லை.

நனைந்து கொடுகிப்போய்
தாவாரத்தில் ஒடுங்கி ஒதுங்கிய
செவலை நிறக் கோழியிட்ட
கபிலக் கழிவொன்றும் அருசையாய்
நாற்றமெடுக்கிறதா என்ன?

என்னிரு செவிச்சோணைகளையும் பொத்தி
உள்ளங்கையால் - விலத்தி பொத்தி, பொத்தி விலத்தி
மறுத்தும் அநுமதித்தும் காற்றை,
மழையின் சோவொலியில் நனைய
விரும்பி விழைகிறவனாய் நானில்லை.

மழையகழ்ந்த குழிகள்தோறும்
புழுதி கரைந்து, புதுநிறத்தை வெறித்தபடி
பார்வைக்கும் புலனுக்குமான
மிக்க குறைந்தபட்சத் தொடர்பும் அறுந்தவனாய்
நானென்ன நின்றேனா?

இல்லையே, இல்லையே -
நான்தான் இப்போதிங்கே
மழையே பெய்யவில்லை என்றல்லவா சொல்கிறேன்.

நாங்கள் இன்னும் நடந்து கொண்டிருக்கிறோம்.
மகளிர்க்கான அந்தச் சிறிய கறுப்பு ஒற்றைக்
குடைக்குள்
(என்னது, தோள் பையினுள் பவுத்திரமாய்
இருக்கிறது)
ஒருத்தருள் ஒருத்தர் ஒதுங்கி,
தோளுரசப் பின் தொடையிரண்டும் தான் உரசிக்
கூச்சம் தலையெடுத்துத் தோற்க,
கணச்சூட்டின் பொறி பறக்க-
நாகரீகங்களின் எல்லைகளுக்கும் வெகு அப்பாலாகி,
பலவீனமே பலமாக எந்தக்கணத்திலும் -
அவள் கரங்களைப்
பற்றிவிடுவேனோ என நானும்,
பற்றிவிடானா என அவளுமாய்
தகிப்புற்று நடக்கிறோம்.

ஒரேயொரு கணம்போதும்....
ஆனாலும் இன்னும் நடக்கிறோம்.
இன்னும்...
இ... ன்... னு... ம்...



## இன்னும் ஒரு வேறு நாள்

உனக்கும் எனக்குமான உள்ளுறவின்
நீ கருதுந் தூய்மையினுள்
குண்டொன்று வெடிப்பதற்கு
அண்ணளவாய் நிமிடங்கள் அறுபத்தைந்தின்
இப்பால்-

நாம் பேரூந்தில் இருந்தோம்,

பேரூந்து என்றால் பேரூந்து: பருந்தெனப் பறந்து நம்
கணங்களைக் கொத்தி இழுத்துத் தின்றுகொண்டிருந்த

நமக்கு அருகருகேயான ஆசனங்கள் -
கைச் சந்துகள் இரண்டும்,
காலின் தொடையிரண்டும் சதை நொறுங்கி, நெருங்கி
சூடு ஊடு பாயும்.
உனது வியர்வையின் மணத்தை இவ்வளவு
நெருக்கத்தில்
இதற்குமுன்னம் அறிந்ததில்லை நான்.

அங்கங்களின் மீதான தங்களின்
ஆதிக்கத்தை இழந்துபோன சனங்களின் திரள்
புழுக்கம், மனித வெக்கை.

எனது கால்விரல்கள் உன்னதைத்தேடி
துளாவுகின்றன.
உனது பாதணியின் கால் மறையும் தோலில்
நத்தைநான் -
ஒரு தற்செயலை உருவாக்கி
நாடிபிடித்து உன்னை அறியும் முனைப்பு.

பிதுங்கிய மனிதர்கள்
உன்னை இன்னும் இன்னும் என்னுள்
நுழைக்கின்றனர் - அவர்களுக்கு என் நன்றி.

பருந்துக்குப் பாதி இரையாயிற்று -
தவிப்பு பெருந்தீயாகி மூண்டு பரவுகிறது.
நான் அணிந்து வந்த அழுகு முகம் கிழிந்து உன்முன்,
எனது சாயம் கரைந்து நிஜநிறமாய் வெளுக்கிறது.
நானே நாணும் முகம்....
சொற்களால் தோலுரித்து என் போலியை
நீங்கி நானாய் நான் ஆக -
ஒரு கணம் நாயாயும்,
மறு கணம் பேயாயும்,
அதற்கும் அடுத்த கணம் கொடும்
பிசாசாயும் என்னை நீ காண்கிறாய் -

எனது கோரம் தெறிக்கக், கறுத்துச் -
செந்தணலிடை விட்டெறிந்த மென் மலராய்
வாடிச் சுருண்ட உன் முகத்தின்
செத்த பாவங்களிலிருந்தும்,
என் முகம் நோக்க ஒண்ணாது - கூசி,
அப்பாவித்தனமாய் அலைந்த உன்
நீர் படர் விழிகளிலிருந்தும்
நானதைப் புலனுற்றேன்.

நான் கதையை மாற்றி
பேரூந்தின் சிறகை வெட்டிவிடப்போவதாய்ச்
சொல்கிறேன்.
நீ சிரிக்கிறாய்,
குலுங்கிக்குலுங்கி-
மீளவும் என் கடைவாய்களில் பற்களை
நீளவைக்கிறபடியான சிரிப்பு.

முக்கால்வாசிக்கும் மேல் இன்னும் பருந்துக்கு
இரையாய் இட
மனது இடம் தருவதாயில்லை.
நேரத்தைக் கூட்டவென்று இறங்கி நடக்கத்
தீர்மானிக்கிறேன் - நீயும் இயைகிறாய்.
பருந்தின் கூரலகுகளிலிருந்து விடுபட்டாயிற்று.
பேரூந்து நிற்கிறது-
தடுப்பில் நான் சரிந்து உன் கூந்தலை முகர்கிறேன் -
நாய்க்குணமென்பாயோ?

பிறகு நடக்கிறோம்.
காற்றுக்குக் கலைக்க
ஆடைகளைக் கொடுத்திருந்தோம்.
தலைமுடி முகத்தில் குலைகிறது,
ஒதுக்கி ஏற்றுகிறாய்.
பிறகும் நடந்துகொண்டிருக்கிறோம்.

இன்று மழைபெய்யவில்லை.
வெட்டவெளியான வானத்தில் வெள்ளிகள் அரும்பிய
பகலின் கடைக்கும் கடைப்பொழுது,
திக்குத் தப்பியலைந்த செம்மறிகளை மீட்டு,
மந்தைகளை ஓட்டிச் சென்றுவிட்டார் மேய்ப்பர்.
அண்ணாந்து வான் பார்த்து "அன்றுபோல்
இன்றும் கொட்டாதா ஒரு பாட்டம்" என்கிறேன்.
இன்று மழை பெய்யாது.

வாகனங்களின் இரைச்சலால் நிரம்பிப்போயுள்ள
இருவரும் பேசுதலற்று நடந்த நாழிகளில் -
இந்த வாகனங்கள் ஓடியது தெருவிலல்ல:
என்னுள் தானென்றால் மறுப்பாயா?

நடக்கிறோம்.
நான் அடிகளைக் குறுக்குகிறேன்,
நீயறியாமல் நின்று தாமதிக்கின்றேன் -
நீயோ, தனியே சிறு தொலைவு பேசி நடந்து, பின்
நிதானித்து நான்வரக் காத்திருந்து சேர்கின்றாய்
என்கூட
ஆயினுமென்ன,
இனி உன் வீடு வரும் - தூரம் மிகக்கொஞ்சம்
பிறகு,
பிறிதொரு நாள் சொல்லி -
நான் நிற்கத் தனியாகி நீ நடந்து, ஆள்மறையும்
இருளுள் கரைவாய்,
இனிவரும் இரவும்
இயக்கத்தை இழந்து சர்வமும் உறையும்.
அடுத்த நகர்வு பற்றி வியூகங்கள் வகுப்பதில்
அலையின்
சுழிமையத்தில் தலைகுப்புற வீழ்ந்துபோவேன்.
அது அவதி - அந்தரம் - துயரம் : கொஞ்சமாய்
சுகமேயெனினும்,

இனியும் சகியேன்-
இதனைத் தாண்டியும் பொறுமையின் எல்லையில்
புள்ளிகளில்லை.
மனசை மனசாக்கித் துணிந்து -
கேட்க நினைக்கின்றேன்...
கேட்கப் போகின்றேன்...
இதோ கேட்டும்விட்டேன்... :
நான் உன்னிடமிருந்து
முதன்முறையாக
ஒரு முத்தத்தைப் பெறவேண்டிக் கேட்டேன்
அப்போது: சரியாக
அறுபத்துநான்கு நிமிடங்களும்,
அறுபது செக்கன்களுமாகி விட்டிருந்தது. ●

11012000இரவு 8மணி



# இருண்ட கண்டத்தினுள் தொடரும் இரு இனங்களுக்கிடையிலான மோதல்கள்

**தி. உமாகாந்தன்**

**இந்த இரு இனங்களுக்கிடையிலுமான மோதல்களுக்கும் இரத்தச்சிதறல்களுக்கும் ஐரோப்பியக் காலனித்துவ ஆட்சியாளர்களின் பிரித்தாளும் தந்திரமே காரணம் என்பதை இலகுவாகவே புரிந்து கொள்ளமுடியும்.**

இனங்களுக்கிடையிலான மோதல்களும் அதனால் ஏற்படும் இரத்தச் சிதறல்களும் ஒரு தொடர்கதையாகவே நீள்கின்றன. இருண்ட கண்டம் என வர்ணிக்கப்படும் ஆபிரிக்காவின் பரந்த ஏரி என வர்ணிக்கப்படும் புறூண்டி, ருவாண்டா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு என அழைக்கப்படும் முன்னாள் ஸயிர் ஆகிய நாடுகளில் வாழும் ஹூது (Hutu), ருற்ஸி(Tutsi) ஆகிய இரு இனங்களுக்குமிடையிலே அதிகரித்து வரும் வெறுப்பு முரண்பாடுகளும் மோதல்களும் கடந்த ஒரு தசாப்தமாகவே இப்பிரதேசத்தை கொலைக்களமாக மாற்றி வருவதுடன், இப்பிரதேசத்தின் இதர நாடுகளிலும் பதட்டத்தை ஏற்படுத்தி உள்ளன. இந்த இரு இனங்களுக்கிடையிலுமான பரஸ்பரம் நம்பிக்கையின்மையும் சந்தேகமும் இவற்றிற்கிடையேயான இடைவெளியையும் வெறுப்புணர்ச்சியையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இது கடந்த காலங்களில் இப்பிரதேசங்களில் ஏற்பட்ட இரத்தச்சிதறல்களை விட மிகமோசமான ஒரு நிலையை நோக்கி இந்த இரு இனங்களையும் நகர்த்திக் கொண்டிருக்கிறது. புறூண்டியிலும் ருவாண்டாவிலும் கொங்கோ ஜனநாயகக் குடியரசிலும் இந்த இரு இனங்களுக்கும் இடையே இன்று ஏற்பட்டிருக்கும் இடைவெளியும் வெறுப்புணர்ச்சியும் எந்த நிமிடத்திலும் பெரும் வெடிகுண்டாக வெடிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த இரு இனங்களுக்குமிடையே கடந்த காலங்களில் ஏற்பட்ட இனமோதல்களின் விளைவு இரத்தத்தை உறையவைக்கும் தன்மை கொண்டது. மனித நாகரீகம் வளர்ந்துவிட்டது என உலகம் நெஞ்சை நிமிர்த்திய கால கட்டங்களில் ஹூது, ருற்ஸி ஆகிய இனங்களுக்கிடையே ஏற்பட்ட இனமோதல்கள், மனிதம் மறந்து, கத்திகளாலும் வாள்களாலும் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலிவாங்கியது. நாம் கடந்த தசாப்தங்களிலே கண்டுகொண்டது. 1994ம் ஆண்டு ருவாண்டாவிலே ஹூது தீவிரவாதிகள் ஏறத்தாழ 5இலட்சம் ருற்ஸி மக்களைப் படுகொலை செய்தனர். இதனைத் தொடர்ந்து ருவாண்டாவில் கிளர்ச்சிகள் கிளம்பின. இதன் பின்னர் இவை கொங்கோ ஜனநாயகக் குடியரசுக்கும் பரவின. இந்த இனமோதல்களின் காரணமாக கொங்கோ ஜனநாயகக் குடியரசு கிட்டத்தட்ட நிர்மூலமாகும் ஒரு நிலைக்கு வந்துவிட்டது. புறூண்டி எப்போதுமே பதட்டநிலையிலேயே இருக்கிறது. ஒரு சிறு தீப்பொறிகூட பெரும் நெருப்பாக மூளும் அபாயநிலை இன்று புறூண்டியில் ஏற்பட்டிருக்கிறது.

புறூண்டியைப் பொறுத்தவரை பெரும்பான்மை இனம் ஹூது. ஆனால் இப்போது அவர்களை ஆள்



வதோ ருற்ஸி இனத்தவர்கள். 1994ம் ஆண்டு இனப்படுகொலைகளைத் தொடர்ந்து ருவாண்டாவுக்குத் தப்பிச் சென்ற ஹூது தீவிரவாதிகள், இப்போது சிறிது சிறிதாக புறூண்டிக்குள் ஊடுருவி அரசபடைகள்மீது தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளனர். விளைவு, புறூண்டியின் ருற்ஸி அரசு அங்குள்ள 350000 ஹூது இன மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து பிரித்தெடுத்து மலைப்பகுதியிலுள்ள பாரிய வசதிகளெதுவுமற்ற அகதி முகாம்களில் தங்க வைத்து இம்முகாம்களைச் சுற்றி பாரிய இராணுவக் காவலை இட்டுள்ளது. ஹூது தீவிரவாதிகளிடமிருந்து இம்மக்களைப் பிரித்துப் பாதுகாப்பதற்காகவும், ஹூது தீவிரவாதிகள் இம் மக்களிடமிருந்து உணவு மற்றும் தங்குமிட வசதிகளைப் பெறுவதைத் தவிர்க்கவுமே இந்த ஏற்பாடு என ருவாண்டா அரசு கூறுகின்றபோதும் ருற்ஸி இன அரசாகிய தமக்கு ஹூது தீவிரவாதிகளால் ஆபத்து ஏற்பட்டால் இந்த அகதிமுகாம்களிலுள்ள 350000 ஹூது இன மக்களின் உயிர்களுக்கும் எந்தவிதமான உத்தரவாதமுமில்லை என்ற எச்சரிக்கையை மறைமுகமாக விடுப்பதற்காகவே அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த இரு இனங்களுக்கிடையேயான மோதல் இப் பிரதேசத்திலுள்ள எட்டு நாடுகளைச் சம்பந்தப்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல, ஆபிரிக்காவின் பரந்த ஏரி என வர்ணிக்கப்படும் இப்பிரதேசத்தை இன்று உலகின் மிகக் குழப்பமான பகுதியாகவும் மாற்றியுள்ளது. இப்பிரச்சினையில் எப்படித் தலையிடுவது, இப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்ற குழப்பத்தையும் இதர நாடுகளுக்கு ஏற்படுத்தி உள்ளது. ஒவ்வொரு முறையும் இப்பிரதேசத்தில் இவ்விரு இனங்களுக்கும் இடையிலான மோதல்கள் ஏற்படும்போது, இரத்தம் சிதறும்போது என்ன காரணத்துக்காக இந்த இரு இனங்களும் மோதுகின்றன? இவை காலம் காலமாக இரு இனங்களுக்குமிடையேயான வெறுப்புணர்வின் விளைவா? அல்லது அரசியல் சதிகளால் ஏற்படுத்தப்பட்ட திட்டமிடப்பட்ட மோதல்களா? என வெளிநாடுகள் திணறுகின்றன. பல வெளிநாடுகள் கடந்த காலங்களில் இரு இனங்களின் பழங்குடி மக்களிடையே ஏற்பட்ட வெறுப்பின் விளைவே இம்மோதல்கள் என்று கூறி, இவற்றில் தலையிடாமல், தப்பித்துக் கொள்கின்றன. 1994ம் ஆண்டு ருவாண்டா படுகொலையின்போதும் இந்தக் காரணத்தைக் கூறியே நாகரீக உலகம் வெட்கித் தலை குனியும் மனிதம் தோற்றுப்போன மிகமோசமான இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்தாமல் உலகநாடுகள் கண்பொத்தி, கைகட்டித் தப்பிக் கொண்டன.

ஆனால் ஆபிரிக்கா தொடர்பான ஆய்வாளர்களின் கருத்துகளின்படி உலகநாடுகள் கூறுவது உண்மை இல்லை. இரு இனங்களுக்கிடையேயும் வெறுப்பு நிலவி வருவது உண்மை, ஆனால் அது பழமையானது அல்ல. உலகின் ஒவ்வொரு பகுதிகளிலும் நிலவி வரும் இன முரண்பாடுகள் போன்றதே ஹூது, ருற்ஸி ஆகிய இரு இனங்களுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளும், அதன் விளைவால் ஏற்பட்டிருக்கும் மோதல்களுமே என்பதுதான் ஆபிரிக்கா குறித்த ஆய்வாளர்களின் கருத்து. இன்னும் சற்றுப் பரந்து நோக்கினால் ஆபிரிக்காவின் இந்த இனமோதல்களும் பால்கன் நாடுகளின் இன மோதல்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவையே.

பழைய பிரிவுகள், தப்பிக்கும் எண்ணம், ஆளுமை உணர்வு இவை அனைத்தும் அரசியல்வாதிகளால் தூண்டப்பட்டு, அதுவும் குறிப்பாக அதிகார தாகம் கொண்ட அரசியல்வாதிகளால் தூண்டப்பட்டு, இன்று இனங்களுக்கிடையேயான மோதல் வன்முறைவடிவங்களாகிவிட்டன.

ஆபிரிக்காவின் பரந்த ஏரி எனப்படும் இப்பிரதேசம் குறித்த ஆய்வாளரும், அன்ற்வேர்ப், லூவேன் ஆகிய பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளருமான Filip Reyntijens கூறுகிறார் 'இது பழங்குடி மக்களுக்கிடையிலான வெறுப்பல்ல. இந்தக் காரணம் பரவலாக்கப்படுவதற்கான காரணம் ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் இக் காரணத்தையே வலியுறுத்துகின்றன. ஏனெனில் இதுவே பிரச்சனைக்கான காரணத்தை இலகுவாக அவர்கள் உலகுக்குச் சொல்ல வசதியாக இருக்கிறது. ஆபிரிக்காவில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் இப்படி இலகுவாகச் சொல்லிவிட்டு தப்பித்துப் போய்விடுகிறார்கள்' என்கிறார்.

இப்பிரதேசம் குறித்த ஆய்வாளர்கள் இங்கு காலனித்துவ ஆட்சியாளர்கள் வருமுன் இருந்த இன விகிதாச்சாரம் குறித்து பொதுவாகவே ஒன்றுபடுகிறார்கள். காலனித்துவ ஆட்சியாளர்களாக முதலில் ஜேர்மனியும் பின்னர் 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பெல்ஜியமும் இங்கு வந்தனர். இவர்கள் வருவதற்கு முன்னர் இப்பிரதேசத்தில் விவசாயத்தை முக்கிய தொழிலாக மேற்கொண்ட ஹூது இன மக்கள் 80வீதமாகவும், அவர்களைத் தொடர்ந்து இப்பிரதேசத்துக்கு வந்த பண்ணைத் தொழிலைப் பிரதானமாகக் கொண்ட ருற்ஸி இன மக்கள் 15வீதமாகவும், ற்வா எனப்படும் இனமக்கள் 1வீதமாகவும் இருந்தனர். இந்த இனங்களிடையே முன்னரும் கூட போட்டியும் வெறுப்புணர்வும் பரவியிருந்தது. ஆனால் சமீப காலங்களில் நிகழ்ந்ததுபோல இனமோதல்களோ, இனப்படுகொலைகளோ முன்னர் நடக்கவில்லை.

இதில் விதிவிலக்கு ற்வா இனமக்கள். காரணம் இவர் கள் ஹூது, ருற்ஸி ஆகிய இரு இனங்களாலுமே ஒடுக் கப்பட்டார்கள். காலனித்துவ ஆட்சியாளர்கள் வரு வதற்கு முன்னர் புறூண்டியிலும் ருவாண்டாவி லும்ஆட்சிசெய்த அரசர்கள் ருற்ஸி இனத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். ஆனால் உயர்நீதி மன்ற அதிகாரிகள் பொதுவாகவே ஹூது இனத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். ஆள்பவர்க்கும் ஆளப்படுபவருக்குமிடையே பதட்ட நிலைமை இரு ந்து வந்தபோதும், கலப்பு மணம் போன்ற விடயங்கள் வெகு சாதாரணமாகவே இருந்தன.

ஆனால் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர் கள் இப் பிரதேசத்திற்கு வந்த பின்னரே அனைத்தும் தலைகீழாகியது. மோசமான இனமோதல்களுக் கான வித்துக்கள் விதைக்கப்பட்டன. இந்தக் கால னித்துவவாதிகள் இனங்கள் தொடர்பான தமது எண் ணங்களைத் திணிக்க முற்பட்டனர். ஒரு இனம் உயர்ந்தது; மற்ற இனம் தாழ்ந்தது. ஒரு இனமே மற்ற இனங்களை ஆளும்தன்மை கொண்டது என்ற விஷ வித்துக்கள் தூவப்பட்டன. தமக்கு விருப்பமான இன மாக அவர்கள் தெரிவு செய்தது ருற்ஸி இனத்தை. ஏனெனில் அவர்கள் பார்வையில், ருற்ஸி இனத்தவர் கள் உயர்ந்தவர்கள், மெலிந்தவர்கள், கம்பீரமான வர்கள். அதனால் அவர்கள் கிட்டத்தட்ட ஐரோப்பி யர்களைப் போன்றவர்கள். The Rwanda Crisis எனும், இப் பிரதேசங்களில் நடந்த படுகொலைகள் குறித்து வெளிவந்த, நூலில் பிரெஞ்சு எழுத்தாள ரான Gerard Prunier '1920ம் ஆண்டு பெல்ஜிய ஆட்சி யாளர் ஒருவர், ருற்ஸி இனத்தவர் என்றால் அதன் அர்த்தம் ஆளப்பிறந்தவர்கள்' எனக் கூறியதைக் குறிப்பிட்டுள்ளார். அந்த பெல்ஜிய ஆட்சியாளர் மேலும் ஒருபடி சென்று ருற்ஸி இனத்தவருடைய அற் புதமான பிரசன்னமே அவர்களுக்கு மற்ற இனத்தவர் களை ஆளும் தகுதியைக் கொடுத்துள்ளது எனக் கூறியதுடன் ஹூது இனத்தவர்கள் குறைந்த புத்தி யும், கூடிய எளிமையும், கூடிய பணிவும் கொண்ட படியால் அவர்களை எப்போதுமே சேவை செய்யும் இனமாகவே வைத்துக் கொள்ளலாம். ஏனெனில் அவர்கள் எப்போதுமே கிளர்ந்தெழ மாட்டார்கள் என வும் கூறியுள்ளதாக அந் நூலில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இவற்றின் மூலம் இந்த இரு இனங்களுக்கிடை யிலுமான மோதல்களுக்கும் இரத்தச்சிதறல்களுக் கும் ஐரோப்பியக் காலனித்துவ ஆட்சியாளர்களின் பிரித்தாளும் தந்திரமே காரணம் என்பதை இலகுவா கவே புரிந்து கொள்ளமுடியும். இந்த விஷவித்துக் களே, இளகுநிலையில் இருந்த, இந்த இரு இனங்க ளுக்குமிடையிலான உறவுகளை கடுமையாக்கி வன் முறையாக்கியதென்கிறார் வரலாற்றாசிரியரான Alison Des Forges. 1950ம் ஆண்டின் இறுதியில் பெல் ஜிய காலனித்துவ ஆட்சியாளர்கள் ருவாண்டாவிட மிருந்தும் புறூண்டியிலிருந்தும் வெளியேறத் தீர்மா னித்துவிட்ட காலகட்டத்தில் ருற்ஸி இனத்தவருக் கும் ஹூது இனத்தவருக்கும் இடையிலான கோடு ஆழமாக வரையப்பட்டுவிட்டது. வெறுப்பும் கோப

**மனித நாகரீகம் வளர்ந்துவிட்டது என உலகம் நெஞ்சை நிமிர்த்திய கால கட்டங்களில் ஹூது, ருற்ஸி ஆகிய இனங்களுக்கிடையே ஏற்பட்ட இனமோதல்கள், மனிதம் மறந்து, கத்திகளாலும் வாள்களாலும் பல்லா யிரக்கணக்கான மக்களின் உயிர் களைப் பலிவாங்கியது, நாம் கடந்த தசாப்தங்களிலே கண்டுகொண்டது.**

மும் ஹூது இனத்தவரிடையே மிகப்பாரிய அளவில் பரவிக் கிடந்தது. விளைவு தொடர்ந்து வரும் வரு டங்களில் எதிரொலிக்கத் தொடங்கியது. முதலில் 1959ம் ஆண்டு ருவாண்டாவில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஹூதுக்கள் பல ருற்ஸிகளைப் படுகொலைசெய்தனர். இதற்குப் பதிலடியாக புறூண் டியின் ருற்ஸி ஆட்சியாளர்கள் ஹூது இனத்தவருக் கெதிராக தமது ஒடுக்குமுறையை விஸ்தரித்தனர். 1959ம் ஆண்டு ருவாண்டாவில் ஹூதுக்களால் படு கொலைசெய்யப்பட்ட ருற்ஸிக்களின் பிள்ளைகள் கெரில்லாக்களாக மாறி 1994ம் ஆண்டு ருவாண்டா வின் ஆட்சியைக் கைப்பற்றியதும் இங்கு குறிப்பிடப் படவேண்டிய விடயம். புறூண்டியில் இரு இனங்களை யும் இணைக்கக்கூடியவராக இருந்த இளவரசர் லூயிஸ் றவகஸோர் - இவர் ருற்ஸி இனத்தைச் சேர்ந் தவர் - 1961இல் படுகொலை செய்யப்பட்டார்.

1962ம் ஆண்டு ருவாண்டா, புறூண்டி ஆகிய இரு நாடுகளும் சுதந்திரம் பெற்ற பின்னர் இனமுரண்பா டுகள் மேலும் வளர்ந்தன. இனமோதல்கள் தொடர்ந் தன. இனப்படுகொலைகள் அதிகரித்தன. ஒரு இன த்தைச் சேர்ந்த மக்கள் மற்றைய இனத்தைச் சேர்ந்த மக்களைக் கொல்லும் செயல்கள் அதிகமா கின. இந்த அவலம் இந்த இனங்களின் முன்னைய வரலாற்றில் நிகழ்ந்ததில்லை.

ருவாண்டாவில் ஜனாதிபதி யுவெனெல் ஹபயறி மானாவின் ஆட்சிக்காலத்தில் இந்த இனமுரண்பா டுகள் உச்சத்தை அடைந்தன. ஹூது இனத்தைச் சேர்ந்த அவர் ருவாண்டாவில் வாழும் அனைத்து ருற்ஸி இனமக்களுமே, தம்மைப் பதவியிலிருந்து அகற்ற முயலும், ருற்ஸி தீவிரவாதிகளின் ஆதரவா ளர்கள் என்று குற்றம் சாட்டினார். இது இனங்களுக் கிடையிலான முரண்பாட்டை, வெறுப்பை மேலும் அதிகரித்தது. 1994ம் ஆண்டு விமான விபத்தில் ஜனாதிபதி யுவெனெல் ஹபயறிமானா(இது விபத் தல்ல. பிரான்ஸ்-பெல்ஜியம் மேற்கொண்ட சதி என்றே நம்பப்படுகிறது) கொல்லப்பட, உலகமே வெட்கித் தலை குனியும் மனிதப் படுகொலைகள் 100நாட்க ளில் தொடர்ந்து நடந்தன. ஆனால் மனித உரிமைக் கும் ஜனநாயகத்துக்குமாக குரல் கொடுப்பதுபோல் நடிக்கும் மேற்குலகும் தனது கண்களை இறுக்கி மூடிக்கொண்டது. 5இலட்சம் ருற்ஸி இனமக்கள் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டனர். ஆனால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும்

என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். கொஸோவாவை நோக்கி விரைந்த நேட்டோவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஏன் ஐக்கியநாடுகள் சபையும்கூட இருண்டகண்டத்தில் இரத்தம் பெருக்கோடியதைப் பார்க்காதவர்களைப்போல கண்களை மூடிக்கொண்டது, சென்ற நூற்றாண்டு குறித்த வரலாற்றில், இரத்தத்தால் எழுத வேண்டிய பக்கங்கள். ஆபிரிக்க மக்களின் உயிர்கள் உயிர்களேயல்ல, அவற்றுக்குப் பெறுமதியுமில்லை. மிருகங்கள் தமக்குள் அடித்துக் கொண்டே சாகின்றன. அதுபோல்தான் இதுவும் என மேற்குலகம் சொல்லாமல் சொன்னது சென்ற நூற்றாண்டின் மறக்கமுடியாத கொடுமைகளில் ஒன்று. அடுத்து 1997ம் ஆண்டு கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஏற்பட்ட மோதல்கள் இந்நாட்டை கிட்டத்தட்ட நிர்மூலமாக்கும் நிலைக்குக் கொண்டு வந்திருப்பதுடன் இப்பிரச்சனைக்குள் இப்பிரதேசத்திலுள்ள எட்டு நாடுகளையும் இழுத்துவிட்டிருக்கிறது.

ஆபிரிக்காவைப் பொறுத்தவரை 1970ம் ஆண்டிலிருந்து இதுவரை 30யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவற்றுக்கான காரணம் இனமுரண்பாடுகளே. தற்போது கொங்கோ ஜனநாயகக் குடியரசில் நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் பற்றி ஐ.நா. பாதுகாப்புச்சபையில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் மடலின் அல்பிறைற் குறிப்பிடும் போது, ஆபிரிக்காவின் முதலாவது உலகப்போர் என்றார். அந்த அளவிற்கு இப்பிரதேசத்தில் முரண்பாடுகள் கடுமையாக பரவுகின்றன. இந்த முரண்பாடுகள் இன்று இரத்தம் சிதறும் யுத்தங்களாக மாறியதன் முக்கிய காரணம் அமெரிக்கா. நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்ட World Policy Instituteஐச் சேர்ந்த வில்லியம் ஹற்றுங் 'கடந்த தசாப்தங்களில் அமெரிக்கா தவறான வழிநடத்தல்களின்கீழ் ஸயிரின் சர்வாதிகாரி மொபுற்றோ ஸெஸே ஸிக்கோவுக்கும் அங்கோல கிளர்ச்சியாளர் தலைவர் ஜொனாஸ் ஸ்வாம்பிக்கும் அளித்த ஆயுதங்களே இந்த உள்நாட்டு யுத்தங்களுக்குக் காரணம்' என்கிறார். அமெரிக்க-சோவியத் யூனியன் குளிர் யுத்த காலகட்டத்தில் 1.5மில்லியன் பெறுமதியான ஆயுதங்கள் ஆபிரிக்காவுக்கு அமெரிக்காவால் விநியோகிக்கப்பட்டன. அவையே இன்றைய பல ஆபிரிக்க உள்நாட்டு யுத்தங்களுக்கு காரணம் என்கிறார் ஹற்றுங்.

இதன்மூலம் இனமோதல்களைத் தூண்டிவிட்டு இலட்சக்கணக்கான ஆபிரிக்க மக்களின் உயிர்களைப் பலி வாங்கி, இரத்தச் சிதறல்களைப் பரவவிட்டு, அடுத்த இனமோதல் எப்போது எங்கே வெடிக்குமோ, அதன் விளைவு மேலும் எத்தனை இலட்சம் ஆபிரிக்க மக்களின் உயிர்களாக இருக்குமோ என்ற அச்சத்தை நெஞ்சுக்குள் நெருப்பாய்த் திணித்திருக்கும் இன்றைய நிலைக்கு ஐரோப்பிய காலனி ஆட்சியாளர்களும் அமெரிக்காவுமே அடிப்படைக் காரணம் என்பது தெளிவாகிறது. ஆனால் இந்த ஆபிரிக்க சகோதரர்களின் அமைதியான சமாதான, சகோதரத்துவ வாழ்வுக்கான வழி என்ன என்பதுதான் இன்னமும் தெரியவில்லை. ■

# போர்க்கேலி

**சோலைக்கிளி**

தப்பியது
எனது
வீங்காத தலை
தோளில் மட்டும் அடிமட்டை கூத்தாடி
சின்னக் கீறல்
இரத்தம் சிவந்தபடி

எங்கே, உன்னுடைய ரோசாப்பூ விரல்க் கொண்டை
கொஞ்சம் தடவு
எதையும் பூசவேண்டாம்
இந்த உலகத்தில் ஓடுகின்ற அழுக்கைச் சுவாசித்து
சுவாசித்து சுவாசித்து
ஊதி என்னுடைய நெஞ்சுக்கு வெளியாலே
பொத்துக்கொண்டு இதயம்
வெடிக்கப்போகின்றேன், வெடிக்கவா என்று
தன் மூக்கை நீட்டி அடிக்கடி
கேட்கின்ற போதெல்லாம்

உன் ரோசாப்பூ விரல்க் கொண்டை
தடவும், பிரியத்தில்
அது - உள்ளேபோய் அடங்கும்
பழையபடி உலகத்தின்
ஊத்தைக்குச் சவர்க்காரம்
தேய்த்தபடி

இங்கே, சொல்ல வருவது என்னவென்றால்
உன் ரோசாப்பூ விரல்க் கொண்டை
மருந்தின்றிப் புண் ஆற்றும்

தடவு, உன் விரலின் கொண்டையினால், விளக்கம்
அதிகம் தந்து சொன்னால்
நுனியால்
என் உச்சந்தலையில் நீ தொடுகின்ற நேரத்தில்
நான் குளிர்ந்து நதியாவேன்
அதனால்

நம் ஊரில்
வெள்ளாடு சுட்டுவிட்டு அது விழுந்தபின்பு தவறென்று
எல்லோரும் சேர்ந்து வைக்கின்ற
ஒப்பாரிபோல
சின்னச் சத்தப்படாமல் மரத்தில் இருந்து வந்து
என் தோளில் குதித்து
போர்க்கேலி செய்தது ஓலை
பின்னர்தான் சலசலத்து ●

# ஒரு ஜனனத்தின் அஸ்தமனம்....
# நீர்கொழும்பூர் முத்துலிங்கம்



இறுதியாக
நீர்கொழும்பூர் முத்துலிங்கம் அவர்களினால்
உயிர்நிழலுக்காக அனுப்பப்பட்ட கவிதைகள்

அறுபதுகளில் எழுத்தியக்கத்திற்குள் பிரவேசித்த நீர்கொழும்பூர் முத்துலிங்கம் தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் தேர்ச்சியுள்ள படிப்பாளி. ஜெயகாந்தன், கு. அழகிரிசாமி, புதுமைப்பித்தன் ஆகியோரினால் ஆகர்ஷிக்கப்பட்டிருந்த இவர், முற்போக்குக் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டிருந்த போதிலும், எந்த ஒரு அணியையும் சாராது எழுத்தில் தனக்கென ஒரு தனிப்பாணியைக் கொண்டிருந்தார்.

ஈழத்திலும் புகலிடத்திலும் இருந்து வெளியாகும் சஞ்சிகைகளில் இறுதிக்காலம்வரை இவருடைய படைப்புக்கள் வெளியாகி இருக்கின்றன. சமூக வழுக்களை, இடர்களை யதார்த்தபூர்வமாகவும் உயிர்த்துடிப்புடனும் தன்னுடைய எழுத்தினால் சமூகத்திற்குக் காட்டும் இவரது எழுத்து நடையில் கவித்துவம் இழையோடும். நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் என்று படைப்பிலக்கியத்தின் பன்முக வடிவங்களிலும் தனது ஆளுமையைக் காட்டியவர்.

இவரது 'ஒரு ஜனனத்தின் அஸ்தமனம்' எனும் தொகுப்பு இளங்கீரனின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டது. எழுத்துத்துறையைவிட இவருக்கு ஓவியக்கலை, இசைக்கலை என்பவற்றிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. சிலம்பக்கலையைக் கற்றுத் தேர்ச்சி பெற்றவர். 'அரவிந்த்' எனும் பெயரில் தமிழ், சிங்களத் திரைப்படங்களில் சண்டைப்பயிற்சியாளராகவும் இருந்தவர்.

இவருடைய சிறுகதைத் தொகுதியான 'ஒன்றின் மறுபக்கம்'உம் 'அந்த அவளும் இந்த இவளும்' நாவலும் அண்மைக் காலத்தில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இனி வரவிருக்கும் அவரது படைப்பிலக்கியத் தொகுப்புகள் ஈழத்து இலக்கியத்தில் அவரின் பெயரை ஆழமாகப் பதிக்கும். நிறைய நிறைய இன்னும் எழுதவேண்டும் எனும் ஆவலுடன் இறுதிவரை இருந்த நீர்கொழும்பூர் முத்துலிங்கத்தின் ஜனனம் அவரது 52வது வயதில் 09.01.2000அன்று அஸ்தமனமாகி இருக்கிறது.

இவர் அமரத்துவம் அடைவதற்கு முன்பாக உயிர்நிழலுக்கென அனுப்பிவைத்த கவிதைகள் இதில் பிரசுரமாகின்றன. அவரின் மறைவோடு இக் கவிதைகளை யாசிக்கும்போது தனது காலத்தை மிகுந்த சூட்சும உணர்திறனோடு புரிந்து கொண்டிருந்தார்போல் தோன்றுகிறது. இவை தனது இறுதிக் கவிதைகள் என எண்ணித்தான் வார்த்தைகளை வடித்தாரோ?

- உயிர்நிழல்

## எனக்காக அல்ல!

நான் நடக்கிறேன்
எனக்காக அல்ல!
என் கால்களுக்காக
நான் எழுதுகிறேன்
எனக்காக அல்ல!
என் எழுத்துக்களுக்காக
மலர்கள் பூக்கின்றன
எனக்காக அல்ல!
அவைகளுக்காக
பறவைகள் தங்களுக்காக
சிறகுகளை விரிக்கின்றன
குருதி கொட்டுகிறது
எனக்காக அல்ல!
நிச்சயம் உங்களுக்காக
மரணம் என்னை நெருங்குகிறது
என் ஆசைக்காக அல்ல!
தனது ஆசைக்காக.

## விருது

என் வீட்டு சூரியன்
அக்கினிக் குஞ்சொன்றை
விழுங்கிவிட்டது
ஆற்றாமை தாளாமல்
ஆற்றில் விழுந்த
சந்திரன் உயிரை விட்டது
இதை எழுதிய கவிஞனுக்கு
ஆறுதல் பரிசு ஆயிரம் ரூபாய்
அருளியது இலக்கிய உலகு.

## காற்றே!

மெல்லிய காற்றே!
ஒரு நிமிடம்
சொல்லியதை மீண்டும் நீ சொல்!
புல்லாங்குழலின் துளை புகுந்து
புதிய ராகம் ஏது கண்டாய்?
மேகத்தை அனுப்பி மென்மேலும்
தேசங்கள் தேடுகின்றாயோ?
மரங்களின் சிரத்தை நீ ஆட்டி
மனிதர்களுக்கு எதுதான் நீ கூறுகிறாய்?
வயல்களில் - வரப்பினில் நீ நடந்து
வந்ததின் அவசரம் ஏதாமோ?




# என் கோட்பாட்டின் குமிழ்முனையை வருடுகிறது அவன் நுனி நா

**• His Tongue On My Theory •**

**• La langue de sa théorie à lui reconstitue la forme de ma pensée •**

---

**காமன் - வசந்தன் - குளிர்நாடன்**

ஜூலியா கிறிஸ்தேவா தன்னுடைய கோட்பாடுகளின் பெருஞ் சிறகுகளையும் நெடிய கால்களையும் அகல விரித்தபோது மண்டபத்தில் குழுமியிருந்த நூற்றுக் கணக்கானோருக்கு ஒரே நேரத்தில் பல முறைகள் பெரியதொரு 'O'வைச் சந்திக்க நேர்ந்தது.

மண்டபத்தில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக இருந்தனர். அறப் பழைய மண்டபம். தூண்கள் கிடையாது. நூற்றாண்டு கால விக்டோரியன் பண்பாடும் ஹிட்லர், முசோலினி ஆகியோருடைய கருத்தியல் அடித்தளங்களும் ஒருசேர இணைந்த ஒரு வெள்ளைக் கோலாகலம். முன் வரிசையிலிருந்த மூன்று கறுப்பர்களும் பேராசிரியர்கள் என்று சொன்னார்கள். ஒருவர் ஹெயிட்டியைச் சேர்ந்தவர். மற்றவர் அல்ஜீரியர். மூன்றாமவர் ஆபிரிக்க-அமெரிக்கர். கோப்பிக்குள் ஏராளமான பாலைச் சேர்த்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது நிறம். மற்றைய இருவரதும் நிறமும் கூட உண்மையில் கறுப்பான கறுப்பு அல்லத்தான். மாற்றுக் குறைந்த கறுப்பு. கலப்பியல், hybridity, transnational என்று பேசிக்கொள்ளும் ஹோ(மோ)மிபாபா (or Blah Blah!) வகை போலக் கோலமும் காலமும் காட்டினார்கள்.

கிறிஸ்தேவா தன்னுடைய நீண்ட கட்டுரையை மெல்ல மெல்ல வாசித்தபோது கட்டுரை தெளிவாக விளங்கிற்று. தன்னுடைய ஆங்கிலம் அவ்வளவு நன்றாக இராது எனவும் அதையிட்டுத் துன்பமுற வேண்டாம் எனவும் பவ்வியமாக முதலிலேயே கூறிவிட்டார்.

"என்னைப் பார். என் எழுத்தைப் பாராதே!" என்பதாக ஆரம்பத்திலும், "என் எழுத்தைப் பார்; என் நாவலைப் பார்; ஆனால் என்னைப் பாராதே" எனப் பின்னடியிலும் தெரிவித்தபோது அவலம் நிறைந்த சங்கடம் சூழ்ந்தது அவையில். அந்தச் சங்கடத்தில் இருந்து மீள்வதற்கு முன்னால் பின் வரிசையிலிருந்த ஒருவர் வீசி எறிந்த கேள்வித் துண்டு கிறிஸ்தேவாவின் காலடியில் வீழ்ந்தது.

"Frantz Fanon தன்னுடைய எழுத்துக்களில் தான் ஒரு ஹோமோ செக்சுவல் என்பதை மறைத்தமைபற்றி எனக்குப் பெரிய விசாரமாக உள்ளது. Fanon ஒரு ஹோமோ செக்சுவல்தானா என்பதை அறயத்தரமுடியுமா?"

"மன்னிக்கவும். Fanon உடன் நான் படுக்கவில்லை. அவருடன் படுப்பதற்கான சந்தர்ப்பமும் எனக்குக் கிடைக்கவில்லை. எனவே அவருடைய பாலியல்பு பற்றி நான் அறியேன்" என்று பதிலளித்தவாறே தன்னுடைய கேசத்தைச் சரி செய்து கொண்டார் கிறிஸ்தேவா. ஹன்னா ஆரென்ட் (Hanna Arendt) எனும் மெய்யியலாளர் பற்றிய கிறிஸ்தேவாவின் நீண்ட உரை அரிஸ்டோட்டிலின் கவிதையியல் பற்றியும் அதன் தொடர்ச்சியாகவும் அதனைப் பிளேட்டோ வழி ஏற்றும் ஹன்னா எழுதியிருப்பதையும் அது தொடர்பான விமர்சனத்தையும் பின்னர் அவ் விமர்சனம் தொடர்பான விமர்சனத்தையும் அவற்றின் தளமாற்றங்களையும் எப்படிக் கதையாடல் இல்லாமல் கவிதை இயலும் இருக்க முடியாது என்பதையும் வலியுறுத்திய ஜூலியா கிறிஸ்தேவாவின் சிந்தனையில் இருந்த களிப்பு அவருடைய பிரதிக்கூடாக வெளிவரவில்லையே என்று ஆதங்கப்பட்டார் 'பிராக் நகரின் கட்டடக்கலையும் பின் நவீனத்துவமும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்திருக்கும் பீற்றர் ஹான்.

"Discourse, discourse என்று அடிக்கடி சொல்கிறார்களே அதனுடைய அர்த்தம் என்ன என்பது எனக்குப் புரியவே இல்லை" என்று (அப்)பாவித்தனமாகக் கேட்டார் ஒரு (முதல் வருட?) மாணவன்.

Disco என்பதைத்தான் தவறுதலாக Discourse என்று உச்சரிக்கிறார்கள் என்பது அவருடைய உறு

தியான நம்பிக்கை. ஆனால் புத்தகங் காவிகளும் கருத்துக் காவிகளும் மோஸ்தர் காவிகளும் குழுமி யிருக்கும் இச் சங்கேத மண்டபத்தில் தான் கருது வது பிழையாகப் போய்விடுமோ என்ற அச்சத்தில் தான் தனது கேள்வியைப் புரியாமை என்ற கோணத் திலிருந்து அந்த மாணவன் கேட்டிருக்கக்கூடும் என்று தோன்றியது.

நானோவெனில், Discourse என்பது Intercourseஇன் முன்விளையாட்டுக்களின் முன் விளையாட்டு என்றுதான் நினைத்திருந்தேன். காரணம் பின்வரு மாறு, கொலம்பியாப் பல்கலைக்கழகத்துக்கு பட்ட மேற்படிப்புப் படிக்கச் செல்லும் பெண் ஒருத்திக்கு அவளுடைய கூட்டாளிகள் (ஆண் + பெண்) வழங்கிய ஆலோசனையை ஒட்டுக் கேட்ட ஞாபகம் எனக்கு வந்தது.

இடை பிறவரலாக அந்த உரையாடல். இதோ, சுருக்கமாக:

"I am hopelessly hetrosexual, I love men" இது அவள்.

"Oh god, Please change!" இது ஒருத்தி.

"Can't! It's difficult." இது அவள்.

"Can you cook? What you gonna do at Columbia?" இது இன்னொருத்தர்.

"Aiyo, I can't cook and Mummy won't come either." இது அவள்.

"OK. OK. If you can't change your sexuality and if you can't cook well, find <S N A G>!" இது ஒருத்தி.

"Snack? What kind of a snack you mean? I can't live on snacks." புரியாதவளாக அவள்.

"No snack, man. S-N-A-G, SNAG. Sensitive New Age Guy! A sort of feminist, post-modern Guy who will cook for women!" புரிய வைப்பவளாக ஒருத்தி.

"Just cooking?" இது அவள்.

"No, not just cooking. Cooking is the beginning of the large discourse that would eventually lead to intercourse, you know!

From discourse to intercourse, from cooking to fucking!"

சிரிப்பு. சிரிப்பு. எல்லோரும். org

ஜூலியா கிறிஸ்தேவாவுக்கு சமையல்/மையல் தெரியுமா என்பது எனக்குத் தெரியாது. அவருடைய நாவல்களை நான் இன்னும் வாசிக்க ஆரம்பிக்க வில்லை. என்றாலும் கதையாடல் கவிதையியலின் ஒரு அம்சம் என்று அவர் சொன்ன பிற்பாடு, அவரு டைய நாவல்களை வாசிக்காமல் இருக்கமுடியுமா, என்ன?

நீண்ட காலமாக அவரதும் அவரைப் போன்றவர் களதும் உளப்பகுப்பாய்வு, Lit. crit. எல்லாவற்றையும் விட Clit-lick மட்டுமே Pleasure of the textஐப் பிர தியீடு செய்யப்போதும் என்பது என்னுடைய கோ(ஓ)ட்பாடாக இருந்தது.

இப்பொழுது Lit. Critக்கு அதாவது இலக்கிய விமர்சனத்துக்குத் திரும்புகிறேன். அது பற்றிய கதையாடலும் கதைவிடலும் அடுத்தமுறை. ■

# பிணவுயிர்

ஜீவதர்ஷி

பிணமாக உலாவ
ஏனிப்போ உயிராகவா

மனதையறுத்து வெளியில்
வந்து விழுந்த பிரளயம்

பீ மணக்கும்
பின்னாலோ முன்னாலோ
தொக்கி நிற்பதென்ன
இனிக்குமா?

கண்கலங்கி
காதுவழி நீர் வழிந்து
போனவுயிர்
ஒட்டிக்கொண்டாடும்
மனிதன்

நாய் குரைக்கும்
பின்முன் தொக்கி
என்ன?
உச் உச் உச்சா?

நெஞ்சுவழி எரிந்து
பூறுவழி புகை வழிய
சிதைந்த வாய் ஊளையிடும்
மனிதம்

காத்தேட
காற்றுவழி சிதைய
சமவுடைமை



●

# ஒரு பீனிக்ஸ் பறவையின்

## புகல்வாழ் குறிப்புகள்

**இளையவி சின்னவன்**

பாரிஸில் ஆண்டுவிழாக் கொண்டாடும் பல பழைய மாணவர் சங்கங்கள் இயங்கினாலும் வேலணை மத்திய மகாவித்தியாலய ப. மா. சங்க ஆண்டுவிழா இம்முறை என்னை அதிகம் அக்கறை கொள்ள வைத்த ஒன்று. குறிப்பாக அவர்கள் வெளியிட்ட மலர் 'வித்தியாலயம் 2000'. அதிலும் முக்கியமாக ஆயிஷா. ஆயிஷா அதன் பிறகு எனது நேசத்துக்கும் உரியவள் ஆகிவிட்டாள். என் நோக்கம் இன்று அவள் எல்லோர் நேசத்திற்கும் ஆகவேண்டும் என்பதே. விஞ்ஞான ஆய்வுநூல் ஒன்றிற்கு எழுதிய முன்னுரையாய் கணையாழியில் இருந்து அதனை மறு பிரசுரம் செய்திருக்கிறார்கள். மிகுந்த புத்தி சாதுரியம் உள்ள ஆயிஷா ஆசிரியை/யர்களின் தடியடியின் வலியைத் தடுக்க தன் உடம்பில் விறைப்பு மருந்தை ஏற்றி மறைந்து போனாள். கற்றலும் வாழ்வுமாய் உயிர்த்திருக்க முயன்றவள். காலனும் இல்லை. காலமும் இல்லை. கல்லூரிகள் அவளைக் கொன்றன. அது முன்னுரையா, கதையா இல்லை உண்மை நிகழ்வின் எழுத்துருவமா என்பதற்கப்பால் அது நிச்சயம் உண்மையாகவே இருக்கக்கூடும் என்பதற்கு எல்லாவிதமான ஆதாரங்களையும் எல்லா மூன்றாமுலக நாடுகளின் அரச கல்வி நிறுவனங்களிலும் திரட்ட முடியும். அதை, குழந்தைகளின் மனோவியல் தெரியாமல் மரத்துப் போன கற்பித்தல் முறையும் மனனம் செய்து ஒப்புவிக்கும் கேள்வி - பதில்களுமாய் பாடசாலைகள் இயங்கும் நிலையில், இந்த ஆயிஷா என்னை மட்டுமல்ல உங்களையும்தான் உலுப்பிவிட வல்லவள். அவள் என்னைப் பல மணி நேரங்களாக அழ வைத்தவள். என் சிந்தையில் இருந்து அகல மறுப்பவள்.

இவளை என்னுடன் இறுகப் பிணைத்தவர்கள் இந்த ப. மா. சங்கத்தினர்தான். அவர்களின் நோக்கம் எல்லா ஆசிரிய மனங்களிலும் அவளை இருத்துவதுதான். ஆயிஷா, அவள் இறந்து விடவில்லை. எவருமற்ற அநாதையானவள். எல்லோர் மனங்களிலும் குடிபுகுந்தாள். சமூகக்கொடுமை, எந்தவித சமூகப் பிரக்ஞையுமற்ற கல்வி நிலைய ஆசிரியர்களும் அதிபர்களும். பாடங்களை மட்டுமே பாடமாக்கிக் கொண்டு ஒப்புவிக்கும் ஆசிரியர்கள். மாணவர்களின் கேள்விகளுக்கு இடமளிக்காத தடியடி தண்டனை, ஆசிரியர்களின் குரு மனப்பான்மை எல்லாமுமாய்ச் சேர்ந்து எத்தனை மாணவர்களைச் சாகடித்து விட்டது. இனியும் இனியும், இந்த ஆயிஷாவின் வாழ்வைப் பலி கொண்ட பிறகுமா? 18 வருடங்களின் முன்பு நான் அறிந்த ஒரு கல்லூரியின் அதிபரின் தவறால் இரு மாணவர்கள் தற்கொலை செய்தார்கள். முதல் மாணவன் இறந்து போய் ஒரு மாதமாகியும் அந்த அதிபர் எந்தப் பிரக்ஞையும் அற்று முரட்டுத்தனமான பிடிவாதமாய் இருந்ததால் அதிபருடைய பாராமுகத்தைக் கணடிக்குமுகமாக மற்ற மாணவனும் தற்கொலை செய்து கொண்டான். பின்னரும் எந்த மாற்றமும் இல்லை.

குறிப்பாக இங்கு இயங்கி வரும் பல பழைய மாணவர் சங்கங்களில் எவையும் இது குறித்த விடயத்தில் பிரக்ஞை கொள்வது இல்லை. மாறாக தடியுடன் மாணவ மேய்ப்பு பாணியை ஆதரித்தும் செயற்படுகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு நிகழ்வை இங்கு சுட்டிக்காட்டவேண்டும். அது மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கம். அவர்கள் தாமுண்டு தம் கல்லூரியுண்டு என்று செயற்படாமல் கலை, இலக்கியம், கலாச்சார, சமூக சிந்தனை வளர்ச்சியில் அக்கறையோடு செயற்பட முயன்றவர்கள். புகலிட சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகளை கவனத்திற்கொண்டு சில கலந்துரையாடல்களையும் நிகழ்த்தினார்கள். ஓரிரு ஆளுமையுள்ள அங்கத்தினர்களின் நல் நோக்கத்தின் விளைவு அது. ஆயினும் மாணவர்கள் மேல் ஆசிரியை/யர்களின் அணுகுமுறை அவர்களின் குழந்தைகள் மனோவியல் அறிவு பற்றிய விடயத்தில் கோட்டைவிட்டு விட்டார்கள்.

இப் ப. மா. சங்கம் அக்கல்லூரியின் பழைய அதிபர் திரு. கனகசபாபதி அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலை 'ஓர் அதிபரின் கூரிய பார்வையில்' வெளியிட்டது. மாணவர்களின் கல்விக்கு பெற்றோர்கள், மற்றும் ஆசிரியை ஆசிரியர்கள் எப்படி உதவுவது, பிள்ளைகளை வளர்க்கும்போது பெற்றோர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பல விடயங்களையும் அறிவுரைகளையும் கூறும் பல கட்டுரைகளை உள்ளடக்கிய நூல். அதிபர் கனடா வாழ், கல்விச் சேவையிலும் பணிபுரிபவர். பல்வேறுபட்ட தமிழ் மாணவர்கள் பிரச்சனைகளிலும் பங்கேற்பவர். புகலிட வாழ் தமிழ் மாணவி மாணவர்களின் கல்வி மேம்பாட்டின் மற்றும் உள வளர்ச்சியின் நல் நோக்கம் கருதித்தான் அந்நூலை எழுதினார் என்பது ஐயத்திற்கிடமில்லாதது. பலருக்கும் உதவக்கூடிய ஆரோக்கியமான பல விடயங்களையும் உள்ளடக்கியிருந்த போதும் தமிழ்க் கலாச்சாரச் சிந்தனை மரபின்படி பிள்ளைகளை தடியால் தண்டிப்பது சரியானது என்று செயற்பட்டு வருகிறார். நூலிலும்

கூடத்தான்.

நூல் வெளியீட்டு நிகழ்வின்போது நிகழ்வில் கலந்துகொண்ட சிலர் (இவர்கள் மகாஜனா கல்லூரியின் ப.மா. இல்லை என்பது குறிப்பிடப்பட வேண்டியது) இது குறித்து கேள்வி எழுப்பினார்கள். இது சம்பந்தமாக பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நூலாசிரியர் 'அடியாத மாடு படியாது' எனும் அற்புத அறநெறியைக் கொண்டவரல்ல. அவர் மாற்றுக் கருத்துக்களுக்கு மனந் திறந்து மதிப்பளித்த போதும் ஆசாரி விட்டாலும் பூசாரி விடத் தயாரில்லை என்பது போல் பழைய்ய மாணவர்கள் விடத் தயாரில்லை. பொங்கி எழுந்துவிட்டார்கள். முடிவில் இது போன்ற கலந்துரையாடல்கள், நூல் வெளியீட்டு நிகழ்வுகள் யாவும் தொடருவது நிறுத்தப்பட்டது. இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஊக்கம் அளித்த மாணவர்கள் புறம் தள்ளப்பட்டார்கள். புதிய சங்கத் தலைமை உருவாகியது. ஆண்டு விழாவும் போச்சு. இங்குள்ள ப. மா. சங்கங்கள்கூட கற்பித்தல் முறையில் பிள்ளைகளின் மனோவியல் பற்றி எப்படிப் பிரக்ஞை கொள்கின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இந்த நிலையில் வேலணை ம.ம.வி. இன் பழைய மாணவர்கள் இந்த விடயத்தில் கவனம் கொள்வது பலராலும் மெச்சத்தக்க விடயம். இன்று இந்த பழைய மாணவர்கள் தங்கள் கல்லூரியின் அபிவிருத்தியில் காட்டும் அக்கறையில் இவற்றையும் பிரக்ஞைபூர்வமாக சேர்த்து செயற்படுவது மனதிற்கு மிகுந்த சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் அளிக்கிறது.

பெரும்பாலும் உயர் கல்வி நிறுவனங்கள் தம் கல்லூரியை மேலதிகமாக அபிவிருத்தி செய்ய இந்த பழைய மாணவர் சங்கங்களை ஊக்குவித்தார்கள். அதனால் மாணவர்கள் தம் கல்லூரி நட்பை காப்பாற்றிக் கொள்வதோடு கல்லூரியின் வளர்ச்சிக்கும் உதவியாக இருந்தார்கள். ஆயினும் இது சம உத்தியோக அந்தஸ்துள்ள மாணவர் மட்டத்திலும் மற்றும் கல்லூரியின் தரத்தையும் பிரபல்யங்களையும் வைத்து தமது பெருமை பேசிக்கொள்ளும் அந்தஸ்து மனநிலைகளையும் வளர்த்துக் கொண்டார்கள்.

இன்று ஈழத் தமிழர்களின் போர்ச்சூழல் நிறைந்த நிலையில் மக்கள் இடப் பெயர்வுகளோடு பாடசாலைகளும் இடம்பெயர்வதும் அவை மீள தம் இடத்தில் நிலை கொள்ளத் தவிப்பதுமான சூழலை 'வித்தியாலயம் 2000' ஆண்டு மலரில் வெளியான அதிபரின் உரை குறிப்பிடுகிறது. வேலணை என்ற கிராமத்தில் இருந்து இந்த ம. ம.வி. 1990 - 1991 காலப் பகுதிகளில் இரு முறைகள் இடம் பெயர்கிறது. முதலில் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பின்னர் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையிலுமாக அதியாகிறது. அகதியான இந்தக் கல்லூரி தனித்து தான் இயங்க வேண்டும் என்ற முனைப்போடு யாழ் அரசடி வீதியில் உள்ள இரு தனியார் வீடுகளையும் பொருள்களையும் எடுத்து அங்கு குடிபுகுகிறது. அத்தோடு பல தற்காலிகக் கொட்டில்களைப் போட்டு அதில் வகுப்புகளை நடத்தி விரிவாக்குகிறது. எந்த ஆய்வுகூட வசதிகளுமற்ற இந்தக் கல்லூரியின் முயற்சியால், 1995ம் ஆண்டில் கல்லூரி மாணவர்களில் 90%மானவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புகிறது. அதே ஆண்டில் யாழ் இடப்பெயர்வுடன் கல்லூரியும் சேர்ந்து சாவகச்சேரிக்கு ஓடுகிறது. யாழ் சுற்றுவட்டாரத்தின் பல பெரிய கல்லூரிகளுடன் சேர்ந்து கூட்டாக இயங்குகிறது. இறுதியாக 96இல் மீண்டும் வேலணைக்கு திரும்பி வந்தும் இரவல் இடங்களில் தங்குகிறது. அங்கும் பிறகு இன்னுமொரு இரவல். இறுதியாக 98இல்தான் தனது இடத்தை வந்தடைகிறது.

இப்படி கல்லூரி தன் வீட்டுக்கு வந்து வாழத் தலைப்படுவதற்கிடையிலான ஓட்டங்களும் அகதி முகாம்களுமாய் தன் வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் இந்த பழைய மாணவர்களின் பங்களிப்பு மூலாதாரமாக செயற்படுகிறது. தமது குடும்ப அங்கத்துவமாய் தமது கல்லூரியைக் கருதும் போக்கு ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் காணப்படாமல் போயிருக்குமாயின் வேலணை ம.ம.வி. என்ற ஒன்று இன்று இல்லாமற்கூடப் போயிருக்கலாம்.

மேலும் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தின் ப. மா. சங்க ஆண்டு மலரில் வெளியான நோக்கங்களையும் செயற்திட்டங்களையும் அறியத் தருவது இவ்விடத்தில் அவசியமானது.

## கல்லூரியில் செயற்படுத்தப்படுகின்ற இன்றைய செயற் திட்டங்கள்

■ <u>போஷாக்கு உணவுத் திட்டம்</u>

**நோக்கம்:**

**• மாணவர்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்தமையினால் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் நோய்களினால் அடிக்கடி பாதிக்கப்படுவதால் உடல் நலம் குன்றியமை.**

**• வருமானம் குறைந்த குடும்பங்களில் உள்ளமையினால், போஷாக்கு உள்ள உணவு இன்மை. இதனால் கல்வியில் விளையாட்டுக்களில் ஊக்கம் குறைந்தவர்களாக உருவாகுதல்.**

**செயற்திட்டம்:**

**போஷாக்கு உணவு குறைந்தது 3 மாதங்களாவது கொடுத்து கல்வியில் ஊக்கமளித்தல்.**

■ <u>ஆசிரியர்களுக்கு ஓரளவு வசதியுள்ள ஓய்வு அறையை ஏற்படுத்தல்</u>

**நோக்கம்:**

**• தற்போது ஆசிரியர்களில் பெரும்பாலானோர் தூர இடங்களில் இருந்து நாள்தோறும் வருபவர்களாக உள்ளமை.**

**இவர்கள் தமது ஓய்வான பாடவேளையில் தங்கி உணவருந்தி, நூல்கள் வாசிக்க, வேறு கருமங்கள் ஆற்றவேண்டியமை.**

**செயற்திட்டம்:**

**கைப்பிடிக் கதிரைகள், நீர் வடிகட்டி, நீர் சூடாக்கி, கண்ணாடி, மின்விசிறி ஆகியவை விநியோகித்தல்**

■ <u>கல்வியில் பின் தங்கிய மாணவர்களுக்கு முதல்மொழி, கணிதம் போன்ற பாடங்களில் மேலதிக வகுப்புகள் நடத்துதல் (6 மாதங்களுக்கு)</u>

**நோக்கம்:**

- **கல்லூரி மாணவர்களில் அதிகமானோர் தமிழ்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் மிகக் குறைந்த அடைவையே பெற்றுள்ளமை**
- **கல்வி அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்கல் (பிழையற எழுத, வாசிக்க அறிவு ஊட்டல்)**
- **கடந்த 7 வருடங்களாக இடம் பெயர்ந்து அலைந்தமையினால் முறையாக பாடசாலைக்கு செல்லாமை, முறையாக கற்காமை, இடம் பெயர்ந்த காலத்தில் பெற்றோரின் பொருளாதாரக் கஸ்டங்களினால் கல்வியில் கூடிய அக்கறை காட்டாமை.**

**செயற்திட்டம்:**

**குறைந்தது 2 ஆசிரியர்களையாவது நியமித்து இவர்களுக்கு பாடசாலை நேரத்திற்கு புறம்பாக மேலதிக வகுப்புகளை நடாத்துதல்**

பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, மாணவர்களின் முன்னேற்றத்தில் சமூகப் பிரக்ஞையுடன் பங்களிப்பதும் அவர்கள் எப்படி வழி நடத்தப்படவேண்டும், அதில் ஆசிரியர்களின் பங்கு எப்படி இருக்கவேண்டும் என்பதில் இவர்கள் காட்டும் அக்கறை பெரிதும் போற்றப்படவேண்டியது. இந்த பழைய மாணவர்கட்கு எல்லோரும் ஒரு கை கொடுக்க வேண்டும். மற்றைய பழைய மாணவர் சங்கங்களும் இதை ஒரு முன்னோடியாக எடுத்து செயற்படவேண்டும். ●

---

# தமிழ் - இனி 2000

## உலகத்தமிழ் இலக்கிய அரங்கு

உலக வரைபடத்தின் பெரும் பகுதியில் சிதறிக் கிடக்கும் தமிழ் வாழ்க்கை இந்த நூற்றாண்டின் எண்ணற்ற புதிய முகங்களை அடைந்துவிட்டது. நவீன யுகத்தின் பண்பாட்டு அரசியல் பொருளியல் வரலாற்றுக் கேள்விகளால் தமிழ்ச் சமூகம் பல அதிர்வுகளையும் உடைவுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது. புதியதொரு நூற்றாண்டு துவங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்து சென்ற நூற்றாண்டில் நம்முடைய பயணங்களை மதிப்பிட்டுக் கொள்வது புதிய திசைகளை அடைவதற்கான ஒரு ஆயத்தமாகும். அந்த நோக்கில் உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழும் தமிழ்ப் படைப்பாளிகளும் அறிஞர்களும் சந்திக்கும் மாபெரும் நிகழ்வு 'தமிழ்-இனி 2000'.

தேசியம், திராவிடம், மார்க்சியம், பெண்ணியம், தலித்தியம், பின் நவீனத்துவம் எனக் கோட்பாட்டு ரீதியாகவும் தமிழகம், ஈழம், சிங்கப்பூர், மலேசியா, புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் ஐரோப்பா, கனடா எனப் பிரதேச ரீதியாகவும் ஏராளமான அடுக்குகளும், ஊடுபாவுகளும் கொண்ட தமிழின் படைப்பியக்கத்தை விரிவான மதிப்பீடுகளுக்கு உள்ளாக்குவதற்காக உலகத் தமிழ் இலக்கிய அரங்காக தமிழ்-இனி 2000 வருகிற செப்டெம்பரில் மூன்று நாட்கள் சென்னையில் கூடுகிறது.

தமிழகம், ஈழம், சிங்கப்பூர், மலேசியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நண்பர்கள் இதற்கான விரிவான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். தமிழில் படைப்பியக்கச் செயல்பாட்டில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் இந்த முயற்சியில் பங்கேற்க வேண்டும் என்று விரும்புகிறோம். இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டியவை தொடர்பாக நண்பர்கள் தங்கள் எண்ணங்களை 'உயிர்நிழல்' முகவரிக்கு எழுத வேண்டுகிறோம்.

தமிழ்-இனி 2000 நமது நினைவுகளுக்கும் கனவுகளுக்கும் இடையே ஒரு சந்திப்புப் புள்ளி.

தொடர்புகளுக்கு:

**UYIRNIZHAL**
Exil, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, France.

## திட்ட முன்வரைவு

### - விவாதத் தளங்கள் -

**இலக்கிய வடிவங்கள்**
- நாவல்
- சிறுகதை
- கவிதை - மரபுக் கவிதை, புதுக்கவிதை
- நாடகமும் அரங்கியலும்

**இயக்கமும் இலக்கியமும்**
- தேசிய இலக்கியம்
- திராவிட இலக்கியம்
- மார்க்சிய இலக்கியம்
- பெண்ணிய இலக்கியம்
- தலித்திய இலக்கியம்

**விமர்சனம்**
- மார்க்சிய விமர்சனம்
- நவீனத்துவ விமர்சனம்
- தலித்திய விமர்சனம்
- புதிய விமர்சனப் போக்குகள்
- பெண்ணிய விமர்சனம்

**பார்வைகள்**
- நவீனத்துவ இலக்கியம்
- தமிழ் இலக்கியத்தில் புதிய போக்குகள்
- இலக்கியமும் இணையமும்

**பொது**
- வெகுசன இலக்கியம்
- மொழிபெயர்ப்புத் துறை
- குழந்தை இலக்கியம்
- புலம் பெயர்ந்த தமிழர் இலக்கியம்
- தமிழியல்:
  நேற்றும் இன்றும் நாளையும்

நண்பர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள், படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோரின் ஆலோசனைகளை வேண்டி இத்திட்ட முன் வரைவை முன்வைக்கிறோம்.

**தமிழ் - இனி 2000 அமைப்புக்குழு**

# ஐந்தும் ஆறும்



**மா. சி. கிறிஸ்ரியன்**

எஸ்தாக்கி. இவனொரு ஆபிரிக்கன். பிரெஞ்சுப் பெண்ணைக் கல்யாணம் கட்டி, உறவு அறுத்த பின்னர் எந்தப் பெண்களோடும் தொடர்பற்றிருந்தான். வீட்டில் மனைவியோடு வாழமுடியாத நிர்ப்பந்தத்தின் நீள்துயரோடு இரண்டு பைகளோடு வெளிவந்த நாளிலிருந்து 'பூஜிசி' றெயில்வே நிலையத்தை விட்டுவரும் வெளிவாசலை அண்டியும் - மிகப்பெரும் கடைகள் அடங்கிய 'சென்றல் கொம்மேஷல்' பின்புற வாசலிலிருந்து நாற்பது மீற்றர் இடைவெளிக்குள் சடைத்து நிற்கும் பைன் (PIN) மரத்தடியின் கீழ்தான் இவனது சீவியம். நாற்றமெடுக்கும் ஆடைகளும் நரை இடைவிட்டு வளர்ந்திருக்கும் ஆட்டுத்தாடியில் படிந்திருக்கும் வைன் மொச்சையும் தேகத்தில் படர்ந்து உருண்ட ஊத்தையின் கெட்ட நாற்றமும் முகம் கொடுக்க முடியாதிருக்கும். பொலிஸ்காரர்களும் அவனைப் பிடித்துப் பிடித்து விட்டு இனிமேல் உன்னோடு சோலி வேணாம் என்று ஒரேயடியாகக் கைகழுவி விட்டார்கள். இவன் செவிடுமில்லை; ஊமையுமில்லை; குருடுமில்லை; நொண்டியுமில்லை; ஆறடி உயரமுள்ள பெலப்புள்ள மனிதன். பத்து வருடங்களுக்கு மேலாக நானும் கவனித்து வருகிறேன். எப்படி ஒதுங்குகிறான்? எப்படி உறங்குகிறான்? எப்படித்தின்னுகிறான்? மழை நாட்களில் எங்கு கிடந்து வருகிறான்? எனக்கும் புரியாத புதிராகவே பட்டது. இதைவிட இவன் இறந்து போகலாம். இப்படியொரு அவலத்தை அனுபவிப்பதைக்காட்டிலும் மரணம் இதைவிட மேலானது என்றே எண்ணுவேன். சில வருடங்களின் பின்னர் இவனுக்கு ஒரு உற்ற நண்பன் கிடைத்திருந்தான். அவனையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு மது உள்ளே போனதும் சோகப் பாடல்களை முணுமுணுப்பான். யாரும் தன்னை நின்று பார்த்ததும் வெடுக்கெனப் பாய்ந்து விழாமல் மாறாக 'மவுத் ஓர்கனை' எடுத்து வைத்து வாசிப்பான். பக்கத்தில் கிடப்பது நம்மஊர் நாய்போல்தான். அவரது பெயர்தான் வலன்ரன். கறுப்புநிறம். மூஞ்சியில் மட்டும் வெள்ளையும் பழுப்பும் கலந்திருந்தது. கடவாய்வழி வழியும் வீணிஒழுக, ரசித்துக்கொண்டிருக்கும். பலகாலம் அவனது குரலிலும் இசையிலும் குரலிலும் உணவிலும் உயிர்வாழும் நன்றியுள்ள பிராணிதான். உணவு தானாக வாங்கினாலும், யாராவது கொண்டு வந்து கொடுத்தாலும் வலன்ரனுக்குப் போட்டுவிட்டுத்தான் மிகுதியைத் தான் தின்பான். இறைச்சியாக இருந்தால் நாயின் வாயில் வைத்து இழுத்த மிகுதியைத் தன் வாய்க்குள் திணிப்பான். உணவின் ருசி எப்படி என்ற

சிந்திப்பிருக்காது. பசி வயிறு நிறைந்தால் போதும் என்ற போக்கில் ஈக்கள் கொசுக்கள் தூசிகள் எல்லாத்தையும் சேர்த்து மென்று விழுங்கிவிடுவான். இந்த நேரத்தில் எஸ்தாக்கியைவிட நாய் வலன்ரன் உசத்தியாகத் தென்படும்.

உண்ட களைப்பிலும் வைன் மயக்கத்திலும் தூங்கிவிட்டான். வலன்ரன் தங்களுக்குப் பிரியமானவர்களைக் கண்டால் போதும்.... இரு கால்களையும் தொப்பென்று அடித்து அடித்து ஒருக்களித்துப் படுத்திருக்கும் எஸ்தாக்கியின் நெஞ்சினுள் மூஞ்சியைப் புதைக்கும். உச்சத்தொனியில் குரைக்கும். அவனும் பதறியபடி மெய் வியர்க்க, தத்தளித்து அங்குமிங்கும் முழி பிதுங்கப் பார்ப்பான். ஒரு வயது முதிர்ந்த வெள்ளைநிற மூதாட்டி சிரித்தபடி போய்க்கொண்டிருப்பாள். ஒரு பை அவனருகில் இருக்கும். அவளுக்கு நன்றி சொல்லும்படி வலன்ரன் குரைக்கும். அவனும் பிடரித் தலையைச் சொறிந்துகொண்டு 'நன்றி' என்று உரக்கக் கத்துவான். பதிலுக்கு வலன்ரனும் குரைத்துத் துள்ளிக்காட்டும்.

எஸ்தாக்கிக்கு ஏன் இந்த வாழ்வு வந்தது? அறியவேணும் என்ற ஆவல் கொண்டேன். அன்று ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள். கடந்திருநாள் பூசை நேரத்தில் 'ஈப்பினி' சென். டேமியன் தேவாலயத்தின் முன்னுள்ள பஸ் தரிப்பு இருப்பிடத்தில் குனிந்து துயரத்தில் ஆழ்ந்திருந்தான். பூசைக்கு வந்து கொண்டிருந்த மூதாட்டி சாமான்கள் நிரம்பிய பெரிய பையைத் தூக்கமுடியாது தடுமாற்றத்துடன் எஸ்தாக்கியின் கையில் ஒப்படைத்துவிட்டு ஆலயத்திற்குள் புகுந்தாள். இந்த மூதாட்டி வளர்க்கமுடியாது கொடுத்த நாய்தான் 'வலன்ரன்'. 'காதலர் தினம்'அன்று மூதாட்டிக்குப் பிறந்த மகனுக்கு வைத்த பெயர். சிலகாலங்களின் பின்னர் நோய்வாய்ப்பட்டு மகன் இறந்து போகவே இந்த நாய்க்கு அவனது பெயரை ஞாபகமாகச் சூட்டினாள்.

பூசை முடிந்தது.

இரண்டு பையன்கள் அவனோடு நின்று வெகுநேரமாக உரையாடினார்கள், அவனைப் பாரத்தால் அவன் பிள்ளைகளைப் பாரக்கவேண்டாம். அவ்வளவுக்கு முகவெட்டு ஒத்திருந்தது. இவர்கள் குழந்தையாக இருக்கும்போதுதான் மனைவியுடன் தகராறு ஏற்பட்டு இராட்சசி, பெண்மையின் பெருமை சிறிதும் இல்லாத பூதகியைவிட்டு வெளியேறினான். எஸ்தாக்கி பிள்ளைகளையும் மூதாட்டியையும் சந்திக்கவேதான் ஞாயிறு தவறாது தேவாலயத்தின்முன் காத்திருப்பான். பிள்ளைகளையும் மூதாட்டியையும் கண்டதும் அவனைவிட நாய்க்குத்தான் மகிழ்ச்சி அதிகம். நொடிக்கொரு தடவை துள்ளித் துள்ளிக் குதூகலிக்கும். தங்களுடைய பேச்சுக்கு வழமைக்கு மாறாக வலன்ரைனின் செயல் இருப்பதை உணர்ந்தவன் இழுத்து கக்கத்துக்குள் இடுக்கி அமர்த்திக் கொண்டான். வலன்ரனும் குரைத்துக்கொண்டே இருந்தது. வலன்ரனின் செயலால் எஸ்தாக்கியின் குறுகிய கண்கள் கண்ணீரைச் சொரிந்தது. மூதாட்டி கெஞ்சினாள். 'எஸ்தாக்கி இனியாவது குடும்பத்தோடு சேர்ந்திரன்', இப்பேச்சு முடியுமுன்னம் வலன்ரன் மூதாட்டிமேல் இருகால்களை உயர்த்திப் பாய்ந்து கைகொடுத்துவிட்டு... எங்கோ பார்த்து உச்சத்தொனியில் குரைத்தது. எல்லாரும் ஆச்சரியத்தோடு திரும்பிப் பாரத்தனர்.

எஸ்தாக்கியின் மாஜி மனைவி விறுவிறுவென்று கொழுத்த அவயங்கள் ஆட முகத்தைத் துப்பட்டியால் மறைத்தபடி போய்க்கொண்டிருந்தாள். வலன்ரனின் குரைப்பு உடல் பதற திரும்பித் திரும்பிக் குரைத்துப் பற்களைக் காட்டியது. வலன்ரனின் செயல் பலருக்குத் திகிலூட்டியது. குரைப்புத் தணியவில்லை. திரும்பத் திரும்பத் திணறடித்துப் பாய்ந்து கொண்டிருந்தது. அவன் வலன்ரனை அணைத்துக்கொண்டான். உண்மை எத்தனை துக்கத்தைக் கொடுத்தாலும் அவளுடன் சேர்ந்து வாழ்வதென்பது ஏற்ற பரிகாரமில்லை. யாருமறியாமலே தன்னுயிர் பிரிவதையே விரும்பி வருந்தி வாழும் வாழ்வை ஏற்றவன், 'நான் செத்தால் எனக்காக அழ யார் இருக்கிறார்கள்?' என்றவன் வலன்ரனை அணைத்தபடி முதுகுத்தண்டின் மேல் சொறிந்துகொண்டு பிள்ளைகளையும் மூதாட்டியையும் பார்த்தான். அவன் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் எண்ணங்களின் ஆழத்தில் மிகப்பெரும் கொந்தளிப்பு தெரிந்தது. பிள்ளைகளைத் திரும்பிப்பார்த்தபடி பைக்குள்ளிருந்த காகிதக்கட்டை மூத்தவன் விரல்களுக்குள் திணித்தான். அதற்குள் அதிக பணம் இருந்தது. 'அம்மா போறா. நீங்களும் போங்கள்' என்றான். மூதாட்டிக்கு அவனது செயல்கள் கனக்கக் கவலையைக் கொடுத்தது. பின்னர் அவளும் 'எஸ்தாக்கி நாளைக்கு உன்னை உன்ரை அரண்மனையில சந்திக்கிறன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். குளிரும் வழமைக்கு மாறாகக் குறைந்திருந்தது.

பாரிஸ் நகர் போயிருந்த நான் வீட்டுக்குத் திரும்பிவர நடுச்சாமம் ஆகிவிட்டது. கடைசி ரெயிலில் 'பூஜிசி' ரயில் நிலையத்தில் வந்திறங்கும்போது அதிர்ச்சியடைந்துவிட்டேன்.

எஸ்தாக்கியின்
அரண்மனையிலிருந்து
வலன்ரனின் குரைப்பு வானிடிந்து
உச்சிமீது விழுந்திடும்
போலிருந்தது. எஸ்தாக்கி
நித்திரையில் அசைவற்றுக்
கிடந்தான். நானும் அவன்
வைனை மண்டியிட்டு மயங்கிக்
கிடக்கிறான். இந்த நன்றியுள்ள
நாய் இப்படி அவலக்குரல் எடுத்து
ஊளையிடுது என்றபடி
புறுபுறுத்துக்கொண்டு நடந்தேன்.
பின்னால் வருபவர்களும்
இரக்கத்தோடு அவனது
அரண்மனையை எட்டிப்பார்க்கத்
துணியவில்லை.
பிரதானவீதியைக் கடந்து
வீட்டுவாசல் நெருங்கும்வரையும்
நாயின் குரைத்தல்
அடங்கவில்லை. வீட்டுக்குள்
உள்ளிட்டதும் அக்குரைத்தல்
கேட்கவில்லை. மனம் கலங்கிப்
போனேன்.

விடியக்காலை நேரம்
'எஸ்தாக்கியின் காலடியில்
வலன்ரன் செத்துக் கிடந்தான்.
மிகவிரைவாக இரண்டு
பிணங்களையும்
பொலிஸ்காரர்கள்
அப்புறப்படுத்திவிட்டனர்.
எத்தனை ஆயிரம் கண்கள்
கண்டகாட்சியின்
சின்னங்களுக்கு அவர்கள்
வாழ்ந்த மரத்தடியின் கீழ்
மலர்கள் போடப்பட்டுக்
கிடந்தது. ஆங்காங்கு
சிதறுண்டு கிடந்த
மலர்களிடையே அவர்களைப்
பற்றிய நல்ல வாசகங்கள்
அட்டையில் எழுதப்பட்டிருந்தன.
அவற்றையெல்லாம் மரத்தடியில்
குவித்த மூதாட்டியால்
கண்ணீரையும் துக்கத்தையும்
கட்டுப்படுத்த முடியவில்லை. நா
தளதளக்கக் குழறினாள்.

'எஸ்தாக்கி உன்னோடு
வலர்ந்த வலன்ரன் உன்னோடை
உடன்கட்டை ஏறிவிட்டான்'
மூதாட்டியின் உரத்ததொனி
சுற்றி நின்றவர்கள் இமை
சொருக, முழி பிதுங்க
அகம்புலம்ப வைத்தது. தினமும்
வலன்ரன் என்று கூப்பிட்ட பெயர்
மறைந்துவிட்ட துக்கம் தாளாது
புலம்பியபடி நின்றாள் மூதாட்டி. ■

# மிதந்தெழும் துயர்க்கீதம்

ஆரையம்பதி த. மலர்ச்செல்வன்



மிதந்து மிதந்துதான் போகுது
என் துயர்க்கீதம்
கல்லடிக் கடற்கரைச்
சவுக்குத் தோப்பைப் பிய்த்து
என்குரல் எடுத்துப் போகுது காற்று
யார் கேட்பார்?

அம்மா அப்பா
யாரும் காணாத
ஒடுங்கிக்குறுகிய சுவரினுள்
விரட்டி விரட்டி
புரட்டி புரட்டி
உடல் பீச்சுகிறது சிவப்பாய்

குரல் அலப்பரித்து
ஓலமிட்டு
கம்மி குரலெடுத்துப் போகுது
யாரும் கேட்பாரில்லையே?

'கப்டன்' கூட எழவில்லை
'தண்ணி' போட்ட மயக்கத்தில் அவளுடன்
சதைக்குள் புதைத்து
கட்டித் தழுவி உச்சி மோந்து
தனியின்பம் காண்பான்
நான் மட்டும்....

காற்று மட்டும் எழுந்து
தலையைத் தடவி விட்டுப் போனது

மீண்டும் மீண்டும்
தாறுமாறாய் விழுகிறது பூசை
உடல் விறைத்தும்
நோவொன்றும் எழவில்லை
சக்குச் சக்காய்
செத்த பாம்பின்மீது நடாத்தும் அதிதீரமாய்
பூசை விழுகிறது மிகைத் தீவிரமாய்

மயிர்கள் நெட்டென்று நின்று
மூச்சிறைக்கும் மாடாய்
மிக ஆவேசமாக வெளியேறுது
சுவாசமெனில்
நினைவு மங்கி மங்கி
இருள் கூடுகிறது கண்ணில்

இன்னும் கொஞ்ச நேரத்தில்
உப்பு மணல் தரையில்
நேற்று 'பாலுக்கு' நடந்ததைப்போல்
கரும்புகை கிளம்பும்
'நாலஞ்சி' பேய்கள் குளிர் காயும்

நாளைக்கு காகம் வட்டமிட்டுக்
கண்ணீர் சொரியும்
நாய்கள் கடிபட்டு நக்குவாரப்படும்
நீ எப்படியோ? ●

# புதிய பாதை புதிய அணுகுமுறை

## சிவலிங்கம்

**3**

### புதிய பாதை

**எனவே மூன்றாவது பாதை சமத்துவத்தை வலியுறுத்த வேண்டும். சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களால் பாதிக்கப்படப்போகும் மக்களுக்கான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். சுய நிர்ணயத்தின் அடிப்படையிலான சுதந்திரம், கடமையில்லையேல் உரிமையில்லை, ஜனநாயகம் இல்லாமல் அதிகாரம் இல்லை, சர்வதேச பன்மைத்துவம் கொண்ட சமூகப்பார்வை என்பன புதிய விழுமியங்களாதல் வேண்டும்.**

நாட்டின் பொருளாதார மாற்றங்கள் மட்டுமல்ல, போர் நிலைமைகளும் குடும்பவாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. குடும்பம் என்பது முன்னெப்போதையும்விட அதிக அழுத்தங்களை அனுபவிக்கிறது. இதனால் குடும்பம் என்ற சமூகக்கட்டுமானம் ஆட்டம் கண்டு வருகிறது. குடும்பம் என்பதை மதித்துக் கட்டிக்காத்து வந்த எமது முதியோர் இம்மாற்றங்களைக் கண்டு விசனிக்கின்றனர். இச்சமூக அடிப்படைக் கட்டுமானம் பலப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறு பலப்படுத்துவது?

அரசு யந்திரத்தின் முழு நடவடிக்கைகளும் குடும்பத்தை மையமாகக் கொண்டதாக அமைதல் வேண்டும். சமூகத்தின் மத்தியில் வளர்ந்து வரும் சமூக அபிவிருத்தி ஸ்தாபனங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். கிராமங்கள், நகரங்களில் அமைந்து வரும் இவ் ஸ்தாபனங்கள் மக்களின் நேரடிப் பிரதிநிதித்துவத்தினைக் கொண்டிருப்பதோடு அவர்களின் தேவைகளையும் பிரதிபலிப்பனவாகும். எனவே, இவ் ஸ்தாபனங்கள் அதிக அதிகாரம் கொண்டனவாக இருத்தல் அவசியம். சுருக்கமாகக் கூறின் மக்களின் அதிகாரம் அவர்களிடமே போய்ச் சேரவேண்டும். இதன்மூலமே அரசுக்கும், குடிமக்களுக்குமிடையே பிணைப்பை ஏற்படுத்த முடியும். இதுவே ஜனநாயகத்தின் பிரதான அம்சமாகும்.

### ஜனநாயக விரிவாக்கம்

இலங்கையில் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாயினும் இவை ஓர் பரீட்சார்த்த முயற்சியாகவும், அரசியற்கட்சிகளிடையே இது குறித்து தெளிவான உடன்பாடு காணப்படாமையாலும் தோல்வியாக முடிவடைந்தன. 1970-77 காலப்பகுதியில் அமைந்திருந்த ஐக்கிய முன்னணி அரசு மக்கள் சபை, விவசாய சபை, கடற்தொழில் அபிவிருத்திச் சங்கம், கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டு ஓரளவு அதிகாரங்களும் வழங்கப்பட்டன. ஜனநாயக விதிமுறைகள், அணுகுமுறைகள் அதிகளவு வளர்ச்சியடையாத காரணத்தால் அரசியற்கட்சிகளின் பலப்பரீட்சைக் களங்களாக அவை மாறின. இருப்பினும் இவை தொடர்ச்சியாக செயற்பட்டிருப்பின் மக்கள் தமக்கு ஏற்படும் அனுபவங்களின்மூலம் அதிகளவு வளர்ச்சியடைந்த ஸ்தாபனங்களாக வளர்த்திருப்பர்.

மக்களின் கரங்களிலே அதிகாரத்தைக் கையளிப்பது என்பது மத்திய அரசாங்கத்தின் பலத்தினைக் குறைப்பதாகும் எனவும், இனப்பிரச்சனைகளாலும் அரசியற்கட்சிகளிடையே ஏற்பட்டு வரும் கொள்கை முரண்பாடுகளாலும், அரசின் ஆயுள் அடிக்கடி அச்சுறுத்தல்களுக்குள்ளாகி வருவதால் மத்திய அரசு பலமானதாக அமைதல் வேண்டும் என்ற அரசியற்கட்சிகளின் நோக்குகளால் அதிகாரப்பரவலாக்கம் என்பது இலங்கையில் தளைக்க முடியாமல் போனது துர்ப்பாக்கியமே. ஜனநாயகம் தொடர்பாக அதிகளவு அலட்டிக்கொள்ளும் அரசியற்கட்சிகளும், அரசுகளும் இவ்வாறான நிலைப்பாட்டினைக் கொள்வது மக்களுக்குத் துரோகமிழைப்பதாகும். அத்தகைய இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் மக்கள் தமது ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுவது, மாற்றம் என்பது தவிர்க்கமுடியாதது, மக்கள் தொடர்ந்து முன்னேறுவார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

எனவே ஜனநாயகப்படுத்தல் என்பது பல்வேறு விவாதங்களுக்குட்படுத்தப்பட்டபோதும் மாற்றங்கள் அவசியமானவை. விவாதிக்கப்படவேண்டியவை. நவ லிபரல்வாதிகள் அரசின் செயற்பாட்டை ஒடுக்கி சந்தைகளுக்கான சுதந்திரத்தை வழங்கும்படி கோரும்போது அதற்குப் பதிலாக சுறுசுறுப்பான அரசே அவசியம் என சமூக ஜனநாயகவாதிகள் கோருகின்றனர். இவ்விவாதங்களுக்கூடாகப் பதிலைக் காண்பது அவசியமாகும்.

### அரசு பற்றிய விவாதம்

இன்று அரசுபற்றி இரண்டு கருத்துகள் பிரதானமாக வைக்கப்படுகின்றன. தற்போதைய அரசுகள் அதிகளவு விரிவடைந்து பல்வேறு வகைப்பட்டதாகவும், பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் கொண்டதாகவும் அமையவேண்டிய அவசியமும் இருப்பதால் அரசானது அதிகளவு பளுவைத் தாங்கிக் கொள்கிறது. இச் சுமையைச் சாதாரண அரசியல்வாதிகளால்

சுமக்கமுடியாது. எனவே அரசு தனது அலுவல்களில் பெரும்பகுதியை நிபுணர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்கின்றனர் ஒரு சாரார்.

அரசானது படிப்படியாக பல்தேசிய நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குள் அல்லது அதன் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அதிகளவு செயற்படுவதால் அது மக்களின் தேவைகளை, அல்லது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடுகிறது. இதனால் மக்களின் ஆதரவை படிப்படியாக இழக்கிறது. அதனால் மக்கள் ஆதரவுடனான சட்ட அந்தஸ்தினை இழக்கிறது. எனவே அதன் தீர்மானங்களை மக்கள் நிறைவேற்ற மறுக்கிறார்கள். இதனால் அரசு என்னும் வலுவை அது இழந்துவிட்டது என மறுசாரார் வாதிடுகின்றனர்.

## மத்திய அரசு

மேற்குறித்த வாதங்கள் அரசானது ஏன் ஜனநாயகப்படுத்தப்படவேண்டும் என்பதற்கான நியாயங்களை முன் வைக்கிறது. மாறிவரும் சர்வதேச நிலைமைகள் இதற்கான வாய்ப்புகளைத் துரிதப்படுத்துகிறது. மத்திய அரசை வலுவுள்ளதாக்குவ தற்கு இன்றியமையாத தேவையாகிறது. எனவே இரட்டை ஜனநாயகத்திற்கான இயக்கம் தேவைப்ப டுகிறது. அதாவது அரசானது மக்களை அந்நியப்படுவதிலிருந்து தடுப்பதற்கும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் அரசாக மாற்றுவதற்கும் அதிகாரப் பரவலாக்கம் தேவைப்படுகிறது.

அரசின் அதிகரித்த நடவடிக்கைகள் காரணமாகவும், பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைள் சர்வதேச ஒப்பந்தங்கள் மூலமாக நிறைவேற்றப் படுவதாலும் ஊழலுக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. பல கோடி ரூபாய்கள் ஒரு சில மனிதரின் கரங்களில் சில நிமிடங்களில் சேர்ந்து விடுகின்றன. சர்வதேச வங்கிகளில் இவை வைப்புச் செய்யப்படுகின்றன. இதனால் பல பிரமுகர்கள் ஊழல் புரிவதற்காகவே அரசியலைத் தேர்ந்தெடுக்கின்றனர். அரசியல்வாதிகளின் வாழ்க்கை ஒரு சில வருடங்களில் கொடிகட்டிப் பறக்கிறது. நாட்டு நிலைமை அவருக்கு சாதகமில்லாதபோது வெளிநாட்டில் குடியேறுவதற்கான ஆயத்தங்களும் சம காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே அரசு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் ஊழல் பாதுகாப்பு உள்ளனவாகவும், மிகவும் திறந்த விவகாரங்களாகவும் இருத்தல் வேண்டும். தற்போதைய பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்கள் பின் கதவு நடவடிக்கைகளில் அதிகம் தங்கியிருப்பதால் ஊழல் பாதுகாப்பு தவிர்க்கமுடியாத தேவையாகியுள்ளது.

இப் பொருளாதார நடவடிக்கைகள் யாவற்றிலும் அரசு சம்பந்தப்படுவதாலும், மக்கள் இப்பரிவர்த்தனை தொடர்பான செய்திகளுக்கு அரசையே அதிகளவு சார்ந்துள்ளனர். எனவே அரசின் நடவடிக்கைகள் அதிகளவு திறந்தனவாக அமைதல் அவசிய தேவையாகிறது.

## சிவில் சேவை

பல்தேசிய நிறுவனங்களும், வியாபார நிறுவனங்களும் மாற்றங்களுக்கேற்றவாறு தம்மை மாற்றியமைத்துக் கொள்கின்றன. ஆனால் அரசுமட்டும் மிகவும் தாமதமாகவே மாற்றத்திற்குள்ளாகிறது. ஏன்? அரசின் பிரதான பகுதியாகிய சிவில்சேவையின் நத்தை வேகமே இதன் காரணமாகும். சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவது, அல்லது ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளை மாற்றியமைப்பது இச் சிவில்சேவையின் சுயநலத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக உணர்கிறது. இதனால் மாற்றத்திற்கான முயற்சிகளுக்கு அதிக அளவு தடங்கல்களை விளைவிக்க முயற்சிக்கிறது.

இலங்கையில் திறந்த பொருளாதார நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட அரசு மாற்றங்களும், அரசியற்கொள்கை மாற்றங்களும் செயல்வடிவம் பெறுவதற்கு மிகவும் முட்டுக்கட்டையாக இருப்பதும், அதிக ஊழல் மையங்களாக இருப்பதும் இச் சிவில்சேவையென்பது பொதுவாக உணரப்பட்டுள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கைகளின் அறிமுகத்தின் பின்னர் இச் சிவில்சேவை சர்வதேச அளவிலும் இணைக்கப்பட்டுள்ள நிலைமைகள் இதன் சக்தியை அதிகரித்துள்ளது கவனத்திற்குரியது. புதிய தேவைகளுக்கேற்றவாறு இச் சேவை மறுசீரமைக்கப்படவேண்டும். தனியார் ஸ்தாபனங்கள் கடைப்பிடிக்கும் சில நெறிமுறைகள் இச்சேவையில் அறிமுகப்படுத்தப்படவேண்டும். உதாரணமாக இலக்குகளை எட்டுவதற்கான காலக்கெடு, இறுக்கமான எண் பார்வை, தேவைப்படும் விதத்தில் வளைந்து கொடுத்து தீர்மானங்களை மேற்கொள்ளல், தொழிலாளர்களின் அதிகரித்த ஈடுபாடு போன்றன அறிமுகமாதல் வேண்டும்.

## அதிகார பரவலாக்கம் பிரச்சனைகள்

அதிகரித்த சர்வதேச மயப்படுத்தல் காரணமாக விரிவடைந்த ஜனநாயக அணுகுமுறை தேவை என இதுவரை பார்த்தோம். இதனை எவ்வாறு நிறைவேற்றுவது?

மக்களின் கரங்களில் உள்ள இறைமை அதிகாரம் வாக்களித்தல்மூலம் பிரயோகிக்கப்படுகிறது. அவ் வாக்களிப்பு எந்தவித குந்தகமுமில்லாமல் சுதந்திரமாக நிறைவேற உறுதி செய்தல் வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படின் ஜனநாயகம் என்பது வெறும் ஏட்டளவாகவே அமையும். மக்களைப் பாதிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றும் ஸ்தாபனங்களில் மக்களின் பிரதிநிதித்துவம் அவசிமானதாகும். நீதிச் சேவையில் யூரி முறை பல்வேறு மட்டங்களிலும் அறிமுகமாதல் வேண்டும். மக்களின் பங்குபற்றல் உள்ள ஸ்தாபனங்கள் அடிமட்டங்களில் இன்று உறுதியாக இருந்திருக்குமானால் இனப்பிரச்சனை இவ்வளவு பூதாகர

மாக வெடித்திருக்க முடியாது.

ஜனநாயகம் என்பது ஒருவழிப் பாதையல்ல. அது இருவழிப் பாதையாதல் வேண்டும். மக்கள் அடிமட்டத்திலிருந்து உயர்மட்டத்திற்கு வருவதற்குரிய ஜனநாயக அமைப்பு முறை சீராக அமையும் போது, மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் தீர்மானங்கள் சிக்கல்கள் இல்லாமல் நிறைவேற வாய்ப்பேற்படுகிறது.

அதிகாரப் பரவலாக்கத்தின் அவசியம்பற்றி இதுவரை பார்த்தோம். அதிகார பரவலாக்கம் என்பது புதிய பிரச்சனைகளைத் தோற்றுவிக்காதா? ஜனநாயகம் பலவீனம் அடையாதா? என்ற கேள்விகள் எழுகின்றன. இலங்கையைப் பொறுத்தமட்டில் இன்று கொழுந்து விட்டெரியும் தேசிய இனப் பிரச்சனை அதிகார பரவலாக்கம் தொடர்பானது. மத்திய அரசு நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட அம்சங்களைக் கொண்டிருக்குமாயின் அதிகார பரவலாக்கம் சாத்தியமானதாக அமையும். இருப்பினும் அதிகார பரவலாக்கம் நாட்டுப் பிரிவினையைத் துாண்டும் என அரசியல் வாதிகள் நம்புகின்றனர். இவ் அச்சம் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் நிச்சயமாக உண்டு. மத்திய அரசு பலமானதாக அமையவேண்டும் என நம்புபவர்கள் இதையே வாதமாகக் கொள்கின்றனர். இவர்கள் எக்காரணம் கொண்டும் இந் நிலைப்பாட்டிலிருந்தும் மாறமாட்டார்கள். அதிகார பரவலாக்கம் தொடர்பாக எந்தவிதமான வேலைத்திட்டமும் இவர்கள் கொண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் இவர்களின் இலக்கு பலமான மத்திய அரசு என்பதாகும்.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் அதிகாரப்பரவலாக்கத்தை எவ்வாறு முன்னோக்கி நகர்த்துவது? நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக இவர்கள் கொண்டுள்ள கருத்துகளை விவாதத்திற்குட்படுத்துவதன் மூலமே இவர்களை இனம் கண்டுகொள்ள முடியும். தோற்கடிக்க முடியும்.

## தேசியம்

அடுத்ததாக அதிகாரப்பரவலாக்கம் என்பது உரிமை என வரையறுத்துக் கொண்டால் கடமை என்பதுஎன்ன? என்ற வினா எழுகிறது. தேசிய ஐக்கியம் என்பதே கடமை என்றாகிறது. இத்தேசிய ஐக்கியம் என்பது மத்திய அரசின் ஜனநாயகத்தன்மையில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது. மத்திய அரசு ஜனநாயகப்படுத்தப்படாவிடின் தேசிய ஐக்கியம் என்பது அர்த்தமற்றதாகிவிடும். எனவே அதிகாரப்பரவலாக்கம் நாட்டுப்பிரிவினையைத் துாண்டாமல் இருப்பதற்கு மத்திய அரசு ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும்.

அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக இன்னொரு வாதம் முன்வைக்கப்படுகிறது. அதாவது ஏற்கனவே உள்ள சிவில்சேவை தேசிய அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாகவும், அதிகளவு செலவினத்தையும் ஏற்படுத்தும் வேளையில் இவ்வதிகார பரவலாக்கம் மேலும் ஒரு அடுக்கு சிவில்சேவையைத் தோற்றுவித்து மேலும் சிக்கல்களையும், செலவினத்தையும் தோற்றுவிக்கும் என வாதிக்கின்றனர். இவர்கள் இவ்வாறு அச்சம் தெரிவிப்பது ஜனநாயக மாறுதல்கள் தொடர்பாக அவர்களுக்குள்ள சந்தேகம் சார்பானதாகும். மக்களின் உறுதியான, சுதந்திரமான பங்களிப்பு இருக்குமாயின் இவ்வாறான சந்தேகங்கள் அர்த்தமற்றவையாகின்றன. இவ்வாறான பங்களிப்பு நிர்வாகத்தில் மட்டுமல்ல, குற்றத்தடுப்பு, சமூகப் பாதுகாப்பு என்பவற்றின் செயற்பாட்டையும் இலகுவாக்குகிறது.

## கலப்பு பொருளாதாரம், திறந்த பொருளாதாரம், பிரச்சனைகள்

இனிப் பொருளாதார அம்சங்களை சற்று ஆழமாகப் பார்ப்போம். நாட்டின் பிரதான மூலவளங்கள், உற்பத்தித்துறைகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் பின்னணியை ஏற்கனவே பார்த்தோம். அதேபோன்று இப் பிரதான மூலவளங்களும், உற்பத்தித்துறைகளும் தனியார்மயப்படுத்தப்பட்டு அதிகபட்ச உற்பத்திக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்ற நவ லிபரல்வாதிகளின் வாதத்தினையும் பார்த்தோம். இவ்விரு முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டதனால் சமூகத்தில் ஏற்பட்ட விளைவுகளையும் பொதுவாகப் பார்த்தோம்.

தேசியமயமாக்கல் போட்டி நிலைமைகளைத் தோற்றுவிக்காமையால் உற்பத்தித்தரம் குறைந்ததோடு அதி சிறந்த வினைத்திறனையும் வழங்கவில்லை. உற்பத்தித்துறைகள் போதிய லாபத்துடன் இயங்கவில்லை. வீண்விரயங்கள் அதிகரித்தன. அதே போன்று தனியார் கரங்களில் பிரதான உற்பத்தித்துறைகள் கையளிக்கப்பட்டதனால் சமூக உணர்வு மழுங்கடிக்கப்பட்டு, இலாப நோக்கே பிரதானபோக்காகியது. இதனால் சமூகப்பிரச்சனைகள் பூதாகரமாக வளர்ந்து அரசின் சுமுகமான செயற்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைந்தது.

இந் நிலையில் கலப்புப் பொருளாதாரம் என்பதே அர்த்தமுள்ள நடைமுறையாகிறது. கலப்புப் பொருளாதாரம் குறித்து ஏற்கனவே சில கருத்துகள் இருப்பினும் நாம் புதிய அர்த்தத்தினை அளிக்க வேண்டியுள்ளது. அதாவது கலப்புப் பொருளாதாரம் என்பது அரசு, தனியார் எதிர் எதிரானது எனக் கருதாது, இரு துறைகளின் அபிவிருத்தியிலும் அரசின் சுறுசுறுப்பான பங்கு தேவையாகும். போட்டி உற்பத்தி, விநியோக நிலமைகளை அரசு ஏற்படுத்தும் அதே வேளையில் இப்போட்டி நிலமைகள் காரணமாக ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு முன்வர வேண்டும்.

தற்போதுள்ள நிலமைகளைச் சற்றுப் பார்ப்போம். கட்டுப்பாடற்ற சந்தை நடவடிக்கைகள் சுதந்திரமாக இயங்குவதால் இந்நடவடிக்கைகளில் பிரஜைகள் சுதந்திரமாகப் பங்குபற்ற வாய்ப்பேற்பகிறதென்றும், தனது அதிகளவு உழைப்பினை வழங்குவதன்மூலம் அதிகளவு பயனைப் பெறுவதற்கு அதிக

ளவு வாய்ப்புள்ளதென்றும், இதனால் தனிமனிதனின் முழு ஆற்றலையும் திறந்து விடுவதற்கு வழி சமைக்கப்பட்டுள்ளதாகவும் திறந்த பொருளாதாரம் தொடர்பாக நவ லிபரல்கள் வாதிடுகின்றனர். பிரஜைகளின் சுதந்திரமான பங்குபற்றலை உறுதி செய்ய கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

நடைமுறையில் நிலவுவதென்ன? கட்டுப்பாடற்ற சந்தை நடவடிக்கைகளை அதிகளவு மூலதனம் கொண்ட சக்திகளே இயக்குகின்றன அல்லது கட்டுப்படுத்துகின்றன. சந்தைக்கான போட்டி விதிகளை அவர்களே நிர்ணயிக்கின்றனர். சிறிதளவு மூலதனம் கொண்டோர் அதிகளவு சக்தி இல்லாமையாலும், இப்போட்டி விதிகளின் அடிப்படையில் செயற்படுவதாலும் பெரும் மூலதனங்களோடு போட்டிபோட முடியாதுள்ளனர். பெரும் மூலதனங்களையுடையோர் தமக்கிடையே இரகசிய ஏற்பாடுகளை வைத்திருப்பதால் சந்தை விதிகள் நியாயமானவைகளாகத் தோற்றமளிப்பினும் முடிவு பெரும்மூலதனச் சொந்தக்காரர்களுக்குச் சார்பாகவே இருக்கிறது. இச் சமநிலையற்ற போட்டியில் தோல்வியடைவோர் போட்டி விதிகளை விட, தமது செயற்பாடுகளின் குறைபாடுகளே காரணம் எனக் கருதுகின்றனர் அல்லது கருதும்வகையில் கருமங்கள் செயற்படுகின்றன. இதனால் கட்டுப்பாடற்ற போட்டிப் பொருளாதாரம் சமூகத்தில் ஓர் பின்தங்கிய வகுப்பாரை தொடர்ச்சியாக உற்பத்தி செய்கிறது. இவ்வாறான நிலமைகளுக்குப் பரிகாரம் வழங்க அரசுகள் முயற்சிப்பதில்லை. ஏனெனில் போட்டியில் வெற்றியை எதிர்பார்ப்பவர் தோல்வியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே நியதி என வற்புறுத்தப்படுவதனாலாகும்.

ஓர் பொறுப்புள்ள அரசு தனக்குள்ள கடமையை இவ்வாறு தட்டிக்கழிக்க முடியாது. போட்டிக்கான விதிமுறைகள் நியாயமான விதத்தில் அமையவும், இப்போட்டியினால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு தகுந்த பரிகாரம் தேடும்வகையில் ஏற்பாடுகள் செய்யப்படவும் வேண்டும். அத்துடன் தோல்விக்கான நிலைமைகள் ஏற்படாதவாறு தவிர்க்கும் வகையில் மக்களின் அறிவுநிலை, சந்தை நடவடிக் கைகள் தொடர்பான கல்வி என்பன மிக அடிப்படையிலிருந்தே போதிக்கப்பட வேண்டும். சந்தை நடவடிக்கைகளில் பங்கு பெறும் ஒருவர் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிவினைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

## சமத்துவம் சம சந்தர்ப்பம்

கலப்புப் பொருளாதாரம் என்பது அரசு, தனியார் எனக் கணிக்கக்கூடாது. இவ் இரண்டு செயற்பாடுகளும் பிரஜைகளின் நலன்களை முதன்மையாகக் கொண்டே இயங்குகின்றன என்பதே இதன் பிரதான அம்சமாகும். சந்தைப்போட்டிகளைக் காரணம் காட்டி தொழிலாளர்களைக் குறைப்பதும், குறைந்த தொழிலாளர்களைக் கொண்டு அதிகளவு வேலையை எதிர்பார்க்கும் நடவடிக்கைகளும். அதிகளவு இலாபத்தை எதிர்பார்த்து உற்பத்தி அலுவல்களை யந்திரமயப்படுத்தவதும் சமூகநலனை மையமாகக் கொண்டனவாக இல்லை. பொருளாதார அபிவிருத்தி என்பது சமூக ஏற்றத் தாழ்வுகளை உற்பத்தி செய்யும் நடவடிக்கையாக அமையாது சமத்துவத்தை ஏற்படுத்தும் செயற்பாடாக வேண்டும். சமத்துவம் என்பது சமூகமுன்னேற்றத்திற்கான உந்துசக்தியே தவிர தடுப்பாக அமைய முடியாது.

சமத்துவம் என்பது சமசந்தர்ப்பத்தை வழங்குதல் என நவ லிபரல்கள் கூறுகின்றனர். இவர்கள் கூறும் சமசந்தர்ப்பம் எவ்வாறு பின்தங்கிய வகுப்பாரை தோற்றுவிக்கிறது என மேலே பார்த்தோம். போட்டியில் வெற்றி பெறுபவர் எவ்வாறு சமூகத்தின் இதர சேவைகளையும் இலகுவில் பெற்றுக் கொள்கிறார் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். குறிப்பாக வியாபார ஸ்தாபனங்களின் அதிஉயர்நிலையில் உள்ளோர் பெறும் வருமானங்களை சாதாரண தொழிலாளியின் வருமானத்துடன் ஒப்பிடும்போது பல மடங்கு வித்தியாசமாக இருப்பது நீதியான சமூகத்தை உருவாக்க உதவாது. இவற்றினை சமசந்தர்ப்பம் என வர்ணிக்கவும் முடியாது.

எனவே தொழில் முன்னேற்றம் என்பது படிமுறை கொண்டதாகவும், பின்தங்கிய வகுப்பாரும் அவ் ஏணியில் ஏறலாம் என்ற நம்பிக்கையை உருவாக்கக்கூடியதாகவும், தகுதிக்கேற்ற முன்னேற்றம் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அமையவேண்டும். சமத்துவம் என்பது தோற்றத்தில் சகல வகுப்பாரையும் இணைத்துக்கொள்ளும் போக்கினைக் கொண்டிருக்கவேண்டுமே தவிர தவிர்த்துக் கொள்ளும் செயற்பாடாக இருத்தல் கூடாது. சமூக முன்னேற்றமே மையக்கோட்பாடாக வேண்டும்.

நவ லிபரல்வாதிகள் கூறும் கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரக் கோட்பாடுகள் சமூகத்தில் நலிந்த பகுதியினரைத் தோற்றுவிக்கும் உட்சக்தியைக் கொண்டிருப்பதை இதுவரை பார்த்தோம். உதாரணமாக தனியார் கல்வி ஸ்தாபனங்கள், வைத்தியசாலைகள் என்பனவும் இவ்வாறான உட்சக்தியுடன் இயங்குவதால் அதிகாரபலம் காலப் போக்கில் சிறு குழுவிடம் சிக்கி விடுகிறது. இந்நிலைமை ஜனநாயகத்தின் அத்திவாரத்திற்கே வேட்டு வைப்பதற்கொப்பாகும்.

1980ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமெரிக்காவில் கிடைக்கப்பெற்ற உற்பத்தி நயம் தேசத்தின் 1 சதவீத மக்களாலேயே அனுபவிக்கப்பட்டதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் நிலைமை இதுவாயின் இலங்கை போன்ற நாடுகளில் இதைவிட நிலைமை மோசமாகும்.

எனவே தனியார்மயப்படுத்தல் கொள்கை தொடர்பாக புதிய கொள்கைகள் வகுக்கப்படல் வேண்டும். நாட்டின் செல்வ வளர்ச்சி, நாடு தழுவியரீதியில் பிரதிபலிக்க வேண்டும். பொருளாதாரம் மட்டுமல்ல சிவில் சமூகமே கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும். அதாவது பின்தங்கிய வகுப்பாரை தொடர்ந்து உற்பத்தி செய்வதும், பிரதான நீரோட்

டத்திலிருந்து தவிர்ப்பதற்கான நிலமைகளை உருவாக்குவதும் சமூகத்தின்மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகளேயாகும். சகலருக்கும் பொதுவான சிறப்பான கல்விச் சேவை, சுகாதார சேவை என்பன போன்ற நடவடிக்கைளாலேயே இக் கட்டுப்பாடுகளை உடைக்க முடியும்.

## தேசியவாதம் பிரிவினைவாதம்

அரசும் அரசு சார்ந்த நடவடிக்கைகளையும் இதுவரை பார்த்தோம். இனி அரசு அமைந்துள்ள தேசம் பற்றிய விவாதத்திற்கு வருவோம். இவ் விவாதத்தின் உசாவுமையமாக மீண்டும் இலங்கையையே கொள்வோம்.

புதிய உலகஒழுங்கு என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திறந்த பொருளாதார நடவடிக்கைகள் தேசிய அரசின் எல்லைகளை அர்த்தமற்ற தாக்கியுள்ளது. சந்தை நடவடிக்கைகள் சமூகம் கூறுபடுவதற்கான காரணியாக அமைந்தாலும், தேசங்களை இணைப்பதற்கும் துணைபுரிந்துள்ளது. ஒரு நாடு தனது தேசத்திற்குள் அணு உலைகளை நிறுவும்போது அண்டைநாடுகளின் அங்கீகாரம் தேவை என்னும் நிலை உருவாகியுள்ளது. அணு உலைகளில் ஏற்படும் விபத்து அண்டைநாட்டிற்கும் ஆபத்து விளைவிக்கும் என்பதால் இத் தீர்மானம் அவசியமாகிறது. இதே போன்று ஒரு நாடு தனது தேசியத் தேவைகளை தனியே நிறைவேற்றிக் கொள்ள முடியாது. வளர்ந்துவரும் சந்தை நிலைமைகள் பல்வேறு தேசிய பொருளாதாரங்களை இணைக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் தேசியவாதம் என்பது அர்த்தமுள்ளதா? என்ற கேள்வி எழுகிறது. தேசியவாதத்தின் தன்மைபற்றிய விவாதம் தேவையாகிறது. தேசியவாதமானது ஓர் பிரஜைக்குரிய குணாம்சங்களை வழங்கும் அதேவேளையில் கொடுமையான பிரச்சனைகளை விளைவிக்கும் வித்தாகவும் அமைந்து விடுகிறது. தேசியம் வழங்கும் பிரிவினைத்தன்மை வரலாற்றில் சகல பாகங்களிலும் காணப்படுகிறது. இவை தொடர்ச்சியாக நிலவவே செய்யும். ஆனால் இதன் கூர்மையான தன்மையைத் தணிப்பதே அவசியமாகும். தேசியத்தின் செயற்பாடு சர்வதேசிய அம்சங்களைக் கொண்டிருக்குமாயின் இப்போக்கினைத் தணிக்க முடியும்.

தேசியவாதம் குறித்து இரு விவாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. தேசியவாதம் என்பது ஓர் உணர்வுநிலை என்றும் அவ்வாறான உணர்வுக்கு நியாயமான காரணங்கள் உள்ளதாகவும் இடதுசாரிகள் கூறுகின்றனர். அடுத்து தேசியவாதம் வலதுசாரிகளின் கோட்பாடாகும். இது இடதுசாரிகளின் கருத்திற்கு நேர்முரணானதாகும். வலதுசாரிகள் தமது தேசியவாதத்தினைத் தனித்துண்டாகவே பார்க்கின்றனர். இதனால் மற்றெல்லாத் தேசியவாதத்தினையும்விட தனியாகவே காணலாம்.

தேசிய அடையாளம் என்பது ஒரு பிரஜைக்கு அவசியமானதொன்றாகும். தேசியத்துடன் தன்னை இணைத்துக்கொள்வதன்மூலம் பிரஜைகள் பெருமிதம் கொள்கின்றனர். ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தின் சந்ததி என்பது தேசிய அடையாளத்தை இறுக இணைத்துக் கொள்கிறது. ஒரு பிரஜைக்


எக்ஸில் வெளியீடுகள்



தமிழிற் தரிப்புக் குறிகளின் பயன்பாடு

சி. சிவசேகரம்

முதற் பதிப்பு: ஏப்ரல் 1994



மறையாத மறுபாதி
(புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு)

முதற் பதிப்பு: பெப்ருவரி 1991


எனக்குள் பெய்யும் மழை

மூன்றாம் உலகப் பெண்நிலைவாதம்:
இருபத்திரண்டு ஆசியக் கவிகள்
தொகுப்பும் மொழியாக்கமும்:
யமுனா ராஜேந்திரன்

முதற் பதிப்பு: மே 1999

பிரதிகட்கு:
EXIL
27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France.
e-mail: EXILFR@aol.com

கான கலாச்சார விழுமியங்களை இத் தேசியமே வழங்குவதால் இவற்றிற்கெதிராக எழக்கூடிய சக்திகளிலிருந்தும் அதனைப் பாதுகாப்பது தனது கடமை எனக் கருதுகிறது. இத்தேசிய உணர்வே சுயநிர்ணய உரிமைக்கான குறிக்கோள் ஆகிறது.

இவ்வாறு தேசிய அடையாளத்தை நிலைநிறுத்த முயலும் ஓர் இனம் எவ்வாறு இதர கலாச்சாரங்களை அல்லது இனங்களை இணைத்து கொள்ளப் போகிறது? தேசிய அடையாளத்தை நிலைப்படுத்த வெறித்தனமான போக்கினை ஓர் இனம் கைக்கொள்ளுமாயின் இதர கலாச்சாரங்களை அல்லது இனங்களை ஏற்கமுடியாத நிலைக்குத் தன்னைத் தள்ளுகிறது. ஒற்றை இன நாடாக தன்னைப் பிரகடனப்படுத்தி பாரம்பரியத்தைப் பாதுகாக்கப் போவதாகக் கூறுகிறது. இதன்மூலம் தான் தனது புகழ்மிக்க கலாச்சாரத்தைக் கலப்படமில்லாமல் வைத்திருக்கலாம் என நம்புகிறது.

இத்தகைய வலதுசாரித் தேசியவாதம் புனிதத் தன்மை, சகிப்புத்தன்மை என்பவற்றை வலியுறுத்துவதோடு கீழ்ப்படிந்து நடத்தலையும் வற்புறுத்துகிறது. தேசிய அடையாளத்தின் தேவையை ஆட்சியாளரே அதிகளவில் செயற்கையாக்குகின்றனர். இது ஆட்சியைக் கைப்பற்றத் துடிக்கும் குழுக்களுக்கு குறுக்குவழியில் இலக்கை அடைய உபயோகிக்கப்படும் கருவியாகும்.

பிரித்தானிய வெள்ளையர்கள் குறிப்பாக கன்சவேட்டிவ் சிந்தனையுள்ளவர்கள் தமது தேசிய அடையாளம் மாசுபடாமல் இருக்கவேண்டும் என்பதை வெவ்வேறு வழிகளில் மக்களுக்கு உணர்த்துகின்றனர். தேசியக்கொடி, ஸ்ரேலிங் பவுண் நாணயம், மகாராணிக்கு மரியாதை என்பவற்றை வலியுறுத்துவதன் மூலம் வெள்ளை ஆதிக்கத்தை அடிக்கடி நினைவுறுத்துகின்றனர்.

இலங்கையின் அரசியலில் இத் தேசியவாதமே தேசத்தின் பிரச்சனைகளுக்கு மூலகாரணமாக அமைந்துள்ளது. பௌத்த, சிங்கள தேசியவாதம் தனது வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்ப்பதால் சமூகத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை உள் வாங்கிக் கொள்ளமுடியாமல் தத்தளிக்கிறது. உண்மையில் இது ஒரு விகாரமான போக்காகும். அதாவது திறந்த பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் நாட்டின் கலாச்சாரம் பெரும் நெருக்கடிக்குள் சென்று கொண்டிருக்கிறது. இனப் போராட்டம் ஆயுதப்பரிமாணத்தைப் பெற்ற பின்னர் பௌத்தமதக் கோட்பாடும் தத்துவ வலிமையை இழந்து வருகிறது. இந்நிலையில் இனப்போராட்டத்தைக் காரணம் காட்டி பௌத்தமத ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிப்பது அரசியல் நோக்கமென்பது தெளிவாகிறது.

இந்திய இந்துமதவாதிகளான சிவசேனை இயக்கமும், ஏனைய மதங்களுக்கெதிரான போரொன்றைத் தொடுத்து வருகிறது. இந்தியா என்பது இந்து மதத்தவருடைய நாடு எனவும், ஏனைய மதத்தவர் தமது மதங்களைப் பேணும் உரிமையைக் கொண்டிருப்பினும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

பல்லின மக்கள் வாழும் ஒரு சமுதாயத்தில் ஓர் இனம் தனது புனிதத்துவத்தினைப் பேண முனைவதாகக் கருதுவது மிகவும் பிற்போக்கானதாகும். தேசியக்கட்டுமானத்தில் இவ்வினங்களின் பங்குபற்றலைத் தடுப்பதோடு அடிப்படை மனித உரிமைகளையும் மீறுவதாகும்.

பொருளாதாரம், தொழில்நுட்பம் என்பன சர்வதேசமயப்பட்டுவரும் இக்காலகட்டத்தில் சமூக முன்னேற்றம் என்பது சர்வதேசநோக்குக் கொண்டதாக அமையவேண்டும். பல்லின சமூகம் என்பது நாட்டின் முன்னேற்றத்தைப் பின்னடையச் செய்வதல்ல. அது புதிய தேசியத்தை, புதிய தேசிய அடையாளத்தைப் பதிவு செய்வதாகும். ருவாண்டாவில் இடம்பெறும் படுகொலைகளை இலங்கை கண்டிக்கிறது. ஈராக்கின் சம்பவங்களையிட்டுக் கவலை தெரிவிக்கிறது. காரணம் என்ன? மனிதப் படுகொலைகளுக்கு நியாயம் கற்பிக்க முடியாது என்பதேயாகும். சர்வதேச சமூகத்திற்கு அதில் அக்கறையுள்ளது என்பது தான். இலங்கைப் பிரச்சனையில் அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, கனடா போன்ற நாடுகள் தலையிட முன்வருகிறதென்றால் ஒரு புதிய சர்வதேச கலாச்சாரம் இக் காட்டுமிராண்டிக் கொடுமைகளுக்கெதிராக கிளம்புகிறது என்பதுதானே பொருள்.

ஆயுதப்போராட்டம் என்பது அம்பும், வில்லும் கொண்ட போர் அல்ல, சில நொடிகளில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்லும் ஆயுதங்கள் புழக்கத்தில் உள்ளன. ஆயுதப்போராட்டத்தின் வெற்றி கொள்கைமீது கொண்டுள்ள பற்றின் அடிப்படையில் தற்போது தீர்மானிக்கப்படுவதில்லை. கொள்கைகள் ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் நிலமைகள் மாறி தற்போது ஆயுதங்களே கொள்கைகளைக் கட்டுப்படுத்துகின்றன. அது கைகளில் உள்ள பணத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. இந்நிலையில் ஆயுதப்போராட்டத்தை வலியுறுத்தி தேசியவாதத்தை முன்னெடுப்பது பல்லாயிரக்கணக்கான உயிர்களை விலைபேசுவதற்கொப்பாகும். எனவே ஆயுதங்களை முன்னிலைப்படுத்தி வைக்கப்படும் தேசியவாதம் பிற்போக்கானது. நிராகரிக்கப்பட வேண்டியது. அமெரிக்கா- ரஷ்யா ஆயுதப் போட்டி ஈற்றில் ரஷ்ய நாட்டைக் கையேந்த வைத்துள்ள நிலைமையை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

தேசங்களுக்கிடையேயான எல்லைகள் தற்போது அர்த்தமற்றதாகி, பூரண இறைமை என்பது




**கோபல்ல கிராமம்**

(நாவல்)

**கி. ராஜநாராயணன்**

வெளியீடு:

**செல்மா**

2, Sivan Koyil South Street

Sivagangai 623 500, India.

விட்டுக்கொடுப்புகளுக்கு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியுமே தேசியத்தின் புதிய மையங்களாகியுள்ளன. எனவே ஜனநாயக அணுகுமுறையே இவற்றின் அச்சாணியாக அமைகிறது.

தேச அரசுகள் அவ்வவ் நாடுகளின் கொள்கைகளைத் தாமே தீர்மானிக்கும் போக்கு மாறிவிட்டது. பல்தேசிய நிறுவனங்களே இவற்றைத் தீர்மானிக்கும் போக்கு வளர்ந்து வருகிறது.

சர்வதேச மனிதஉரிமைமீறல்களைக் கண்காணிக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற ஸ்தாபனங்களின் கருத்திற்கு அரசுகள் செவி சாய்க்கும் நிலைமைகள் வளர்ந்து வருகின்றன. பிராந்தியரீதியாகப் பொருளாதாரக் கூட்டுகள் வளர்ந்து வருகின்றன.

எனவே நாம் சர்வதேச நிலைமைகளுக்கு ஏற்ப எம்மைச் சரி செய்யும் வகையில் மாற்றம் பெற்று வருகிறது. இந்த வகையில் பார்க்கும்போது நாம் சர்வதேச சட்டங்களால் படிப்படியாக ஆளப்பட்டு வருகிறோம் என்பதே உண்மையாகிறது.

அரசுகளின் போக்கும், அணுகுமுறையும், அமைப்பும் சர்வதேச நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றீடு செய்யப்பட்டு, பல்லின மக்கள் சுபீட்சத்துடன் வாழும் ஓர் தேசியத்தைக் கட்டியெழுப்புவதே இன்றைய தேவையாகும். புதிய ஜனநாயகம் தோற்றம் பெறுவதற்கு அரசியற்கட்சிகளே பிரதான பங்கு வகிக்க வேண்டும். மாறிவரும் நிலைமைகளை மனதிற்கொண்டு கட்சிக் கொள்கைகள், அணுகுமுறைகள் மாற்றப்பட வேண்டும். இதன்மூலமே ஆரோக்கியமான நிலையான ஆட்சியையும், ஜனநாயகத்தையும் தோற்றுவிக்க முடியும். ●

---

இக்கட்டுரை இந்த இதழுடன் நிறைவடைகிறது. தேச/தேசிய விடுதலைப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கும் வளர்முக நாடான இலங்கையின் இனங்களின் விடுதலையிலும் அரசியல் பொருளாதார மேம்பாட்டிலும் அக்கறை கொண்டு செயற்படுவோருக்கு இக் கட்டுரையானது சில சாளரங்களைத் திறந்து விட்டிருக்கின்றது.

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள தகவல்களையும் ஆய்வுக் கருத்துக்களையும் மேலும் விரிவான ஒரு தளத்தை நோக்கி நகர்த்தும் பொருட்டு வாசகர்கள் இதனை ஒரு விவாதக் களமாக்கி இதில் பங்குகொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இதில் பங்களிப்பது நம் அனைவரையும் ஒரு ஆரோக்கியமான கருத்துநிலைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.

---

# காவலூர் ஜெகநாதன் நினைவு அறக்கட்டளை



KAVALOOR JEGANATHAN
MEMORIAL FOUNDATION

**காவலூர் ஜெகநாதன்:** காவலூரின் கரம்பொன் என்ற கிராமத்தில் 1955ம் ஆண்டு பிறந்த ஜெகநாதன், தமது 20வது வயதில் எழுத்துலகில் பிரவேசித்தார். இவர் முந்நூறுக்கும் அதிகமான சிறுகதைகளையும், பல நாவல்கள், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இவர் ஈழத்தில் நடைபெற்ற பல சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றவர்,

கமத்தொழில் திணைக்களத்தில் உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தராக பணியாற்றி வந்த இவர், 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழகத்திற்குப் புலம் பெயர்ந்தார். அங்கு இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் 1985ம் ஆண்டு மே மாதம் 31ம்திகதி படுகொலைசெய்யப்பட்டார்.

# வருடந்தோறும் பரிசு


இந்த அறக்கட்டளையில் இருந்து - காவலூர் ஜெகநாதன் நினைவாக சிறந்த சிறுகதைக்கும், சில்லையூர் செல்வராசன் நினைவாக சிறந்த கவிதைக்கும் வருடந்தோறும் தனித்தனியே 50ஆயிரம் இலங்கை ரூபாய்கள் பரிசாக வழங்கப்படும். பரிசுக்குரிய படைப்புக்கள், மூன்று இலக்கிய அறிஞர்களால் பரிசீலிக்கப்பட்டுத் தெரிவுசெய்யப்படும். ஈழத்து சிறுகதையாசிரியர்கள், கவிஞர்களின் படைப்புக்கள் (அவர்கள் எந்த நாட்டிற்குப் புலம் பெயர்ந்திருந்தாலும்) மட்டுமே பரிசீலனைக்கு எடுக்கப்படும். படைப்புக்கள் சஞ்சிகைகளிலோ பத்திரிகைகளிலோ குறித்த ஆண்டிற்குள் பிரசுரமானவையாக இருக்கவேண்டும்.

1998ம் ஆண்டிற்கான படைப்புகள் பரிசீலனைக்காக இருப்பதால், ஆக்கதாரர்கள் தமது படைப்புகளை, வெளிவந்த பத்திரிகை /சஞ்சிகை பெயரையும் காலத்தையும் குறிப்பிட்டு அறக்கட்டளைக்கு அனுப்பி உதவலாம். மற்றும் இலக்கிய ஆர்வலர்களும், இதில் ஆர்வம் காட்டி உதவுவது அறக்கட்ட ளையின் நோக்கத்தைச் செவ்வனே பூர்த்தி செய்ய உதவும்.

தொடர்புகளுக்கு:
**KAVALOOR JEGANATHAN MEMORIAL FOUNDATION**
**51 RUE DE LA PARABOLE,**
**95800 CERGY, FRANCE.**
**TEL : (00 33) 01 30 32 57 25**

# மனுஷி

திருமாவளவன்




அதிகாலை தேனீக்கூடு போல சுறுசுறுப்பாய் இயங்குகிறது ரொறன்ரோ விமான நிலையம். நான் விமானத்துக்காக ஓய்வு மண்டபத்தில் காத்திருக்கிறேன். இப் பயணத்துக்கான முன் ஒழுங்குகள் எல்லாம் விக்கினமின்றி மிக இலகுவாகவே முடிவுற்றதில் சற்று ஆறுதலாக இருக்கிறது.

இன்னும் சில நிமிட நேரத்தில் விமானத்தில் ஏறுவதற்கான அழைப்பு ஒலிபரப்பாகும்.

தொடர்ந்து அரைமணி நேரம் கழித்து விமானம் மண்ணை விட்டுக் கிளம்பும். நானும் கூட.

நேரத்தைப் பார்க்கிறேன். அது அசைவதாக இல்லை. நின்ற இடத்திலேயே நிற்பது போல தோன்றுகிறது. குளிருட்டியின் புண்ணியத்தில் சில்லிட்டுக் கிடக்கிறது மண்டபம். ஆனாலும் ஏனோ என்னுடல் வியர்த்துக் கொட்டுகிறது. கைகள் பிசுபிசுக்கிறது. இதயம் துடிக்கும் வேகம் எனக்கே அந்தரமாகத் தெரிகிறது. என்னை இங்கு யாரும் எதுவும் செய்துவிட முடியாது. நான் எந்தவித தவறும் செய்யவில்லை. ஆனாலும் யாரோ பின் தொடர்வது போன்ற பிரமை.... ஒரு துரத்துகிற விசர் நாயிடமிருந்து தப்பிவந்து ஒழித்திருக்கிற உணர்வு.... என்னை யாரோ உற்று நோக்கும் உறுத்தல்.... நாலாபுறமும் என் கண்கள் துளாவுகின்றன. மிரள மிரள விழிக்கிறேன். நான் செய்வது சரியா அல்லது தவறா என்ற தவிப்பு... பிள்ளையளைப் பிரிந்து வந்த துயரம்... மனம் கனத்துக் கிடக்கிறது. நெஞ்சுக்குள் யாரோ அமுக்குவது போன்ற வலி... ஓவெ ன்று கதறி அழவேண்டும் போன்று தோன்றுகிறது. கண்களை இறுக மூடிக் கொள்கிறேன்.

நான் வீட்டை விட்டு, அவனை விட்டுப் புறப்பட்டது சரியான தீர்வுதானா? அவன் இனி எனக்கு கணவனே இல்லை என்று திடமாக முடிவெடுத்தபின்தானே புறப்பட்டேன். மீள ஏன் இந்தப் படபடப்பு, ஏன் இந்த தவிப்பு. பிள்ளைகள் தான் பாவம். அது

களை எப்படி நான் பிரிந்தேன்.

மூத்தவள் கொஞ்சம் வளர்ந் தவள். சமாளித்துக் கொள்வாள். ஆனால் சின்னவள்...

கடைசியாய்ப் பார்த்தபோது கூட அம்மா! என்ன விட்டிட்டுப் போய் விடாதையுங்கோ எண்டு அழுதவள். நான் என்ன செய் வேன். எனக்கு வேறை வழி தெரி யவில்லை.

பதின் மூண்டு வரிசம்.... என் னாலை நம்ப முடியவில்லை.

அன்றைக்கு சாயங்காலம்.... பம்பாய் விமானநிலையச் சன்னல் கண்ணாடி வழியே வெளியே பார்க்கிறேன். மஞ்சள் வெய்யில் கலைகிறது. இரத்தச் சூரியன்... சிவந்த வானம்...

அழகு.... அவலம்.... என் னாலை ரசிக்க முடியல்லை.... பயம்.... சந்தோஷம்.... கனவு கள்.... கவலை.... அம்மா... அப்பா.... சகோதரம்.... வீடு உறவு... ஊர் எல்லாத்தையும் விட் டுப்போகிறேனே என்ற கவலை.... கட்டின புடவையோடை காலை யில் புறப்பட்டது.

உம்மா!

நான் மனம் விரும்பித்தான் போறன். சுரேஷை நிக்கா செய் யப் போறன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. தேட வேண் டாம். ஒரு துண்டுக் கடுதாசி யிலை எழுதி வைச்சிட்டு வந்த னான். இதுவரையிலை யாராவது பாத்திருப்பினம்.... இப்ப தேடத் தொடங்கியிருப்பினம் .... நெஞ்சு படபடக்குது....

இலங்கை போற விமானத்து க்கு இன்னும் அரைமணி நேரம் இருக்கு. பக்கத்திலை சுரேஷ். என்ரை வலது கை அவனின்டை கையுக்குள்ளை புதைஞ்சு கிட க்கு. அவன் மெல்ல என்ரை விரல்களை நீவி விடுறான். உடலெல்லாம் ஒருவித சுகம்.... ஏதோ பாதுகாப்பு கிடைத்தது போன்ற உணர்வு....

நெஞ்சு துடிக்குது.

"நிஷா! நீ ஒண்டுக்கும் பயப்படாதை. நான் இருக்கிறன்; உன்ரை வாழ்க்கை முழுவதும்... துணையாய்....,

சுரேஷ் சொல்லிக் கொண்டே போறார். அப்ப எனக்கு சந்தோ ஷமாயும் இருந்திச்சு. பயமாயும் இருந்திச்சு.

ஆனால் அவன் சொன்ன தெல்லாம் பொய். பச்சைப் பொய். எல்லாம் நடிப்பு. பசப்பு வார்த்தை. அதை நம்பி ஏமாந்த பேதை நான். காதல் கண்ணை மறைச்சிட்டுது. என்னைப் பெத்த அப்பா அம்மாவை மறைச்சிட் டுது. அவன்தான் உலகமாய்த் தெரிஞ்சுது.

தினமும் நேரம் தவறாமல் ஐஞ்சுதரம் தொழுகை செய்யிற முஸ்லிம் குடும்பத்தில பிறந்த வள் நான். அப்பா அண்ணா தம்பி தவிர வேறு ஆண்களை நிமிர்ந் தும் பார்க்கக் கூடாது, பேசக் கூடாது எண்ட அம்மாவின் கண்டிப்பிலை வளந்தவள். வயது; பருவம்; அதன் கோளாறு; அது தான் நான் ஏமாந்து போனேன். சுரேஷ் என்னை வலு சுகமாய் தன் வசப்படுத்திப் போட்டான்.

அவன் இந்து; யாழ்ப்பாணத்து இந்து. பொறியியல் படித்து முடி த்து விட்டு அங்கு செய்முறைப்ப யிற்சிக்கு வந்திருப்பதாகக் சொன்னான். எப்ப பார்த்தாலும் வெள்ளை சறம்.... வெள்ளை சேட்... அழகாய் மிடுக்காய் இருப் பான். கையிலை பணம் தண்ணி போலை பாயும்.

பார்க்கிறவை எல்லாம் சலாம் செய்வினம். எனக்கு பெருமை யாய் இருக்கும். அவன் சொன ' னதை எல்லாம் நம்பினன். பள் ளிக்கூடம் போறதாய் சொல்லி விட்டு அவனோடை மோட்டார் சைக்கிளில் சுத்தினேன்.

எல்லாம் யாழ்ப்பாணம் வந்த போது தான் புரிஞ்சது உண்மை; அவன் போதைப்பொருளுக்கு அடிமை எண்ட உண்மை; பம்பா யில 'தூள்' விற்கும் கும்பலுடன் இணைந்து குட்டித் தாதாவாய் திரிந்த விஷயம், யாழ்ப்பாண வங் கியளை இயக்கம் கொள்ளை அடிச்ச நகைகளை பம்பாயிலை விற்றுக் கொடுத்து தான் தாதா வைப்போல நடந்த விஷயம் எல் லாம் புரிஞ்சது.

ஆனால் இப்ப என்ன செய்யி றது. கூட்டுக்குள் சிக்கிக் கொண்ட சின்னப் பறவை நான். இனி எப்படி திரும்பிப் போவன். முடியாது. என்ரை குடும்பம்; என்ரை மார்க்கம்; என்ரை உறவு எல்லாம் எப்படி என்னை ஏற்றுக் கொள்ளும்.

துரத்தும்.... வீட்டை விட்டு; உறவை விட்டு; ஊரை விட்டு துரத்தும். நான் எங்கையாவது விழுந்து சாகவேண்டியதுதான். எனக்கு சாக முடியல்லை... பயம்... அதிலை விருப்பமில்லை...

முடிவெடுத்தன். எப்படியாவது இவனைத் திருத்தலாம் எண்டு நம்பினன்; நான் இந்துவாய் மாறி னன்; சித்திரா எண்டு பேரை மாத் தினன்; நெத்தியிலை குங்குமம் வைச்சன்; என்னை மாத்த முய ற்சித்தேன்.

இல்லை; பொய்; சுத்தப்பொய்; நான் மாற்றப்பட்டேன். ஆளுக் கேற்றபடி சட்டை தைத்துப் போடு வது போல, அவர்களுக்கேற்றபடி மாற்றப்பட்டேன். இதுதான் உண்மை. நான் அவையளை விட்டு ஓடிப்போனால் அவையி ண்டை கௌரவத்திற்கு இழுக்கு வந்திடும். அவையிண்டை சாதி சனம் அவையளை மதியாது. சபை சந்தியிலை வைச்சு பரிக சிக்கும். அதனாலை மாற் றப்பட்டன்.

என்னுடைய தாய் மொழி இந் தியை விட்டு நல்லாய் தமிழ் பேசக் கற்றுக் கொண்டேன். நெற்றியிலை திருநீறு பூசி பொட்டு வைச்சன். கோயிலுக் குப் போய் வந்தன். வெளியிலை நாலு பேர் முன்னாடி 'எங்கடை மருமகள்' எண்டு இனிக்க இனிக் கப் பேசுவினம். ஆனால் வீட்டுக் குள்ளை காலடி எடுத்து வைச்ச அடுத்த நிமிஷம் எல்லாம் தலை கீழ்தான். ஒரே திட்டலும் கொட்ட லும்தான். குத்திக் குத்தி பேசு வினம்.

நீ வடக்கத்தையாள்... ஆட் டக்காரி... சோனகத்தி... தொப்பி பிரட்டிக் கதைப்பாய்.... உன்னை எப்பிடி நம்புறது...

நான் என்ன செய்வேன். என் னாலை என்ன செய்ய முடியும். நானே மண்ணை வாரி என்ரை தலையிலை போட்டுட்டன். நானே அனுபவிக்கவேணும்.... அனுப விக்கிறன்.

ஒருநாள் நல்லா முழுகி, அழ

காய் தலைவாரி நெற்றியிலை நிறைய குங்குமம் வைச்சிருந்தன். வடிவாய் பாத்திச்சினம்.

"என்னடி இவ்வளவு பெரிசாய்க் குங்குமம்... தேவடியாள் மாதிரி... எல்லாம் வேசம்... எங்களுக்கு வேசம் போடாதை... நீ தப்பித் தவறி உன்ரை ஊருக்குப் போனால் உதை அழிச்சுப்போட்டு மொட்டாக்கு போட்டுக் கொண்டு அசல் சோனகத்தி மாதிரித் திரிவாய். இஞ்சை எங்களுக்கு வேஷம் போடுறாய்... வேஷம்...

எனக்கு குளறி அழவேணும் போல இருந்திச்சுது. விம்மல் நெஞ்சுக் குழியை பிச்சுக் கொண்டு வெளியே வந்திச்சுது. அடக்கிக் கொண்டு அறையுக்கை ஓடுறன். அங்க சுரேஷ் படுத்திருக்கிறார். நல்ல போதை. எங்கையோ வெளியிலை போய் 'தூள்' அடிச்சிட்டு வந்திருக்கிறார். அவருக்கு எப்பவும் போதை தான். போதை இல்லாத நேரத்திலை எப்படி காசு புடுங்கலாம் எண்ட கவலை. ஒரே வெறி.


**சில முடிவுகளும் சில தொடக்கங்களும்**

(நாவல்)

**ச. ராஜநாயகம்**




**வெளியீடு:**
**காவ்யா**
16, 17th E cross
Indira Nagar II Stage
Bangalore 560 038
India.


களவாய் கிடக்கிற காசை எடுத்துக் கொண்டு போய்விடுவார். இல்லாட்டில் வீட்டிலை கிடக்கிற பொருளை எடுத்துக் கொண்டு போய் பாதி விலைக்கு விற்பார்.

ஒருநாள் பிள்ளையின்டை கழுத்திலை கிடந்த சங்கிலியைக் காணேல்ல. அவரையும் காணேல்ல.

மூண்டு நாள் கழிச்சு வீட்டுக்கு வந்தார். நல்ல போதை. யாரோ தூக்கிக் கொண்டு வந்து விட்டிட்டுப் போச்சினம்.

வீட்டிலை எதையாச்சும் காணவில்லை எண்டால் என்னத்தான் பாப்பினம். காதுக்குள்ளை ஒருவருக்கொருவர் குசுகுசுப்பினம்.

"உன்னாலை தான் எங்கடை பிள்ளை கெட்டுப் போனான். உன்னட்டை வந்ததன் பின்தான் கண்டகண்ட கூட்டங்களோடு சேந்து தூள்களுக்கு அடிமையாய் போனான். எங்கடை பரம்பரையில இப்பிடி பழக்கம் கிடையாது. எல்லாம் மகராசி நீ வந்த வினை..." என்ன செய்யிறது. எனக்குக் கேட்டுக்கேட்டு பழகிப் போச்சு நான் சொறனையில்லாத ஜடமாய் போனன்.

கடைசியிலை யாரோ தெரிந்த டாக்டரிடம் கூட்டிப் போய் வைத்தியம் செய்தினம். ஆயிரம் புத்திமதி சொல்லிச்சினம். ஏஜன்சியை பிடித்து கனடாவுக்கு அனுப்பிவிட்டினம்.

இதுகூட தங்கடை மானம் கப்பலேறுது; ஊர்ச் சனம் பார்த்து சிரிக்குது என்ட காரணத்துக்காகத்தான்.

நல்ல காலம் பிறந்தது எண்டு நினைச்சன். ஆனால்... எல்லாம் போச்சு... என்றை ஆசையிலை மண் விழுந்து போச்சு.

விமான நிலைய ஓய்வு மண்டபம் ஓரளவு நிரம்பியிருக்கிறது. விமானத்திலை ஏற வேண்டிய நேரம் நெருங்கி விட்டது எண்டு நினைக்கிறன். சனம் எல்லாம் நல்ல மகிழ்ச்சியாய் பயணப் பரபரப்பிலை மிதக்கிறார்கள். என்னால் முடியவில்லை. அடிபட்டு பயந்துபோய் பதுங்கியிருக்கிற புறாக்குஞ்சைப் போல குடங்கிப் போய் இருக்கிறேன்.

பக்கத்திலை ஒரு சீக்கியத் தம்பதியர்; இரண்டு பிள்ளைகள்.... எவ்வளவு குதூகலம்... விமானத்தில் ஏறப் போகின்ற மகிழ்ச்சி.... பிள்ளைகளில் ஒன்று என்னைப் பார்த்துப் புன்னகைக்குது. நானும் பதிலுக்கு புன்னகைக்க முயற்சிக்கிறேன். முடியவில்லை... அதில் கூட நான் தோற்றுப் போகிறேன். தோல்வி; ஒன்றல்ல இரண்டல்ல அடுத்தடுத்து.... தோல்வியே என் வாழ்வாகி; வாழ்வே கேள்விக் குறியாகி...

அவர் கனடா வந்து நான்கு வருடங்களின் பின் நாங்களும் வருகிறோம். நான், எனது மகள் பார்கவி... கனவுகள்... கற்பனைகள்... நம்பிக்கை; புதிய தேசம்.... புதிய உறவுகள்...

பழசையெல்லாம் மறந்து புது வாழ்க்கை... அவரது குடும்பம்; போலிகௌரவம்.... எல்லாவற்றிலிருந்தும் விடுதலை. இனி நான்... அவர்... எனது குடும்பம்... இனிய வாழ்க்கை....

பெரிய பெரிய கற்பனைகளோடு கனடாவில் காலெடுத்து வைக்கிறேன். ஆனால்.... ஆனால்.... எல்லாம் பழசு.

அதே குடி; அதே போதை; எப்போதும் புதிய புதிய சிநேகிதங்கள்; கூடாத நட்பு... போதைக்கு உதவுற நட்பு...

என் கனவுகள் எல்லாம் சுக்கு நூறாய் சிதறிப் போகிறது. நான் அவனை விட்டு விலகியோட அறிவு உறுத்துகிறது. ஆனால் மனது மறுக்கிறதே.... ஏன்? சிறு வயதிலிருந்து ஆண்களுக்கு அடங்கிப் போயே பழக்கப்பட்ட மனது என்பதால் முடியவில்லையா... என் இரவுகள் கண்ணீரில் கரைகிறது...

இதன்பின் வருகிறாள் என் இரண்டாவது மகள். இரண்டு பெண் பிள்ளைகள்; இனியாவது அவருக்கு பொறுப்பு வராதா? இனியாவது திருந்திவிட மாட்டாரா? மனம் அங்கலாய்க்கிறது.

போகும் இடமெல்லாம், "சுரேஷ்! எங்கை வேலை செய்யிறியள்" என்று கேட்கும் போது வாய் கூசாது "பச்சையில் இருக்கிறன்" எண்டு சொல்லுவார். என

க்கு மானம் போகிது. கனடா வந்து எட்டு வருஷம்.

இதுவரையில் வேலை என்பதே கிடையாது. கனடாவிலை வேலை செய்கிறவங்கள் எல்லாம் புத்தி கெட்டவங்கள்; பிழைக்கத் தெரியாத பேதைகள் என்பது அவற்றை நினைப்பு. அப்பப்போ புதிதாய் வருகிற வெல்பெயர் அதிகாரிகளை வாக்குச் சாதுரியத்தால் மடக்கிவிடும் வாலாயம் அவருக்கு கைவந்த கலை. அதையே சாதனை என்பது போல வருவோர் போவோருக்கெல்லாம் சொல்லிப் பெருமை கொள்வார்.

என்னாலை முடியேல்லை... எத்தனை காலந்தான் வெல்பெயர் அதிகாரி முன் பல்லை இளிச்சுக் கொண்டு நிற்கிறது... முடிவெடுத்தன்... இனிமேல் நான் வேலைக்கு போக முடிவெடுத்தன். போகத் தொடங்கினேன்.

ஆனால் இதிலும் தோல்வி தான்... வேலைக்கு போகத் தொடங்கிய பின்பு தான் நிலைமை மோசமாச்சு. நான் வீட்டை விட்டு கிளம்பிய கையோடு குடிக்கத் தொடங்கி விடுவார்.

மாலை வீடு திரும்பும் போது போத்தல்கள் சிதறிக் கிடக்கும். போதையின் உச்சத்தில் பிதற்றுவார்.

"எங்கையடி போட்டு வாறாய்... யாரோடை படுத்திட்டு வாறாய்..."

நான் எதைச் சொல்லுவன்... திருப்பிக் கதைத்தால் அடி உதை... அழகாய் உடுத்த முடியவில்லை...

"யாரோடை ஆடுறத்துக்கு இப்பிடி வெளிக்கிட்டு போறாய்..." என்கிறார்.

ஒரு நாள் இந்திப் பாட்டுக் கேட்டபடி குசினி வேலையில் மூழ்கிப் போயிருந்தன். இவர் வந்தகவனிக்கல்லை.

"என்ன இந்திப் பாட்டு கேக்கிறாய் இப்ப புதிசாய் இந்திக்காரனையோ பிடிச்சிருக்கிறாய்..."

நான் ரணப்பட்டு வலி தாங்க முடியாது திணறுகிறேன். அடியைக் கூட தாங்கலாம். இந்த ரணங்களை இதயத்தில் எப்படிச் சுமப்பது... சீழ்பட்டு வலிக்கிறது.

"நீ காற்று... நான் மரம்...
நீ என்ன சொன்னாலும்
தலையாட்டுவேன்..."

நல்ல தமிழ்ப் பாட்டு... இலகுவான வாக்கியங்கள். எனக்குப்பிடிச்சிருந்திச்சு. இந்திப்பாட்டுக் கேட்டால்தானே வினை வரும். சரி... தமிழிலாவது கேட்கலாம் என நினைத்து கசட் பிளேயரைப் போடுகிறேன்.

"இந்தப் பாட்டிலை உனக்கு என்னடி விளங்குதெண்டு கேட்கிறாய்"

"விளங்கின படியால் தானே கேட்கிறேன்"

"உனக்கு இதுகின்டை கருத்து தெரியுமோடி"

"தெரியும்"

"எவனை மனதிலை நினைச்சு வைச்சுக் கொண்டு கேட்கிறாய்"

நான் கூனிக் குறுகி குறுகுறுத்துப் போகிறேன். எவ்வளவு காலந்தான் இதுகளை தாங்கிக் கொள்ளப் போகிறேன்.

இவருடன் வரும் பெடியள் எல்லாம் இவரை ஒத்ததுகள்தான். எப்பவும் தண்ணிதான். முழிச்சு முழிச்சுப் பாப்பினம், வாழ்க்கையிலை பொம்பிளையே பார்க்காதது போலை. மனம் கூசும்.

வாறவங்களுக்கெல்லாம் சமைச்சுப் போட வேணும். ஒரு நாள் ஒருத்தன் கேட்டான்.

"சித்திரா...! இந்த ஆளோடை என்னண்டு காலந் தள்ளுறீர்... ஒரு பொறுப்பில்லாத மனுஷன்... எனக்கென்டால் உமக்கு உதவி செய்ய வேணும் போல இருக்கு... உம்மிலை விருப்பமாயிருக்கு... என்னட்டை நிறையப் பணமிருக்கு... நான் உம்மை வசதியாய் மகாராணி மாதிரி வைச்சிருப்பன்"

அவன்ரை மூஞ்சியிலை காறித் துப்ப வேண்டும் போல இருந்திச்சுது. என்ன துணிச்சல்... வச்சிருக்கிறன் என்கிறான். வைச்சு விளையாட நான் என்ன விளையாட்டு பொம்மையே...

மனுஷி. இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். உயிரும் உணர்வுகளும் நிறைய துயரமும் உள்ள ஒரு ஜீவன்.. என்ரை நண்பன்ரை குடும்பம் எண்ட நினைப்புக் கூட இல்லை. செருப்பாலை அடிக்க வேணும் போலை இருந்திச்சுது. சுரேஷ் ஒழுங்காய் இருந்தால் ஏன் அடுத்தவன் கேட்கிறான்.

கோபம் பொத்திக்கொண்டு வந்திச்சு... அடக்கிக் கொண்டு பொறுமையாய்ப் பதில் சொன்னேன்.

"நீர் நினைக்கிறது போலை ஆளில்லை நான்... வேணுமெண்டால் வேறை யாரையும் பாரும்..."

ஆனால் அவன் விடுவதாய் இல்லை. தனிய காணும் போதெல்லாம் கரைச்சல் கொடுக்கிறான். கடைசியிலை உபத்திரவம் தாங்க முடியாமல் சுரேஷிட்டை சொன்னேன்.

இப்ப பார் அவனை அடிக்கிறேன், உதைக்கிறேன் எண்டு சன்னதங் கொண்டார்.

இது நடந்து நாலு வாரம் தாண்டயில்லை. அவனோடை சிரிச்சுப் பேசியபடி வீட்டுக்கு வந்தார்.

அவருக்கு தன்ரை மனுஷியை ஒருத்தன் கேட்டானே எண்ட ரோஷம் கிடையாது. அவருக்கு தேவையான தெல்லாம் போதை. அதுக்கு உதவுகிற நண்பர்கள்... அது மட்டும் கிடைத்தால் போதும்.

இனியும் இவனோடை வாழ முடியாது.

நான் வீட்டை விட்டுப் புறப்படுவதாக முடிவெடுத்தேன். எனக்கு உதவி செய்ய யாரும் கிடையாது.

எல்லாரும் அவருடைய நண்பர்கள் அல்லது அவர் உறவால் கிடைத்த உறவினர்கள்.

இருப்பதெல்லாம் அவருக்கும் அவரின் கதையளுக்கும் ஒத்துப் போகிற உறவுகள்தான்.

எனக்கு உதவ முன்வாற நண்பர்கள் கூட அவரின் சிநேகிதங்களைக் கண்டு எமக்கேன் வம்பு எண்டு விலகியோடுவர். இல்லாட்டில் குடும்பமெண்டால் ஆயிரம் இருக்கும், சேந்து வாழுறது தான் பொம்பிளையளுக்கு லட்சணம் எண்டு புத்திமதி சொல்லுவினம்... கடைசியிலை பழையகதை தான்...

விமானத்தில் ஏறுவதற்கான அழைப்பு ஒலிபரப்பாகி விட்டது. எல்லோரும் பரபரப்பாகி தங்கள்

பொருட்களுடன் விமானத்தை நோக்கி புறப்படுகிறார்கள். என்னால் முடியவில்லை. யாரோ பின்னால் நின்று இழுப்பது போல இருக்கிறது. ஏன் என் மனம் இப்பிடி தவிக்கிறது... ஒவ்வொரு தடவையும் நான் இதைத் தானே செய்கிறேன்... என்னால் ஏன் உறுதியான முடிவு எடுக்க முடியவில்லை... சிறுவயதில் இருந்து நான் வளர்க்கப் பட்ட முறமை காரணமா.... அல்லது பெண் என்பவள் ஆணுக்கு அடங்கி வாழ பிறந்தவள்தானா.... என்ன உலகம் இது?

என்னிடம் பெரிய பொதிகள் எதுவும் இல்லை. அவசரத்தில் ஓடிவந்த போது எடுத்துக் கொண்ட இரண்டொரு ஆடைகள் மட்டுந்தான்... அதை ஒரு சிறிய பொதியாக கையில் எடுத்துக் கொண்டேன்... பதின் நான்கு ஆண்டுகளின் பின் ஊருக்குப் போகிறேன்.... வெறுங்கையுடன். சற்று அவமானமாய் இருந்தது.

"நீ உங்க கஸ்ரமெண்டால் இங்க வா" என்று என் குடும்பத்தினர் சொன்னாலுங்கூட நான் பெண். ஊர் என்ன சொல்லும். சனங்களின் பார்வைகள் எப்படிக் கொல்லும். எனக்கு எங்கு போனாலும் நிம்மதி கிடையாது... ஆனால் இப்போ நான் என்ன செய்வது....

விமானத்தை நோக்கி நடக்கிறேன்.

மீள எழுகிறது அதே கேள்வி. நீ செய்வது தவறு... நீ தோற்றுப் போய் ஏதோ ஒரு குரல் மண்டையில் உறைக்கக் கூவுகிறது. ஆனால் என்னால் முடியவில்லை.

நான் வீட்டை விட்டுப் புறப்பட்டு பத்து நாட்கள்.... நான் திரும்பி நிற்பன். துணிஞ்சு நிற்பன் எண்டு நினைச்சுத் தான் வெளிக்கிட்டன். எனியும் இவனோடை வாழமுடியாது எண்ட தீர்க்கமான முடிவோடு வெளிக்கிட்டன்...

மனமெலாம் குத்திப் பிளந்து குருதி ஓடக் குமுறியபடி முகத்திலும் உடலிலும் அடியின் தழும்புகளோடு வெளியே வந்தேன்.

வேலையால் வரும்போது ஏழு மணி தாண்டியிருந்தது. நல்ல வெறியிலை நிண்டான்.

"எங்கையடி போட்டு வாராய்"

"................"

"இப்ப என்ன நேரம்.... இதுவரையும் எவனோடை இருந்தனி"

"................"

"நான் பொம்பிளை மாதிரி பிள்ளையளைப் பாத்துக் கொண்டு வீட்டுக்குள்ள இருக்கிறன்... நீ ஆம்பிளை மாதிரி சுத்தித் திரியிறாய்...."

என்னால் இதற்கு மேலும் பொறுமையாய் இருக்க முடியவில்லை. எவ்வளவு நேரம்தான் இந்த தாக்குதல்களை மௌனத்தால் தடுக்க முடியும்.

"நான் ஒருத்தனோடையும் சுத்தேல்லை. வேலையாலை வாறன்"

"உனக்கு மட்டும் எட்டு மணி மட்டும் வேலையோ? யாருக்கு கதை விடுறாய். பொம்பிளை எண்டால் ஒழுங்காய் நேரத்துக்கு வீட்டுக்கு வாடி"

வாக்கு வாதம் முற்றிச்சு... கடைசியிலை அடி உதை.... பத்து நாள் அலைஞ்சேன். பல பேர் புத்தி சொல்லிச்சினம்.

"பிள்ளையள் பாவம். அதுகளுக்காக எண்டாலும் நீ அவனோடை வாழத்தான் வேணும். இரண்டும் பெட்டைப் பிள்ளைகள்... நாளைக்கு ஒருதன்டை கையிலை கௌரவமா பிடிச்சுக் குடுக்க வேண்டாம்..."

எனக்கு சிரிப்பதா அழுவதா எண்டதே புரியேல்ல. என்ன சமுதாயம் இது. நான் ஒருதனிட்டை அடிபட்டுப் போய் அனாதரவாய் கிடக்கிறன். என்டை பிள்ளையளை இன்னொருத்தனிட்டை குடுக்கிறதிலையே குறியாய் இருக்கிற சமுதாயம். இதன் மத்தியில நான் எப்படி வாழ்வது?

சிலபேர் நீ கவுன்சிலிங்க்கு போ. உனக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் கிடைக்கும். இந்த நாட்டிலை பொம்பிளையளுக்கு இல்லாத சட்டமா எண்டினம்.

ஆனால் எனக்கு சட்டத்தாலை விடுதலை கிடைக்கும் எண்டதிலை துளி கூட நம்பிக்கையில்லை.

நான் வாழப் போறது சமுதாயச் சிறையிலை. அவன் இருக்கையிலை என்னோடை வந்திரு எண்டு கேட்ட சமுதாயம்.... இது என்ன பேசும்... சவுக்காலை அடிக்கிறது போல நாக்காலை அடிக்கும்....என்ரை மனம் துடிக்கத் துடிக்க அடிக்கும் இதை எல்லாம் சட்டத்தாலை என்ன செய்ய முடியும்...

நான் உன்னோடை வாழ விரும்பவில்லை. தனிய வாழ விரும்பிறன். என்னை விடு எண்டு கெஞ்சிக் கேட்டன்.

உன்னைத் தனிய வாழ விடமாட்டன். நீ என்னட்டை வந்தே ஆகணும் எண்டான். அவள் ஆரோடையோ ஓடியிட்டாள் எண்டு வாய் கூசாமல் சொன்னான். எனக்கு உதவி செய்தவை எல்லாரையும் மிரட்டினான்.

என்னாலை முடியேல்ல. புறப்பட்டிட்டன். நான் செய்யிறது சரியா பிழையா...

விமானத்து இருக்கைகளின் பெல்ட்களை இறுக்கி பூட்டியாயிற்று. விமானம் மெல்ல மெல்லக் கிளம்புகிறது. காதுக்குள் காற்ற முக்கம் அழுத்துகிறது. தலை சுற்றி ஓங்காளம் வருகிறது.

கண்களை இறுக மூடிக் கொள்கிறேன்.

எங்கோ தூர என் பிள்ளைகள் அழுவது போன்ற குரல். திடுக்கிட்டு விழிக்கிறேன். விமானம் சீராகப் பறக்கிறது. தளைகள் எல்லாம் கழட்டியாயிற்று. சுதந்திரமாய் இருக்கிறது.

மனம் அடித்துச் சொல்கிறது. சித்திரா! உன் மனதை திடப்படுத்து. திரும்ப வா! உன் பிள்ளைகள் பெண்பிள்ளைகள். நாளை உன்னைப் போல் இந்த சமுதாயத்தில் இடிபடக் கூடாது.

இந்த சமூகத்தை எதிர்க்க, நிமிர்ந்து நிற்க, அதுகளை வழிநடத்து. அது உன்னால்த்தான் முடியும்.

உண்மைதான்....என்ரை பிள்ளையள் நாளைக்கு அனாதையாகக் கூடாது. என்னைப்போல இடிபட்டுத் தோற்றோடக் கூடாது. அதுகளை நான் வழிநடத்த வேணும்.

நான் திரும்பி வரத்தான் போகிறேன். திடமாய். ●



## காலத்தின் பதிவுகளில்...

# கூத்துக்கலைஞன் கிறெகரி தங்கராசா



கிறெகரி தங்கராசா காலமாகிவிட்டார்.
அவர் வாழும் புலத்தில் பிரசித்தமானவர். மேலும் பத்திரிகைகளதும் நாடக விமர்சனங்களதும் கண்களின் தயவுக்கு ஏங்காததால் எழுத்தில் எட்டுத் திக்கும் அறியப்படாதவர்.

புகலிடத்தின் ஈடு செய்யமுடியாத மேடைக் கலைஞரான அவர், பல்கலை வளாக கல்விமான்களின் பரிந்துரைகளின் பின் நாட்டுக் கூத்தில் ஈடுபாடு காட்டியவரல்ல. பிறப்பில் இருந்து இறப்பு வரை மேடைக் கலையை வாழ்வாகக் கொண்டவர் அவர், பெரிய படிப்பாளி அல்ல. ஆனால் பலரும் படிப்பதற்கு மேடையில் பல பரிமாணங்களையும் உள்ளடக்கி இருந்தவர் அவர். சிறந்த குரல் வளம் மிக்க பாடகர். பாடியும் ஆடியும் நடிக்கக்கூடிய எல்லா விதமான வேடங்களிலும் சோபிக்கக்கூடிய புகலிட மேடையை ஆக்கிரமித்த கலைஞர் அவர்.

வடமோடி நாட்டுக்கூத்தின் பாதச் சுவடுகளில் நடந்தும் புதிய நவீன நாடக வெளிகளில் நிமிர்ந்தும் வாழ்ந்தவர் அவர். தன் வேகத்திற்கேற்ற பிரதிகள் இல்லாதபோது பிரதிகளைத் தானே உருவாக்கியவர். நாடக மரபில் திளைத்து புதிய விருட்சங்களை உருவாக்கும் பணியில் தீவிரமாக செயற்பட்டவர். கலைக்கோயில் எனும் நிறுவனத்தை நிறுவி பல கலைஞர்களை நெறிப்படுத்தியவர். காசும் வாழ்வுமாய் காலம் கடத்தும் நம் உலகில் கலைஞனுக்கு உரிய வாழ்வை உருவாக்க தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர்.

எந்தத் தொழிலானாலும் செய்து அந்த உழைப்பை கலைஞர்களின் ஊக்கத்திற்காக ஈந்தவர். வாழும்போதே கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்து, பல்வேறுபட்ட மேடைக் கலைகளிலும் சிறந்த ஒரு பட்டியலாய் முப்பது பேரைத் தெரிந்து எடுத்து தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தவர். இந்தச் சமூகம் கலைஞர்களை எப்படிக் கௌரவிக்கிற என்பதன் ஆதங்கத்தை ஒரு சமூகக் கலைஞனாய் வெளிப்படுத்தி செயற்பட்டவர் அவர். இனிவரும் காலங்களிலாவது கலைஞர்கள் அவர்கட்குரிய வகையில் கௌரவிக்கப்பட்டால் அதுவே மறைந்த இக் கலைஞனுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய அஞ்சலியாக இருக்கும்.

இவரின் மறைவுத் துயரில் 'உயிர்நிழல்' பங்குகொண்டு தனது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.


**வடக்கு வீதி**



அ. முத்துலிங்கம் எழுதிய 'வடக்கு வீதி' (சிறு கதைத் தொகுப்பு)

(விலை ரூ.40.00)

**The Hindu** பத்திரிகையில் (1.12.98) வெளிவந்த விமர்சனத்தின் ஒரு பகுதி.

The author has a unique, inimitable style. He has a gestalt sense of humour that is not often seen in Tamil writers. He describes events with a leisure and a ritual and shows such passion for details that one does not find anywhere in Tamil writing. He manipulates the language that is at once arresting and capable of creating envy in other practitioners. His observations are breathtaking.

**கிடைக்குமிடங்கள்:**

மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண் 1447
4 தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை 600017 தொலைபேசி: 4342926

D. திலிப்குமார், 216.10 சு. மு மத் ரோடு, மைலாப்பூர், சென்னை 600004
தொலைபேசி: 4952217

ரமேஷ் பிரேதன்

# நேநோவை முன்வைத்து நான்லீனியரும் சாருநிவேதிதாவும்



**சா**ருநிவேதிதாவின் நேநோ என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கும் நிலையில் நான்லீனியர் என்ற கதைவடிவ உத்தி பற்றிய பேச்சு மீண்டும் ஆரம்பித்திருக்கிறது. சாருவின் நேநோ விற்கு பிரம்மராஜன் எழுதிய மதிப்புரை (நவீன விருட்சம் - 45, ஜூலை-செப்டெம்பர் 1999) மற்றும் **தினமணிக்கதிரி**ல் திரு. வல்லிக்கண்ணன் தனது பேட்டியில் நான்லீனியர் குறித்து குறிப்பிட்டதும் அதற்கு சாரு எழுதிய பதிலையும் கொண்டு நான்லீனியர் எழுத்து பற்றிய தவறான புரிதல் முறையே இங்கு இருந்து வருவது தெரிகிறது. இது நிமித்தம் நான் லீனியர் குறித்து இப்போதேனும் பேசலாம் என நினைக்கிறேன். பொதுவாக தமிழ்ச்சூழலில் என் நண்பர் சாருநிவேதிதாவுக்குச் சூட்டப்படும்/சூட்ட மறுக்கப்படும் 'எழுத்துக் கலைஞன்' என்ற பிம்பம் மீதான ஒரு சிறு ஆய்வாகவும் இதை எழுதுகிறேன்.

பொதுவாக சாருநிவேதிதாவின் கதைகள் தமிழ்ச்சூழலில் தீண்டத் தகாதனவாக ஒதுக்கப்பட்டே வருகின்றன. சாரு, உரைநடையில் பிரச்சினைப்படுத்தும் விஷயங்களுக்கு இணையான மனப்பாடுகளையும் கேள்விகளையும் கவிதைகளாக்கும் கவி விக்ரமாதித்யனுக்கு தரப்படும் முக்கியத்துவமும் மரியாதையும் சாருவுக்கு தரப்படுவதில்லை. கவி விக்ரமாதித்யனை 'கவிச்சித்தர்' எனக் கொண்டாடும் சூழலானது சாருவை 'குப்பைப் பொறுக்கி' (நானே எழுதிய கட்டுரையில் - கதைசொல்லி-5, 0° விமர்சனம்) என ஒதுக்கித் தள்ளுகிறது. இதற்குக் காரணம் என்ன என்று ஆயப் புகுந்தால் 'நம்பகத்தன்மை' (authenticity)* பற்றிய கேள்வி எழுகிறது. கவி விக்ரமாதித்யனை சமூகம் கொண்டாடுவதற்குக் காரணம் - அவருடைய நம்பகத்தன்மையும் தேடலில் உண்மையின் ஏதேனும் ஒரு பிசிரை எதிர்கொள்ள விளையும் வெறியும் ஆகும். இவை இரண்டும் இல்லாது போனதே சாருவை பொய்யன் என்று ஒதுக்குவது நேர்கிறது.

1998- குற்றாலம் பதிவுகள் கருத்தரங்கில் சாருவுடனான இலக்கியச் சந்திப்பில் சாருவின் பேச்சிற்கு எதிர்வினை ஆற்றும்போது ஜெயமோகன், சாருநிவேதிதா **தினமலரி**ல் எழுதுபவைகளை இலக்கியம் எனக்கருதி நான் தேடிப்படிக்கத் தேவையில்லை.

அவர் பெரும்பாலும் தினமலருக்குத் தீனி போட்டுக்கொண்டிருப்பதை இலக்கியமென நான் குறிப்பிட வேண்டுமென்றால் 'அவருடைய இலக்கிய முகாமைச் சார்ந்த (தினமலர்) ஆர்னிகா நாசர், எஸ். ராமசுப்ரமணியம், ஜே. டி. ரஞ்சிதா இவர்களையும் நான் இலக்கியவாதிகளாக ஏற்கவேண்டிவரும். அது என்னால் முடியாது' என்பதாகச் சொன்னார்.

சாரு நிவேதிதா, ஜனரஞ்சக மலத் துடைப்பான்களில் தான் எழுதுவது அக்மார்க் முத்திரை பெற்ற அசல் இலக்கியம் என்பதை வாசித்து நிறுவும் சாத்தியமற்று, ஏன் அதற்கான சிறு முயற்சியுமற்று தடாலடியாக சரணாகதி அடைந்தார். 'நான் **மீட்சி சிதைவு, கனையாழி** போன்ற பத்திரிகைகளில் எழுதியதைத்தான் என்னுடைய இலக்கியத் தரமான பதிவுகள்' எனச் சொல்கிறேன். குறிப்பாக 'கர்நாடக முரசும் நவீன தமிழ் இலக்கியத்தின் மீதான ஓர் அமைப்பியல் ஆய்வும்' என்ற தொகைநூலில் வந்த எனது நான்லீனியர் கதைகளையே நான் இலக்கியம் என்று குறிப்பிடுகிறேன். இப்பொழுது வெளிவந்திருக்கும் 0° நாவலையும் என் முதல் நாவலான **எக்ஸிஸ்டென்சி**

**யலிசமும் ஃபான்சி பனியனும்** நாவலையுமே இலக்கியம் என்பேன். தினமலர் மற்றும் ஜனரஞ்சிகப் பத்திரிகைகளில் நான் காசுக்காக எழுதுகிறேன். தினமலர் கொடுக்கும் 200ரூபாய் என் வாழ்க்கைக்கு அவசியமாகிறது. அது இல்லை என்றால் நான் பட்டினியிலேயே செத்திருப்பேன். என்னுடைய தினமலர் கதைகளை நீ யார் குப்பை என்று சொல்வது, அதை நானே குப்பை என்கிறேன். அந்த எழுத்துக்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை' என்று பொரிந்து தள்ளினார். அங்கு கூடியிருந்த 100 பேர்களுக்கும் சாருவின் பேச்சு ஏற்புடையதாக இருந்தது. ஆனால் நேநோ தொகுதியில் இருக்கும் கதைகளில் 80%கதைகள், அவராலேயே 'குப்பை' என ஒதுக்கப்பட்டவைகளே அடங்கியிருப்பதைப் பார்க்கமுடிகிறது. அடிப்படையில், ஒரு கலைஞன் தான் எழுதுவதற்கு சத்தியமானவனாக* இருக்கவேண்டும். நம்மாள் குப்பைகள் என ஒதுக்கும் ஜனரஞ்சகப் பத்திரிகை எழுத்தாளர்கள் அனைவருமே எந்த சூழ்நிலையிலும் தாம் எழுதுவதும் இலக்கியம்தான் என்றே வாதிட்டு வருவதை நாம் காண்கிறோம். இந்த சத்தியம் சாருவிடம் இல்லை. நான் கலைஞர்களிடம் எதிர்பார்ப்பது அவனுக்கும் அவனது எழுத்திற்குமான சத்திய ஒப்பந்தம்.* தயவுசெய்து கலைஞனுக்கும் அவன் வாழும் சமூகத்திற்குமான சத்திய ஒப்பந்தம் என்று அனர்த்தமாகப் பொருள்படுத்திக் கொள்ளவேண்டாம். அந்த சத்தியம் விக்ரமாதித்யனிடம் இருக்கிறது, சாரு விடம் இல்லை.

பிரம்மராஜன் எழுதுகிறார் (நவீனவிருட்சம் -45), 'நேநோ குறிப்பிடத்தக்க ஒரு சமீப நிகழ்வு. இதில் அடங்கி இருக்கிற கதைகளின் விஸ்தீரணம் மிகவிரிவானது. மிகச் சாதாரண கதைகளிலிருந்து மிகச் சிக்கலான நேர்த்தி மிக்க கதைகள் இதில் அடங்கி உள்ளன. இவ்வாறான சிக்கலான கதைகள், சாதாரண கதைகள், நேர்த்தி மிக்க கதைகளை சாருவின் இலக்கிய முகாமைச் சேர்ந்த ஆர்னிகா நாசர், எஸ். ராமசுப்ரமணியம், ஜே. டி. ரஞ்சிதா, 'கல்கி' ராகவன், பாலகுமாரன் என பெரும் பட்டியலாக நீளும் எழுத்தாளர் கூட்டம் இருக்கிறது - அவர்களை வலிந்து ஏற்றி பின்நவீனத்துவ எழுத்தாளர்கள் என்ற பீடத்தில் பிரம்மராஜன் ஏற்றுவாரா? என்பது என் கேள்வியாக இருக்கிறது.

இரண்டு தினமலர் கதைகளுக்கு இடையில் ஒரு மீட்சி கதை இருப்பதால் தொகுதி முழுதும் சோதனை முயற்சிகளடங்கிய கதையாகாது. தினமலர் கதைகளோடு சேர்த்து வாசிக்கையில் மீட்சி கதைகளுக்கு தனித்த எந்தவொரு வித்தியாசத்தையும் காணமுடியவில்லை. மீட்சியில் வந்ததால் மட்டுமே கலாச்சாரத்தில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திய கதையாகிவிடாது. அதேபோல தினமலரில் வந்ததால் அது குப்பையாக (இலக்கியத் தரமற்றதாக)* இருந்தே ஆகவேண்டும் என்ற குருட்டாம் போக்கான நிலைப்பாடை எடுப்பதும் அபத்தம். அப்படி ஒரு நிலைப்பாடை பிரம்மராஜன் எடுக்கவில்லை. ஆனால் நான் கேட்கவருவது சாருநிவேதிதாவுக்கு மட்டும் (பிற ஜனரஞ்சக எழுத்தாளர்களைத் தவிர்த்து) பின்





நவீன concession ஏன்? எதற்கு? என்பதுதான்.

பொதுவாக தமிழ்நாட்டில் நான்லீனியர் எழுத்தை சாருதான் அறிமுகப்படுத்தி தொடர்ந்து எழுதி வருவதாகவும் 0° நாவலே நான்லீனியர் வடிவத்தில் எழுதப்பட்டிருப்பதாகவும் அதற்கு அவரே முன்னோடியாகவும் அறியப்படுகிறது. சமீபத்தில் தினமணிக்கதிரில் வல்லிக்கண்ணனுக்கு பதில் எழுதிய சாரு 'தமிழில் நான்லீனியர் கதைகளை நானும் ஸில்வியாவும்தான் எழுதி வருகிறோம்' என குறிப்பிட்டுள்ளார். வல்லிக்கண்ணனும் மற்றும் பிறரும் நான்லீனியர் எழுத்தை ஒரு வடிவ உத்தி எனக் கொள்ளாமல் அதை டாடாயிசம், சர்ரியலிசம் என்பது போன்ற அழகியல் கவிதையியல் கோட்பாடாகவும் அதற்குப் பின் தத்துவ அடித்தளம் கொண்ட இயக்கச்சக்தி உள்ளது போலவும் கருதி வருகிறார்கள். அதனாலேயே நான் லீனியர் எழுத்துக்கள் வன்முறையானது; பைத்தியக் காரத்தனமானது; பாலியல் வக்ரமானது என முட்டாள்தனமான தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றன. மேற்படி தினமணிக்கதிரில் வல்லிக்கண்ணனுக்கான பதிலில் நான்லீனியர் எழுத்தை எழுதுபவர்களான தாங்கள் எதார்த்த எழுத்துக்களை நேசிப்பவர்களாகவும் வன்முறையும் பாலியல் வக்ரமும் போலிஸ் ஸ்டேஷனிலும் திரைப்படத்திலும் இல்லையா; அவற்றை கேட்காமல் எங்களை மட்டும் கேட்க வந்துவிட்டீர்களே என்கிற பாணியில் பதில் சொல்வதன்மூலம் வல்லிக்கண்ணன் தரப்பு கொண்டிருக்கும் நான்லீனியர் பற்றிய முட்டாள்தனமான* புரிதலையே சாருவும் கொண்டிருப்பது தெரிகிறது. ஏனென்றால் தான் எழுதும் விஷயங்களைப்பற்றியது மட்டுமே (புனிதம் உடைப்பு, யோனி கிழிப்பு) நான்லீனியர் எழுத்து என்ற தவறான பாமரத்தனமான பொதுப்புத்தியோடுதான் அவர் 0° நாவல்வரை எழுதிவருவது இதிலிருந்து புலனாகிறது.

காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதையாக சாருவுக்கும் நான்லீனியருக்கும் எப்படி உறவு வளர்ந்தது என்பது சுவாரஸ்யமான ஒரு விபத்து. எம். டி. முத்துக்குமாரசாமி தனது **ராகம்** பத்திரிகையில் ஜனவரி 1987இல் சாருவின் 'கிரிக்கெட்டை முன்வைத்து புத்திஜீவிகளுக்கு ஒரு முட்டாள் சொல்லிக்கொண்டது' என்ற கதையை வெளியிட்டார். சாரு தான் எப்போதும் எழுதுவதுபோல ஒரு கதையை எழுதியனுப்ப, அது ஒரு 'கதை'யாக மட்டுமே ராகத்தில் வெளிவந்தது. அதைப் படித்த பிரம்மராஜன், பார்த்தல்மே போன்றவர்கள் இப்படித்தான் எழுதி வருகிறார்கள். இது நான்லீனியர் எனப்படும் இலக்கிய வடிவமாகக் கொள்ளப்படுகிறது - அவ்வகையில் இது ஒரு நான் லீனியர் கதை என்ற சிறு குறிப்போடு மீட்சியில் 'நான்லீனியர் கதை'யாக ஜூலை 87இல் வெளியிட்

டார். அதிலிருந்து தமிழ்நாட்டை இந்த நான்லீனியர் ஜுரம் பிடித்தது. நிறைய எழுத்தாளர்கள் அப்படி எழுதிப் பார்த்தார்கள். என் அன்புக்குரிய தோழர் பொதியவெற்பன்கூட **பறை**யில் ஒரு அதிரடி நான்லீனியர் எழுதினார். சாரு தொடர்ந்து இரண்டொரு கதைகள் எழுதினார். ஆரம்பத்தில் நசுக்கி நசுக்கி குசு விடுவது பற்றி எழுதியவர், காலப் பரிணாமத்தில் யோனியை நார் நாராகக் கிழிக்கும் செயலில் இறங்கினார். அதுவரை நான்லீனியர் உத்தியைக் கண்டு கொள்ளாமல் இருந்தவர்கள் யோனி கிழிபடுவது கண்டதும் நான்லீனியர் என்றாலே யோனி கிழிக்கும் இலக்கிய இயக்கம் என்பதாக அர்த்தம் கொண்டனர். **சுபமங்களா** போவோர் வருவோரிடமெல்லாம் சட்டையைப் பிடித்து நிறுத்தி நான்லீனியர் பற்றி கேள்வி கேட்டது. சாருநிவேதிதா நான்லீனியருக்குக் கிடைத்த முக்கியத்துவத்தைக் கண்டு அல்லோலகல்லோலப்பட்டுப் போனார். நான்லீனியர் எழுத்தின் தந்தை என்ற (முள்) கிரீடத்தை சந்தோஷமாகக் கேட்டு வாங்கி தலையில் வைத்துக் கொண்டார். இப்போது அந்த கிரீடத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அவர் படும்பாட்டின் விளைவே 0° நாவல். இப்போது அந்த கிரீடத்தை தட்டிப் பறிக்க சாருவுக்குப் போட்டியாக ச. ராஜநாயகம் என்ற பின் நவீன நாவலாசிரியர்(?) இரண்டு நாவல்களோடு களம் இறங்கி இருக்கிறார். சாருவை விட நாடாளும் தகுதி ச. ராஜநாயகத்திற்கு அதிகப்படியாக உள்ளது. காரணம், சாருவின் **ஸீரோ டிகிரி** நாவல், 0° என்ற பிரதியாக்கக் கோட்பாட்டிற்கு எதிரான நிலையில் மையம் கொண்ட பிரதியாக அமைந்துள்ளது. (இந்த 0° நாவல் பிரதி மையம் கொண்ட எழுத்து என்பதை நிறுவி **கதைசொல்லி-5**இல் விமர்சனம் ஏற்கனவே எழுதியுள்ளேன்) மாறாக ச. ராஜநாயகத்தின் இரண்டு நாவல்களும் (காலமற்ற காலம், சில முடிவுகளும் சில தொடக்கங்களும்) மையமற்ற பிரதிகளாக அமையப் பெற்றிருப்பதை சாதாரண வாசகனாலும் அறியமுடியும். மேலும் 0° நாவல் சுயமான எழுத்து இல்லை என்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். உதாரணமாக அந்நாவலின் முதல் அத்தியாயம் (பக்கம் 10) இடாலோ கால்வினோவின் If in the winter's night a traveller என்ற நாவலின் துவக்க அத்தியாயத்தின் எழுத்து உத்தியை அப்பட்டமாக 'உல்ட்டா' செய்ததாகும். நாவலின் 4 ம் அத்தியாயம் (பக்கம் 24) காப்ரேரா இன் ஃபான்த்தே என்ற லத்தீன் அமெரிக்க நாவலாசிரியரின் Three trapped tigers என்ற நாவலில் வரும் ஒரு பகுதியின் அப்பட்டமான காப்பி. மேலும் 0° நூலில் பல உத்திகள் இவருடைய INFERNO என்ற நாவலிலிருந்து சுடப்பட்டிருக்கிறது. மேலும் நாவலில் லால்சலாம் என்ற அத்தியாயம் (பக்கம் 79) சார்ஜன்ட் கத்தூலியோ என்ற லத்தீனமெரிக்க நாவலிலிருந்து தழுவி எழுதப்பட்டது. சார்ஜன்ட் கத்தூலியோவில், ஒரு சார்ஜன்ட் தன்னிடம் சிக்கிய போராளி ஒருவனை அவனுடைய விடுதலை கீதத்தை பாடச் சொல்லி, பாடச் சொல்லி காதார அதை ரசித்து ரசித்து உதைப்பான். 0° டிகிரியில் 'ஜனகணமன' பாடச் சொல்லி உதைக்கிறான். இந்த உல்ட்டாவை சாரு என்னிடம் ஒத்துக்கொண்டார். ஆனால், தமிழ்நாட்டில் யாருக்கும் அது தெரியாது என்றார். ஆனால் நிறையப் பேருக்குத் தெரிந்துவிட்டது. ஆக சாருவினுடைய 0° நாவலுக்கு நேர்ந்த உல்ட்டா பலவீனங்கள் ச. ராஜநாயகத்தின் நாவலுக்கு இல்லை. எனவே சாருவுக்குத் தமிழ்நாடு தந்திருக்கும் 'பின் நவீன கலககக்காரன்' என்ற பட்டத்தைப் பிடுங்கி, ச. ராஜநாயகத்திற்கே தந்துவிடலாம். மேலும் சாருவின் நாவலுக்கும் ராஜநாயகத்தின் நாவல்களுக்குமான இலக்கியத் தகுதியை 'குப்பை' என்ற சொல்லால் வரையறுக்கலாம். அதிலும் சாருவின் குப்பை திருட்டுக் குப்பை. மற்றவருடையது சொந்தக் குப்பை.




கவிதை நான்லீனியர் தன்மை கொண்டது என்பது எழுத்து பற்றிய அடிப்படைச் செய்தி. நான்லீனியர் உத்தியில்லாமல் எந்த எழுத்தாளனும் எழுதியதில்லை. நவீன தமிழிலக்கியத்தில் புதுமைப்பித்தன் தொடங்கி இதற்கு உதாரணம் தரலாம். வசதிக்காக கி. ராஜநாராயணனின் **கோபல்லகிராமம்** என்ற நாவலை தமிழின் முதல் நான்லீனியர் கிளாசிக் என நிறுவ எம். ஏ. நுஃமானின் மேற்கோளை இங்கு தருகிறேன். அவர் கோபல்லகிராமத்தைப்பற்றி இப்படி எழுதுகிறார்:

> 'இதுவும் ஒரு நாவல் என்றுதான் சொல்லப்படுகிறது. ஆனால் இதுவரை எழுதப்பட்ட நாவல்கள் எதுபோலும் இது இல்லை. இதுவும் அவரது தனித்துவமான படைப்பு. இதிலே நிறைய சம்பவங்கள் வருகின்றன. ஏராளமான மனிதர்கள் வருகின்றார்கள். ஆயினும் இதிலே கதை என்று சொல்லக்கூடியதாக எதுவும் இல்லை. அதனால் கதாபாத்திரங்களும் இல்லை. ஒரு நாவலுக்கு வழக்கமான அர்த்தத்தில் கதை என்று தேவையில்லை. அறுபதுகளின் பிற்பகுதிகளில் தமிழில் தோன்றிய சில நல்ல நாவல்கள், தமிழிலும் இது சாத்தியம் என்பதை நிரூபித்துவிட்டன. என்றாலும் எல்லா நாவல்களிலுமே நிகழ்ச்சிகள் ஒரு ஒருங்கிணைவு பெற்றிருக்கும். ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளதாக ஒரு குறிப்பிட்ட திசை நோக்கியதாக இருக்கும். இதனால் பாத்திரங்களும் ஒரு உருவம் பெற்று முழுமை எய்தியிருக்கும். கோபல்ல கிராமத்தில் நாம் இத்தன்மையைக் காணமுடியாது. அந்த வகையில் இது முற்றிலும் வித்தியாசமான நாவல் எனலாம்' (பக்கம் 135, ராஜநாராயணீயம் - எம். ஏ. நுஃமான் - 1985: அன்னம், சிவகங்கை)

ஆக, இவ்வகை உத்திக்கு நான்லீனியர் என பெயரிட்டு அழைக்கும் மேற்கத்திய போக்கு அப்போது நுஃமானுக்குத் தெரிய வராததால் நான்லீனியர் என்ற சொல்லுக்கு பதிலாக முற்றிலும் வித்தியாசமான நாவல் என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். 1985இல் கோபல்லகிராமத்திற்கு நுஃமான் தந்த வாசிப்பை எல்லா தரப்பினரும் மறந்துவிட்டனர். பிரம்மராஜனும் இதைப்பற்றி அறியாமல் குருவி(சாரு) தலையில் பனங்காயை வைத்துவிட்டார். குருவி வல்லூறாகி புனிதங்களின்(?) குடலைப் பிடுங்குகிறேன் என்ற பெயரில் இலக்கியமென்று எதை எதையோ செய்கிறது. வல்லிக்கண்ணர்களும் குடல் பிடுங்குவதே நான்லீனியர் என்று எல்லோரையும் நம்ப வைத்ததோடல்லாமல் சாருநிவேதிதாவையும் நம்ப வைத்துவிட்டது மேற்படி தினமணிக்கதிரில் சாருவின் கூற்றிலிருந்து தெரிகிறது.

கோபல்லகிராமத்திற்கு அடுத்ததாக நகுலனின் **வாக்குமூலம்** என்ற பின்நவீன நாவலையே நான்லீனியர் கிளாசிக் என்று சொல்வேன். 1995இல் திருவனந்தபுரத்தில் கோணங்கியோடு நகுலனைச் சந்தித்தபோது நான்லீனியர் பற்றிய உரையாடலின்போது அவரிடம் இதைத் தெரிவித்தேன். நகுலன், நான்லீனியர் எழுத்து என்றால் என்ன என்று கிண்டலான கேள்வியோடு என்னிடம் பேச்சை ஆரம்பிக்க, வாக்குமூலத்தையே சிறந்த உதாரணமாக அவரிடம் விளக்கினேன்.

நான்லீனியர் சிறுகதைக்கு மீண்டும் கி. ராஜநாராயணனிடமிருந்து உதாரணத்தைத் தருகிறேன். நான் படித்த வகையில் சிறந்த நான்லீனியர் சிறுகதையாக அவருடைய 'பாரதமாதா' (பாலம், இதழ் 1977) என்ற கதையையே சொல்வேன்.

சௌந்தர்யா என்ற நடுத்தர வயது பெண்ணைப் பற்றி ஆரம்பிக்கும் கதையின் முதல் பத்தி, தன் இரண்டாம் பத்தியில் வேறு ஒரு சௌந்தர்யாவின் கன்னிப் பருவத்தை சொல்கிறது. மூன்றாம் பத்தியில் சௌந்தர்யாவின் பால்ய பருவம் பேசப்படுகிறது. ஆனால் இது வேறொரு சௌந்தர்யா. நான்காம் பத்தியில் நார்க் கட்டிலில் மரணத்தை எதிர்பார்த்திருக்கும் பழுத்த விதவைக் கிழவி. ஐந்தாம் பத்தியில் கதை வேறொரு தளத்திற்கு நகர்கிறது. வீட்டினுள்ளே சௌந்தர்யாதேவி தெய்வமாகத் தொங்குகிறாள். வெள்ளைக் கும்மினியானை எதிர்த்து நடந்த வீரப் போரில் மரணம் எய்திய இவர்களின் மூதாதையர்களில் ஒருவனுடைய மனைவியாய் இருந்த அவள் வீரமரணம் எய்தியவனோடு விரும்பி உடன் கட்டை ஏறிய 'பெரண்டாலு' அவள்.

கடைசி பத்தியில் ஒரு வெற்றுச் செய்தியாக ஒரு சௌந்தர்யா அஃறிணைப் பொருளாக வருகிறாள். அவள் அந்தியில் விளக்கு நாச்சியாவைப் பொருத்தியதும் கும்பிடுகிறார்களே அந்த வீட்டில் குடி கொண்டிருக்கும் தேவி சௌந்தர்யாதான் அவர்களுக்கு விளக்கு நாச்சியா. கதையின் இறுதி வரி இப்படி முடிகிறது : 'சௌந்தர்யாக்கள் அனைவரும் ஒருவளே'

இரண்டே பக்கங்களில் எழுதப்பட்டுள்ள கதையிது. ஆறு சௌந்தர்யாக்கள் இதில் வருகிறார்கள் வெவ்வேறு சூழல்களில், வெவ்வேறு அடையாளங்களில், வெவ்வேறு பருவங்களில் கலைத்துப் போடப்பட்டு. சமகாலத்தில் சௌந்தர்யாவைப் பற்றி பேசும் கதை முதல் பத்தி, தன் ஐந்தாவது பத்தியில் தம் குடியின் மூதாதைய சௌந்தர்யாவின் தெய்வ இருப்பைக் காட்டுகிறது. ஆறாவது சௌந்தர்யா அக் குடியின் ஒளிக் கடவுளாக மாறி ஒரு ஐதீகமாக (myth) மாறிவிடுகிறாள். இவர்கள் அனைவரும் ஒரே சௌந்தர்யாவாகவும் அதே நிலையில் வெவ்வேறு சௌந்தர்யாக்களாகவும் மாறி, கதை சம காலத்திலிருந்து ஐதீகம் (myth) உருவானவரையான சௌந்தர்யாக்களின் கதைகளைச் சொல்லிவிடுகிறது. இரண்டே பக்கத்தில் சொல்லப்பட்ட பெண்ணின் பல கலாச்சார சமூகப் பரிமாணங்களும்/பரிணாமங்களும் நிகழ்வின் பல அடுக்குகளும் காலத்தின் பல அடுக்குகளும் கொண்டு இந்தக் கதை அமைகிறது. மிகச் சாதாரணமான மொழியில் 'அனாஸ்ய'மாக எழுதப்பட்ட கதை. ஆனால் கதையில் ஒரு பிரமிப்பூட்டும் திட்டமிடல் இருக்கிறது. இந்த திட்டமிடலே கி. ராஜநாராயணனின் கலாஆளுமையை வெளிப்படுத்துகிறது. பிரம்மராஜன் நான்லீனியராக தமிழுக்கு அறிமுகப்படுத்திய 'கிரிக்கட்' கதையை பாரதமாதாவோடு ஒப்பிட்டால் எந்தக் கதை இலக்கியமாக, ஒரு கலா அனுபவமாக* நிகழ்கிறது என்பதை வாசகர்களின் வாசிப்புக்கே விட்டுவிடுகிறேன். மேலும் புற நிகழ்ச்சிகளை கதைசொல்லி அல்லது ஒரு பாத்திரம் என்ற மையத்தை வைத்துத் தொகுப்பது நான்லீனியர் ஆகாது. அந்த வகையில் 'கிரிக்கெட்'கதை நான்லீனியர் கதை அல்ல.




பிரம்மராஜன் நான்லீனியரென்று ஒரு பிரதியை அறிமுகப்படுத்தும்போது முன் பின் என்ன நிகழ்ந்திருக்கிறது என்ற நிதானமில்லாமல் அவசரமாக சாருவை முன்மொழிந்து விட்டார். பிரம்மராஜன் ஒரு போக்கை தன் சமகால எழுத்தாளனின் எழுத்திலிருந்து அடையாளப்படுத்தினாரென்றால் அதை உடனிருந்தவர்கள் நம் இலக்கிய மரபின் தொடர்ச்சியை நோக்கி அந்த அடையாளம் காணலை மேற்கொண்டிருக்கவேண்டும். அதை யாரும் செய்யவில்லை. செய்திருந்தால் எம். ஏ. நுஃமான் கிடைத்திருப்பார். 1985க்கும் 1987க்கும் நூற்றாண்டு இடைவெளியா என்ன? நமது பொறுப்பற்ற தன்மைதான் காரணம். அதனால்தான் நான்லீனியர் என்ற கலைவடிவம் ஒரு உளறல் இலக்கியக் கூட்டத்தை இங்கு உண்டாக்கிவிட்டது.

கோணங்கி எழுதுவது நான்லீனியர் கதைகள் தான். சாருவைப்போல கதைசொல்லத் தெரியாமல் தட்டுத் தடுமாறியதையே ஒரு உத்தியாகக் கொண்டவர் அல்ல இவர். நான்லீனியரை ஒரு micro

narrative story tellingஆக மாற்றியவர் இவர்தான். கி.ரா., நகுலனைத் தொடர்ந்து அந்த எழுத்து உத்தியை கலையாக வரைந்தெடுத்தவர் இவர் மட்டுமே. சாருநிவேதிதாவின் எழுத்து என்றைக்குமே ஒரு பின்நவீன இலக்கிய ஸ்தானத்தை* அடையாது.


இறுதியாக ஒரு தகவல்:

நேநோ தொகுதியில் ஆகச்சிறந்த கதையான 'நட்சத்திரங்களிடமிருந்து செய்தி கொண்டுவந்தவர் களும் பிணந்தின்னிகளும்' என்ற கதையின் (இது நான்லீனியர் கதை அல்ல metafiction) இணை எழுத் தாளன் (co-author) நான். சாரு என் பெயரையும் சேர்த்தே வெளியிட விரும்பினார். நான் மறுத்து விட்டேன். **முன்றில்** இதழில் வரும்போது அக்கதையின் பெரும்பகுதி ரமேஷ் பிரேதன் கூறினாள் என்று எனது மேலான பங்களிப்புகளை என் பெயரிலேயே கதைநி கழ்வில் என்னையும் ஒரு பாத்திரமாக்கி எழு தியிருந் தோம். நேநோ தொகுதியில் அக்கதையைச் சேர்க் கும்போது ரமேஷ் பிரேதன் என்ற இடங்களி லெல் லாம் ஈழச்சி என மாற்றிக் கொடுத்தேன். ஈழச்சி என் றால் என்ன என்று சாரு கேட்டார். தமிழ்→தமிழச்சி, ஈழம் →ஈழச்சி என அவளை பிரான்சிலிருக்கும் இல ங்கைத் தமிழ் அகதியாக மாற்றினேன். அந்தக் கதையை பிரம்மராஜன் போர்கேவின் கதைகளோடு ஒப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார். சரி, அவசரமில்லா மல் சாருநிவேதிதாவின் எழுத்துகள் பற்றி மீண்டும் வேறொரு சந்தர்ப்பத்தில் விவாதிக்கலாம்.

**சில குறிப்புகள்:**

1. 25 கதைகள் கொண்ட நேநோ தொகுதியில் 5 கதைகள் மட்டுமே நான்லீனியர் எனச் சொல்லப்படும் வடிவில் எழுதப்பட்டவை. மற்ற 20 கதைகளும் ஒரு மையப் பிரச்சினையை ஆதாரமாகக் கொண்டு


# காலமற்ற காலம்
## (என்றோரு நாவல்)
### ச. ராஜநாயகம்



**தராசு வெளியீடு**
14, Set Colony First Street
Ezhumpur
Chennai 600 008, India.




குடும்ப வெளி மற்றும் பொது வெளியில் நிகழும் கதைகள். இவற்றின் மைய அம்சம் பொதுவாக வறுமை, அன்பு, பாசம், சமூகக்கொடுமை என்ற புள்ளிகளில் அடங்கிவிடும் சோஷலிச எதார்த்த வாதக் கதைகளே.

சாரு **உயிர்நிழலி**ல் (மார்ச், ஏப்ரல் 1999) இப்படி எழுதுகிறார். '.... மற்றபடி திருவல்லிக்கேணி என்ற பெயருக்குப் பதிலாக latin quarters என்று போட்டு விடுவதால் அகில உலகப் பார்வை வந்துவிடாது. வசந்திராஜாவின் 'வடிகால்'- ஐயோ அம்மா.... இது தான் தமிழவன் சொல்லும் அகில உலகக் கதையா?பாலகுமாரன் கதைமாதிரி யாகவல்லவா இருக்கிறது. முதலில் இவர்கள் இலக் கியத்தைப் பயிலவேண்டும். இலக்கியத்தைப் பயிலா மல் இலக்கியம் வராது. Borges, Marquez, Llosa, Julio Cortazar என்று தீவிரமாக வாசிக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி 'வடிகால்'மாதிரி கதைதான் எழுதமுடியும்'

ஆக போர்ஹேஸையும் மார்க்வெஸையும் லோஸாவையும் படித்துவிட்ட சாரு தினமலரில் எழு துவது எப்படிப்பட்ட எழுத்து? உலகத் தரமான வையா? 'வடிகால்' என்ற கதையின் கால் ஓரம் பெறாத கதைகளைத்தான் காசுக்காக எழுதியதா கச் சொல்லி ஜெயமோகனிடம் தப்பித்துவிட்டு, பிறகு விலையுயர்ந்த தாளில் நேர்த்தியான அச்சில் வெளியிடுவதனால் உலகத்தர எழுத்தாகிவிடுமா? சாரு எந்த மூஞ்சை வைத்துக்கொண்டு வசந்திரா ஜாக்களை விமர்சிக்கிறார்? இவர் இந்தக் கடிதத் தில் குறிப்பிட்டிருக்கும் எந்த எழுத்தாளர்களையும் 50 பக்கங்களுக்கு மேல் படித்ததில்லை. அவருடன் 15 வருடப் பழக்கத்தில் எனக்குத் தெரிந்தவகையில் அவர் எந்த நூலையும் முழுமையாகப் படித்ததி ல்லை. பிரேமிடமும் என்னிடமும் கேட்டு வாங்கிய செய்திகளை ஆங்காங்கு எழுதி வருபவர். இது சாரு வின் குற்றமல்ல. தமிழ்நாட்டின் முட்டாள்தனத்தின் குற்றம்.


2. நான்லீனியர் எழுத்துமுறையின் கவிதையியல் என்பதுபற்றி: ஒரு பொருளைப்பற்றி எழுதும்போது உதாரணமாக, ஒரு 'மரக்கட்டை' என அப்பொரு ளைக் கொண்டால் அக்கட்டை மரமாக இருந்ததை யும் அம் மரத்தில் பூ இருந்ததையும் பூ காயாகி கனி யாகிச் சிதறியதையும் அதன் மீது பறவைகள் கூடு கட்டியதையும் அதன் கிளையில் ஒருவன் தூக்கில் தொங்கியதையும் அந்த ஒருவனின் அப்பா சிறுவ னாக இருந்த போது அந்த மரத்தடியில் கோலி விளையாடியதையும் இன்று மரமற்ற அந்த நிலத்தின் அடியில் இன்னும் அதன் வேர்கள் திசைகளற்று நீந்திக் கொண்டிருப்பதையும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தமரம் ஒரு விதைக்குள் இருந்ததையும்

விதையிலிருந்து முளைத்து வளர்ந்து கட்டில்களாகவும் விறகுகளாகவும் ஆனதையும் அதன் ஒரு துண்டுமட்டும் இதோ எந்த ஒரு அர்த்தமுமற்று கிடப்பதையும் ஆனால் அந்த அர்த்தமாகாத இருப்புக்குள்ளாக பல அடுக்கு நினைவுக் கூறல்களும் முக்காலப் பிரிவுகளும் கலைத்துப் போடப்பட்டுக் கிடப்பதையும் காணமுடிகிறது. ஆக இதோ கிடக்கிறதே இந்த மரக்கட்டை இது என்ன? இது எந்த இடத்தில் கிடக்கிறது? எந்தக் காலத்தில் இருக்கிறது? இதை ஒரு புள்ளியில் எப்படிப் பிடித்து அடக்குவது? என் நினைவில் மரமாக எஞ்சிய இக் கட்டை உன் நினைவில் உடைந்த ஒரு கட்டில் காலாகக் கிடக்கிறதே இது என்ன சொல்? என்ற சிந்தனைப் பயணத்தின் மூலமாக தறி கெட்டு ஓடி பிரபஞ்சத்தின் அனைத்து மர்மங்களையும் அடக்கியதாக இந்த மரக்கட்டையை காண்பதுதான் நான்லீனியர் எழுத்தின் கவிதையியல். இதை விடுத்து, தன்னைச் சுற்றி நிகழும் சம்பவங்களை தன்னை மையமாகக் கொண்டு ஒன்று திரட்டி பிசைந்து கொடுக்கும் (தினமலர், தினத்தந்தி செய்யும் வேலை) கொழுக்கட்டைகளாக சாருநிவேதிதாவின் நான்லீனியர் எனப்படும் 5 சிறுகதைகளும் இரண்டு நாவல்களும் இருக்கின்றன. ஆகவே சாருவின் எழுத்துக்கள் நான்லீனியர் எழுத்துக்கள் அல்ல (அவருடைய இரண்டு நாவல்கள்பற்றியும் அவை உருவானவிதம் பற்றியும் பேசுவது சுவாரஸ்யமானது. அது பிறகு) நான்லீனியர் கதைகளுக்கு சிறந்த உதாரணமாகக் கோணங்கியின் தற்காலக் கதைகளைத்தான் சொல்வேன். நான்லீனியர் கவிதையியலின் கூறாக நான் வரைந்து காட்டிய 'மரக்கட்டை' என்ற உருவகம் கோணங்கியின் கதைகளுக்கே பொருந்தக்கூடியது. உதாரணத்திற்கு மிகச் சமீபத்திய கதையான 'புலிக்குகை நாயனம்' கதையை நீங்களே வாசித்துக் கொள்ளுங்கள். கோணங்கியின் உரைநடை அமைப்பில் எனக்கு சலிப்பும் பேரலுப்பும் உண்டு. அவருடைய 'உப்புக்கத்தியில் மறையும் சிறுத்தைகள்' தொகுதியை வாசிக்கும்போது பக்கங்கள் புரண்டு கொண்டேயிருக்க நான் ஒரே பக்கத்தைத்தான் மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருக்கிறேனோ என்ற பிரம்மை உண்டாகிறது. அவர் வார்த்தைகளாலான படிமங்களின் சுழலுக்குள் சிக்கிக் கொண்டார். தன்னைச் சூழ்ந்த மொழியின் திரவ வெளியைக் கலக்கிக் கலக்கி ஒரு சுழலை தானே உண்டாக்கிக் கொண்டவர். அதன் மையத்தில் சுழலும் அவர் மூழ்கி இறப்பதற்குள் யாரேனும் அவரை இழுத்துக் கரையில் போடல் வேண்டும் அல்லது அவரே அந்த நீர்ச் சுவர்களை உடைத்துக்கொண்டு வெளிவரவேண்டும். அப்படி வந்தால் அவரால் தமிழுக்கு யோகம். ஆக, நான் பெரிதும் கோணங்கியிடம் சிலாகிப்பது அவருடைய கவிதையியலே என்பது விளங்கியிருக்கும் என நினைக்கிறேன்.

சாருநிவேதிதா குறிப்பிட்டுச் சொல்வதுபோல ஸில்வியாவின் எழுத்துக்களில் சில, நான்லீனியர் எழுத்துக்கள் அல்ல. தனது உருவாக்கத்தைத் தானே புலப்படுத்தி தனது புனைவுத் தடத்தைத் தானே சுட்டிச் செல்வதன் மூலம் ஸில்வியாவின் (நான்லீனியர் கதைகள் எனச் சொல்லப்படும் சில) கதைகள் metafiction வகைமையைச் சார்ந்தது. ரமேஷ் : பிரேம் எழுத்துக்களும் ஜெயமோகனின் நாவல்களும் (ரப்பர் தவிர்த்து) metafiction எழுத்துக்களே ஆகும்.

3. இக்கட்டுரையில் ஆங்காங்கே '*' குறியிட்ட சொற்றொடர்கள், இலக்கியம்பற்றி தமிழில் பேசும்போது பொதுவாக அனைவரும் பயன்படுத்தும் சொற்றொடர்கள் இவை என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது. நேநோ வெளியீட்டுவிழாவில் சாருவின் எழுத்துக்களை பிரேம் விமர்சிக்கும்போது இலக்கியம் ஆவதற்கான முதற் கட்ட எழுத்துக்கள் என்று குறிப்பிட்டதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது வசந்திராஜாவின் வடிகால் கதைக்கு சாரு சொன்னது போல என்று புரிந்து கொள்ளுங்கள்.

நான் ஏற்கனவே சொன்னதுபோல 0° நாவல் ஒரு மையம் கொண்டமைந்த பிரதியாகும். தன் தடத்தைத் தானே அழித்தபடி செல்வதுதான் metafiction என்பதன் கதையியலாகும் ஆக 0° ஒரு metafiction நாவலல்ல. அது போன்ற ஒரு தோற்றப் போலி. எனவே அதை ஒரு பின்நவீனத்துவ நாவல் என்று சொல்வது அறிவீனமாகும். ●


புது உலகம் எமை நோக்கி

(புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள்)

சக்தி வெளியீடு, நோர்வே

பிரதிகட்கு:

- **Sakthi,** Boks 99 Oppsal, 0619 Oslo 6, Norway
- **Ranjini,** Ziegelhof Strasse 8, 8730 Uznach, Switzerland
  Tel: 055 / 280 17 78
- **Exil,** 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France.
  e-mail: EXILFR@aol.com

# கடிதங்கள்

இதழ்கள் பல்வேறு துறை சார்ந்தவையாகவும் சிறந்த கவிதை, கதை, ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன. பின் நவீனத்துவம் என்ற தொடரைப் பல கட்டுரைகளிற் படித்துள்ளேன். ஆனால், அது பற்றிய விபரங்களை வாசிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. Vol.II இதழ்-5இல், அதன் வரலாற்றையும் வெவ்வேறு கருத்துநிலைகளையும் விரிவாக ஆராயும் கட்டுரை ஒன்று வெளியாகி இருந்ததால் பின்நவீனத்துவம் பற்றிச் சிறப்பாக அறிய முடிந்தது.

பெண்ணியம் பற்றி இன்று அதிகம் ஆர்வம் பிறந்துள்ளது. உயிர்நிழலில் இதுபற்றிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதழ்-5இல் வெளியான இரு சிறு கதைகள் பெண்ணியச் சார்புடையவையாகத் தோன்றுகின்றன.



'யுத்தத்தைத் தின்போம்' நூல் விமர்சனத்தில் சம்பந்தர் அப்பரையும் யாழ். அரசனான சங்கிலியனையும் 'மதவெறி பிடித்த கோர முகத்தினர்' என்று அருந்ததி கூறியுள்ளார். சமண நோக்கிலும் போர்த்துக்கேய - கத்தோலிக்க நோக்கிலும் அவர் கூறியுள்ளார் என்று தோன்றுகிறது. தமிழர்கள் அந்நியர் செயல்களை, பிற மதத்தினரின் செயல்களையும் நடுநிலையில் நின்று ஆராயவேண்டும் அல்லது சுய மத, சுய அரசியல் நோக்கில் ஆராயவேண்டும். இது அவரது தவறு அல்ல. வரலாற்றாசிரியர் சிலருடைய கருத்தையே அவர் வழிமொழிந்து கூறியுள்ளார். சான்றுகளை மீளாய்வு செய்து கட்டுரைகளை எழுதுவது நன்று. இதுபற்றிப் பின்னர் எழுதுவேன். குடும்பங்களைச் சார்ந்த 600, 700 பேரைக் கொல்லச் சங்கிலியன் 5000 படையினருடன் மன்னாருக்குப் போயிருப்பானா....?

**பி. நடராசன்**
நாயன்மார்கட்டு, இலங்கை

◆◆◆◆

புகலிடத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளை இலக்கிய ஆர்வலர்கள் பலரும் இங்கு தேடிப் படிக்கிறார்கள். அண்மையில் யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழாவினை ஒட்டிய கண்காட்சியில் தமிழ்த்துறையினர் புலம்பெயர் படைப்பு நூல்களையும் சஞ்சிகைகளையும் சேகரித்து வைத்திருந்தனர். பலரும் வியப்புடனும் ஆர்வத்துடனும் அவற்றினைப் பார்வையிட்டதுடன், புலம்பெயர் விடயங்களை தேடிப்படிக்கும் ஆர்வமும் தமிழ்த்துறை மாணவர்கள் மத்தியில் இன்று எழுந்துள்ளது.

தொடர்ந்தும் தரமான படைப்புக்களை உயிர்நிழல் தரவேண்டும் என எதிர்பார்க்கிறோம். பின்நவீனத்துவம் பற்றிய கட்டுரைகள் இலகுவான மொழிநடையில் வாசித்து விளங்கக்கூடியதாக இருந்தது. 'ஒரு பீனிக்ஸ் பறவையின் புகல்வாழ் குறிப்புகள்' பகுதியை தொடர்ந்து எழுதினால் பயனுள்ளதாக அமையும் என நினைக்கிறேன். புகலிட இலக்கியங்கள் எல்லாவற்றையும் பார்க்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிட்டாதபடியால் நூல் மதிப்பீடுகளைத் தொடர்ந்தும் தகுதியானவர்களிடம் இருந்து பெற்றுப் பிரசுரியுங்கள்.

தனிநபர் விமர்சனங்களையும் வக்கிரங்களையும் தவிர்த்து நடுநிலையுடன் செயற்பட உயிர்நிழல் தயங்கக்கூடாது. அப்பொழுதுதான் உயிர்நிழலின் வளர்ச்சி எங்களையும் வளர்க்கும்.

**எஸ். குணேஸ்வரன்**
தொண்டமானாறு, இலங்கை


◆◆◆◆

எனது தந்தை நீர்கொழும்பூர் முத்துலிங்கம் 09.01.2000 அன்று காலமானார். இந்தச் செய்தியை நீங்கள் பத்திரிகை வாயிலாக அறியப் பெற்றிருப்பீர்கள். உயிர்நிழலுக்கு அவர் எழுதிய 'நீங்கள் யார்? என்ற கவிதை அடங்கிய இதழ் தபால்காரன் மூலமாக வந்த நாளில் அவரது உடல்தான் வீட்டில் இருந்தது. அவரது கடைசி நாட்களில் அவர் விரும்பிப் படித்த இதழ்கள் உயிர்நிழலும், எக்ஸில் ஆகியவையே.

அப்பா எங்களுக்கு விட்டுப் போன பெறுமதியான சொத்து புத்தகங்கள்தான். அப்பா விட்டுப்போன இலக்கிய சிந்தனை இப்போது எங்களுடன் வாழ்கிறது.

தயவுசெய்து உயிர்நிழல் பிரதி அனுப்புவதை நிறுத்திவிடாதீர்கள். எங்களது சிந்தனை தேங்கி விடுவதை நாம் விரும்பவில்லை. நன்றி.

**முத்துலிங்கம் ஜெயகாந்தன்**
நீர்கொழும்பு, இலங்கை




EXIL, 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France. e-mail: EXILFR@aol.com N° d'enreg.: 13023204